# புதிய ஜனநாயகம்

செப். 2009
ரூ. 7.00




## வறட்சியின் பிடியில் விவசாயிகள்
## கொண்டாட்டத்தில் பெருமுதலாளிகள்





## மணிப்பூர்:

# தலைவிரித்தாடும் இராணுவ-போலீசு பயங்கரவாதம்

படுகொலை! பட்டப் பகலில் பலர் முன்னிலையில் பகிரங்கமாக அப்பாவி இளைஞர், போலீசு அதிரடிப் படையால் சுடப்பட்டு படுகொலை. இந்தப் பயங்கரவாதம் அமெரிக்க வல்லரசால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஈராக்கில் நடக்கவில்லை. 'ஜனநாயக'க் குடியரசாகச் சித்தரிக்கப்படும் இந்தியாவின் மணிப்பூர் மாநிலத் தலைநகர் இம்பாலின் கடைவீதியில், சட்டமன்றத்துக்கு மிக அருகில் இந்த 'மோதல்' படுகொலை நடந்துள்ளது.

மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த சோங்காம் சஞ்சித், 27 வயதான இளைஞர். இவர், மணிப்பூரின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக ஆயுதமேந்திப் போராடி வரும் மக்கள் விடுதலைப் படை என்ற இயக்கத்தில் சிறிது காலம் செயல்பட்டார். 2000-வது ஆண்டில் இவர் கைது செய்யப்பட்டு, குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாததால் விடுதலை செய்யப்பட்டார். 2006-ஆம் ஆண்டில் உடல் நலம் குன்றியதால் மக்கள் விடுதலைப் படை இயக்கத்திலிருந்து விலகினார். இருப்பினும், தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 2007-ஆம் ஆண்டில் இவர் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையிலடைக்கப்பட்டார். சிறையிலிருந்து விடுதலையான பின்னர், இம்பால் நகரில் தமது பெற்றோருடன் வசித்து வந்த இவர், ஒரு தனியார் மருத்துவமனையில் உதவியாளராகப் பணியாற்றி வந்தார்.

கடந்த ஜூலை 23-ஆம் தேதி முற்பகலில், இம்பால் நகரின் க்வைரம்பாண்ட் கெய்தல் கடைவீதி பகுதியில், மணிப்பூர் போலீசு கமாண்டோ படை தீவிரவாதிகளைப் பிடிப்பது என்ற பெயரில் தேடுதல் வேட்டை நடத்தியது. அப்போது அப்பகுதியில் சோங்காம் சஞ்சித் இருந்துள்ளார்.

ஏற்கெனவே, தீவிரவாதி என்று குற்றம் சாட்டப்பட்டு கைதாகி, விடுதலையானவர் என்பதால் அறிமுகம் காரணமாக இத்தேடுதல் வேட்டைக்கு உதவுமாறு அவரிடம் போலீசு கமாண்டோ படையினர் பேசிக் கொண்டிருக்கின்றனர். அவரும் பதற்றமின்றி இயல்பாக அப்படையினரிடம் பேசிக் கொண்டிருக்கிறார். அவரிடம் ஆயுதங்கள் இருந்ததற்கான அறிகுறியும் தென்படவில்லை.

திடீரென சஞ்சித்தை வளைத்துப் பிடித்த கமாண்டோ படையினர், அவரை அருகிலிருந்த மைமு என்ற மருந்துக் கடைக்குள் இழுத்துச் செல்கின்றனர். நிராயுதபாணியான சஞ்சித்தை ஆயுதமேந்திய கமாண்டோ படையினர் சூழ்ந்து கொள்கின்றனர். அடுத்த சில வினாடிகள் துப்பாக்கிக் குண்டுகள் வெடிக்கும் ஓசை எங்கும் எதிரொலிக்கிறது.

சஞ்சித்தின் சடலம் வெளியே இழுத்து வரப்பட்டு ஒரு வாகனத்தில் ஏற்றப்பட்டது. சஞ்சித்தின் உடல் அருகே சுட்டுக் கொல்லப்பட்ட ரபினாதேவி என்ற கர்ப்பிணிப் பெண்ணின் உடலும் கிடத்தப்பட்டது. சஞ்சித்திடம் தீவிரவாதிகள் பற்றி விசாரணை செய்ய முற்பட்டபோது, அவர் 9 எம்எம் கைத்துப்பாக்கியால் சுட முயற்சித்ததாகவும், தப்பியோட முயற்சித்த அவரைப் பிடிக்க தற்காப்புக்காகச் சுட்டதில் அவர் கொல்லப்பட்டதாகவும், இம்மோதலில் குறுக்கே வந்த ரபினாதேவி என்ற பெண்ணும் குண்டடிபட்டு மாண்டதாகவும் இன்னும் சிலர் படுகாயமடைந்ததாகவும் கமாண்டோ படையினர் கதை கட்டினர்.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 24

**இதழ் 11**

செப்டம்பர் 2009

**உள்நாடு**
**தனிஇதழ்: ரூ. 7.00**
**ஆண்டுசந்தா: ரூ. 90.00**

*வெளிநாடுகள்*
(வான் அஞ்சலில்)
**ஆண்டு சந்தா: US$ 20**



*படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்*

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
*தொலைபேசி:* 94446 32561


## கோஷ்டிச் சண்டை முற்றுகிறது! பா.ஜ.க. கனவு நொறுங்குகிறது!

ஒழுங்கும் கட்டுப்பாடும் கொள்கைபிடிப்பும் அர்ப்பணிப்பும் நிறைந்த கட்சி என்றெல்லாம் சித்தரிக்கப்பட்ட பாரதிய ஜனதா கட்சியில், இன்று கோஷ்டிச் சண்டைகள் புழுத்து நாறுகின்றன. நாடாளுமன்றத் தேர்தல் தோல்வியைப் பரிசீலிக்கத் தொடங்கியதிலிருந்தே அக்கட்சிக்குள் கோஷ்டிச் சண்டைகளால் அடுத்தடுத்து பூகம்பம் வெடித்துக் கொண்டிருக்கிறது. எவ்வளவுதான் மாயத்தோற்றத்தை ஏற்படுத்தினாலும், பொய்யான நம்பிக்கைகளை ஊட்டினாலும் தீவிரமாகிவிட்ட கோஷ்டிச் சண்டைகளால் அக்கட்சி பலவீனமடைவதைத் தடுக்கவே முடியாது என்கிற நிலைமை நெருங்கி விட்டது.

பா.ஜ.க.வின் தேர்தல் தோல்விக்குப் பழிபோடப்பட்டு உத்தர்கண்ட் முதல்வர் கந்தூரி அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து அருண் ஜேட்லிக்கு நாடாளுமன்ற மேலவையின் பா.ஜ.க. தலைவர் பதவியும், சுஷ்மா சுவராஜுக்கு நாடாளுமன்ற பா.ஜ.க. துணைத் தலைவர் பதவியும் தரக்கூடாது என்று யஷ்வந்த் சின்ஹா, அருண் ஷோரி, ஜஸ்வந்த் சிங் முதலான பழம் பெருச்சாளிகளின் அதிருப்தி கோஷ்டி கலகக்கொடி தூக்கியது. அதன் பிறகு, ராஜஸ்தான் மாநிலத்தில் பா.ஜ.க.வுக்கு ஏற்பட்ட தோல்விக்குப் பொறுப்பேற்று, எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகுமாறு வசுந்தராராஜே சிந்தியாவுக்கு பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங் உத்தரவிட்டார். இதை ஏற்கமறுத்து வசுந்தரா கோஷ்டி வெளிப்படையாகவே போர்க்கொடி தூக்கியது.

இந்நிலையில், பாகிஸ்தானின் தேசத் தந்தையாகச் சித்தரிக்கப்படும் முகமது அலி ஜின்னாவைப் புகழ்ந்து புத்தகம் எழுதியதை வைத்து, பா.ஜ.க. வின் மூத்த தலைவர்களுள் ஒருவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான ஜஸ்வந்த் சிங் அதிரடியாக அக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். யஷ்வந்த் சின்ஹா, அருண் ஷோரி ஆகிய இதர மூத்த தலைவர்கள் ஜஸ்வந்த் சிங்குக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர்.

இதற்கிடையே, 1999-ஆம் ஆண்டு இந்திய விமானம் ஆப்கானிஸ்தானிலுள்ள கந்தகாருக்குக் கடத்தப்பட்டு, பயணிகள் மீட்கப்பட்ட விவகாரத்தில், உண்மையில் என்ன நடந்தது என்பதை அத்வானி மறைக்கிறார் என்று வாஜ்பாயியின் வலதுகரமான முன்னாள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பிரஜேஷ் மிஸ்ரா பேட்டியளித்தார். முதலில் கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங்குக்கு எதிராகக் கிளம்பிய அதிருப்தியாளர்களின் கலகம், இப்போது அத்வானிக்கு எதிராகத் திரும்பியுள்ளது. அத்வானி ஒரு புளுகுணி என்று வெளிப்படையாகக் கேலி செய்தும், அவர் கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்ததால்தான் உட்கட்சிப் பூசல் பெருகியதாகவும் அதிருப்தியாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். தேர்தல் தோல்வியால் சோர்வடைந்துள்ள கட்சி அணிகளிடம் புது நம்பிக்கையூட்ட செப்டம்பரில் நாடு முழுவதும் ரதயாத்திரை நடத்தப் போவதாக அறிவித்த அத்வானி, தீவிரமாகிவிட்ட உட்கட்சிப் பூசலால் அத்திட்டத்தையே ரத்து செய்துவிட்டார்.

இந்துவெறி பாசிச பயங்கரவாதத் தலைமையகமான ஆர்.எஸ்.எஸ். வேறு; அரசியல் கட்சியான பா.ஜ.க.வேறு என்று ஆடிய நாடகமெல்லாம் முடிவுக்கு வந்து, இப்போது ஆர்.எஸ்.எஸ்.வெளிப்படையாகவே பா.ஜ.க. கோஷ்டிச் சண்டையில் தலையிட்டு சமரசப்படுத்தக் கிளம்பியுள்ளது. பா.ஜ.க.வின் உயிர்நாடியே ஆர்.எஸ்.எஸ். இடம் இருப்பதால், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் நடத்திய கட்டப்பஞ்சாயத்தின்படி, அத்வானி எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொள்ள, அப்பொறுப்பில் சுஷ்மா சுவராஜ் நியமிக்கப்படுவார் என்றும்; இவ்வாண்டின் இறுதியில் பா.ஜ.க. தலைவர் பதவிக் காலம் முடிந்து ராஜ்நாத் சிங் விலகியபின், அருண்ஜேட்லி அப்பொறுப்பை ஏற்பார் என்றும் செய்திகள் வந்துள்ளன. இச்சமரசத் தீர்வை-இந்துவெறி பாசிசத் தலைமையகத்தின் முடிவை ஏற்று கட்டுப்பாட்டுடன் நடப்பதாக பா.ஜ.க. தலைவர்கள் பசப்பலாம்; ஆனால், பதவிக்கும் அதிகாரத்துக்குமான கோஷ்டிச் சண்டை அக்கட்சிக்குள் ஓயப்போவதில்லை. அத்வானியின் பிரதமர் நாற்காலிக் கனவும் நனவாகப் போவதில்லை.

பாரதிய ஜனதா கட்சி தேர்தல் தோல்விகளாலும், உட்கட்சிப் பூசல்களாலும் பலவீனப்பட்டுக் கிடக்கும் நிலையில், அக்கட்சியை அரசியல் அரங்கிலிருந்தே விரட்டியடிக்க இதுவே சரியான, பொருத்தமான தருணம். இந்துவெறி பாசிசத்தை சித்தாந்தமாகக் கொண்டுள்ள அக்கட்சியின் நாட்டுவிரோத-மக்கள்விரோத பொய்கள், சதிகள், கொலைகள், துரோகங்கள் மற்றும் பாசிச பயங்கரவாத வெறியாட்டங்களை மக்களிடம் அம்பலப்படுத்தவும், பார்ப்பன இந்துவெறி பாசிசம் காலூன்றவே முடியாதபடி முடமாக்கி அழிக்கவும் இதுவே சரியான தருணம்.

# வறட்சியின் பிடியில் விவசாயிகள் கொண்டாட்டத்தில் முதலாளிகள்

**வறட்சியைச் சாக்கிட்டு, உணவு உற்பத்தியில் தற்சார்பை அழிக்கும் மறுகாலனியத் தாக்குதலை காங்கிரசு அரசு மேலும் தீவிரப்படுத்தி வருகிறது.**

ஆந்திர மாநிலம், நிஜாமாபாத் மாவட்டத்தின் கந்தாரி மண்டல் கிராமத்தின் ஒதுக்குப்புறமாக ஓங்கி நிற்கிறது, அந்தப் புளியமரம். அக்கிராம மக்கள் அந்த மரத்தை வெறுக்கிறார்கள். பலர் அந்த மரத்தின் அருகில் செல்லவே அஞ்சுகிறார்கள். அக்கிராமத்தைச் சேர்ந்த ராதா என்ற கர்ப்பிணிப் பெண் தினமும் அந்த மரத்தின் அருகே சென்று கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார். அந்த மரத்தில்தான் 25 வயதான இளைஞரும் ராதாவின் கணவருமான கோவர்த்தன நேனாவத், கடந்த ஆகஸ்ட் 6-ஆம் நாளன்று தூக்கிலிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

லம்பாடி பழங்குடியினத்தைச் சேர்ந்த கோவர்த்தன், கந்து வட்டிக்குக் கடன் வாங்கி மழையை நம்பி பயிர் வைத்தார். ஆனால், இம்முறை தென்மேற்குப் பருவமழை பொய்த்துப் போய் வறட்சி தாக்கி, நீரின்றி நிலங்கள் வெடித்து, பயிர்கள் கருகிப் போயின. ஏற்கெனவே அவரது பெற்றோர் வாங்கிய கடன் ஒருபுறமிருக்க, தற்போதைய கடனும் சேர்ந்து ரூ. 2 இலட்சத்துக்கும் மேலாகி, அதைத் திருப்பிச் செலுத்த வழி தெரியாததாலும், கந்து வட்டிக்காரர்களின் உருட்டல் மிரட்டல்களாலும் விரக்தியடைந்த கோவர்த்தன் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போயுள்ளார்.

கோவர்த்தன் மட்டுமா? பருவமழை பொய்த்துப் போய் வறட்சி தாக்கியதாலும், வாங்கிய கடனை அடைக்க வழிதெரியாததாலும் கடந்த ஜூலை-ஆகஸ்டு மாதங்களில் மட்டும், ஆந்திராவில் 60-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போயுள்ளனர். வழக்கமாக இத்தகைய விவசாயிகளின் தற்கொலைகளை மூடி மறைத்து வரும் ஆந்திர அர , வேறு வழியில்லாமல் 21 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக மட்டும் ஒப்புக் கொண்டுள்ளது.

காடும் கழனியும் வயலும் வரப்பும் ஏரியும் குளங்களும் வறட்சியால் பாளம்பாளமாக வெடித்துக் கிடக்கும் நிலையில், 10 மாநிலங்களின் 246 மாவட்டங்களில் கடும் வறட்சி நிலவுவதாக அரசே அறிவித்துள்ள நிலையில், ''விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்யும் பேச்சுக்கே இடமில்லை'' என்று கண்டிப்புடன் கூறுகிறார், மைய அரசின் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி.

ஆந்திர விவசாயிகளைப் போலவே, மகாராஷ்டிரா மாநிலம், விதர்பா பிராந்தியத்தின் யாவத்மல் மாவட்ட விவசாயிகள் வறட்சியால் தத்தளிக்கிறார்கள். நீரில்லை; மேய்ச்சல் நிலங்கள் காய்ந்து கிடப்பதால் கால்நடைகளுக்குப் போதிய தீவனம் இல்லை. பெருமுதலாளித்துவக் கம்பெனிகள் தீவனங்களின் விலையை, வறட்சியைச் சாக்காக வைத்துப் பல மடங்கு உயர்த்தி விட்டன. அநியாய விலைக்குத் தீவனம் வாங்கி மாடுகளைப் பராமரிக்கவும் விவசாயிகளுக்கு வசதியில்லை. தீவனத்தைக் குறைத்தால் மாடுகள் கறக்கும் பாலும் குறைகிறது. ஏற்கெனவே விவசாய நெருக்கடியாலும் கடன் சுமையாலும் திக்குமுக்காடும் விவசாயிகள் இப்போது கறவை மாடுகளையே மனதைக் கல்லாக்கிக் கொண்டு அடிமாட்டு விலைக்கு விற்கின்றனர். ரூ. 15,000-க்கு விலை போகக் கூடிய ஜெர்சி கறவை மாடு, இப்போது ரூ. 8,000-க்கு விற்கப்படுகிறது. இதேபோல, காளை மாடுகள் ரூ. 4,000-க்கும் குறைவாக விற்கப்படுகின்றன. யாவத்மல் மாவட்டம் மட்டுமின்றி, விதர்பா பிராந்தியம் முழுவதும் இந்த அவலம் நீடிக்கிறது.

**பருவமழை தவறிப் பயிர்கள் கருகிப் போனதால் பூச்சி மருந்தைக் குடித்துத் தற்கொலை செய்து கொண்ட 26 வயதான கோந்தம் சீனிவாசலின் (ஆந்திர மாநிலம், சடபள்ளி கிராமம்) சடலத்தைக் கண்டு கதறியழும் உறவினர்கள்.**



இதேபோல, வறட்சியில் சிக்கியுள்ள ஆந்திராவின் அனந்தபூர், கர்னூல், நலகொண்டா, மகபூப் நகர் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளும் மாடுகளை வைத்துப் பராமரிக்க முடியாமல் அவற்றை விற்று வருகின்றனர். இதனால், தனது பிழைப்பே போய்விட்டதாகக் கண்ணீர் வடிக்கிறார், கர்னூல் மாவட்ட ஹரேகல் கிராமத்தைச் சேர்ந்த திக்காசாமி என்ற மாடு மேய்ப்பவர். இவர் இக்கிராமம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள மாடுகளை அன்றாடம் மேய்ச்சலுக்குக் கொண்டு சென்று பின்னர் அவற்றைக் குளிப்பாட்டி, மாலையில் உரிமை

யாளரிடம் ஒப்படைப்பார். 4,5 பேரை வேலைக்கு வைத்துக் கொண்டு, ஒரு மாட்டுக்கு ரூ. 60 வீதம் 250 மாடுகளை மேய்ப்பதன் மூலம் மாதம் ரூ. 15,000 வரை சம்பாதித்து வந்த அவர், இன்று அதில் பாதியளவு கூட சம்பாதிக்க முடியவில்லை. ''வறட்சியின் காரண மாக தீவனங்களின் விலை பலமடங்கு உயர்ந்து விட்டதால், செலவைக் குறைக்க பல விவசாயி கள் மாடுகளை மேய்ச்சலுக்கு விடுவதில்லை. இன்னும் சிலர் மாடுகளைப் பராமரிக்க முடி யாமல் பாதிவிலைக்கு விற்று வருகின்றனர். இதனால் என் பிழைப்பு போய் விட்டது. கிராமங்கள் களையிழந்து விட்டன'' என்று வேதனைப்படுகிறார், திக்காசாமி.



தங்களின் கால்நடைச் செல்வங்களை பந்தேர் கவ்டா சந்தையில் விற்க வந்துள்ள மகாராஷ்டிரா- யாவத்மல் பகுதி விவசாயிகள்.

வறட்சியால் கால்நடைச் செல்வங்களை இழந்து விவசாயிகள் தவித்த போதிலும், இப்பேரழிவைத் தடுக்கவோ நிவாரண உதவி கள் செய்யவோ மைய அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, வறட் சியை சாக்காக வைத்து, உள்நாட்டு-வெளிநாட்டு விவசாயப் பெருந்தொழில் நிறுவனங்கள் மேலும் கொள்ளையடிப்பதற் கும், விவசாயத்தை விட்டே விவசாயிகளை வெளியேற்றுவ தற்குமான வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறது.

கடந்த ஜூனில் ''இன்னும் 30 மாதங்களுக்குத் தேவையான உணவு தானியங்கள் கையிருப்பில் உள்ளன'' என்று அறிவித் தார் மைய அரசின் உணவு அமைச்சரான சரத்பவார். வறட்சி தீவிரமாகியதும், ''இன்னும் 13 மாதங்களுக்கான உணவு தானி யங்கள்தான் கையிருப்பில் உள்ளன. அவசியமானால் வெளி நாடுகளிலிருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய் வோம்'' என்று ஜூலையில் அறிவிக்கிறார். ஒரே மாதத்தில் உணவு தானியங்களின் கையிருப்பு திடீரெனக் குறைந்ததன் மர்மம் என்ன? வறட்சியைக் காரணம் காட்டி, உணவு தானி யங்களை இறக்குமதி செய்வதன் மூலம், விவசாயப் பெருந் தொழில் நிறுவனங்கள் கொழுத்த ஆதாயமடைய வேண்டும் என்பதைத் தவிர இதில் எந்த மர்மமும் இல்லை.

விவசாயிகள் கால்நடைகளை விற்கத் தொடங்கி விட்டதால், தனது மாடு மேய்க்கும் தொழில் பாதிப்படைந்துவிட்டதாகக் குறிப்பிடும் திக்காசாமி.



உலகெங்கும் உணவு தானிய உற்பத்தி பெருகிய போதி லும், கடந்த 2,3 ஆண்டுகளாக உணவு தானியப் பற்றாக்குறை யும் விலையேற்றமும் நீடிக்கிறது. கடந்த ஆண்டில் 2 கோடியே 30 லட்சம் டன் அளவுக்கு அபரிமிதமாக உற்பத்தி செய்ததற் காக உணவு அமைச்சர் சரத்பவார் இந்திய விவசாயிகளைப் பாராட்டியுள்ளார். உற்பத்தி பெருகியிருந்தாலும், இந்தியாவில் விலைவாசி குறையவில்லை; உணவு தானியப் பற்றாக்குறை யும் நீடிக்கிறது. இதற்குக் காரணம், உணவு தானியங்களைப் பதுக்கி வைத்து இலாப வேட்டையாடும் ஆன்லைன் வர்த்தகம் எனப்படும் முன்பேர வர்த்தகம்தான். நாளொன்றுக்குப் பல்லா யிரம்கோடி மதிப்பில் நடக்கும் இத்தீவட்டிக் கொள்ளையைத் தடை செய்ய மறுக்கின்றனர், இந்திய ஆட்சியாளர்கள்.

இதுதவிர, பன்னாட்டு-உள்நாட்டு விவசாயப் பெருந் தொழில் நிறுவனங்களின் கொள்ளை இலாபத்திற்காக, உணவு உற்பத்தியில் தற்சார்பை அழிக்கும் மறுகாலனியாதிக்கக் கொள் கைகள் உலகவங்கி - உலக வர்த்தகக் கழக உத்தரவுப்படி ஏழை நாடுகளில் திணிக்கப்பட்டு வருகின்றன. இதை விசுவாசமாகச் செயல்படுத்தி வரும் ஆட்சியாளர்கள், உலக வங்கியின் ஆலோசனைப்படி மிக எளிய தீர்வாக, பற்றாக்குறையை ஈடுசெய்வது என்ற பெயரில் எல்லா உணவு தானியங்களையும் தாராள இறக்குமதி செய்து வருகின்றனர். இதனால் உணவு தானிய உற்பத்தி மேலும் குறைவதும், அதைக் காட்டி மீண்டும் இறக்குமதி தொடர்வதும் தற்சார்பு அழிவதும், விவசாயமும் விவசாயிகளும் போண்டி யாவதும்தான் நடந்து வருகிறது.

1996-இல் சமையல் எண்ணெய் உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெற்ற நாடாக இருந்தது. அடுத்து வந்த சில ஆண்டுகளில் உள்நாட்டு எண்ணெய் வித்துகள் உற்பத்தி குறைந்தது. எண்ணெய் வித்துகள் உற்பத்தி செய்யும் விவசா யத்துக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்காத அரசு, உற்பத்திக் குறைவை சாக் காகப் பயன்படுத்திக் கொண்டு சமையல் எண்ணெய் இறக்குமதிக்குத் தாராள அனுமதி கொடுத்தது. சமையல் எண்ணெய் உற்பத்தியைக் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செய்து வரும் கார்கில், மாண்சான்டோ முதலான பன்னாட்டு ஏக போக நிறுவனங்கள் இதன் மூலம் கொழுத்த ஆதாயமடைந்தன.

ஆண்டுகள் பலவாகியும் எண்ணெய் வித்துகள் உற்பத்தி செய்யும் விவசா யத்தை அரசு தொடர்ந்து புறக்கணித்ததால், நாடெங்கும் எண்ணெய் வித்துகள் உற்பத்தியாகும் விவசாய நிலப்பரப்பு குறைந்து கொண்டே போனது. சமை யல் எண்ணெய் தட்டுப்பாடும் விலையேற்றமும் தொடர்ந்தது. இதைக் களை யும் நடவடிக்கையாக, மீண்டும் இறக்குமதியைத் தாராளப்படுத்தியது அரசு. கடைசியில், இன்று இந்திய நாடு, உலக அளவில் அதிகமாக சமையல்

எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடாக மாறி விட்டது. கடந்த ஆண்டை விட பாமா யில் 32 சதவீதமும் சோயா எண்ணெய் 73 சதவீதமும் அதிகமாக இறக்குமதி செய்வ தென அரசு முடிவு செய்துள்ளதை, விவ சாய வர்த்தகத்தில் ஈடு பட்டுள்ள உள்நாட்டு - வெளிநாட்டு நிறுவ னங்கள் கோலாகலத்து டன் வரவேற்றுள்ளன.



கரும்புக்கான ஆதார விலையை உயர்த்தித் தரக்கோரி, தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் மற்றும் தேசியக் கூட்டுறவு சர்க்கரை ஆலை விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகள் கடலூரில் நடத்திய ஆர்ப்பாட்டம் (கோப்புப் படம்).

எண்ணெய் வித்துகள் விவசாயத்துக்கு நேர்ந்த கதிதான் கரும்பு விவசாயத்துக்கும் ஏற்படப் போகிறது. கரும்புக்குக் கட்டுபடியாகும் விலையை அரசு கொடுக்க மறுப்பதாலும், உற்பத்திச் செலவுகள் அதிகரித்துவிட்டதாலும் விவசாயிகளில் பலர் கரும்பு விவசாயத்தையே கைவிட்டு விட்டனர். இதனால் நாடு தழுவிய அளவில் 2006-07-இல் 51.5 லட்சம் ஹெக்டேராக இருந்த கரும்பு பயிரிடும் நிலப்பரப்பு, 2008-09-இல் 44.08 லட்சம் ஹெக்டேராகக் குறைந்து விட்டது. தமிழகத்தில் 2006-07-இல் 3.91 லட்சம் ஹெக்டேராக இருந்த கரும்பு விவசாய நிலப்பரப்பு 2008-09-இல் 3.23 லட்சம் ஹெக்டேராக குறைந்து விட்டது. 2006-07 நிதியாண்டில் 284 லட்சம் டன்களாக இருந்த சர்க்கரை உற்பத்தி 2008-09-இல் 147 லட்சம் டன்களாக நாடு தழுவிய அளவில் வீழ்ச்சியடைந்து விட்டது. ஆனால், தேவையோ 240 லட்சம் டன்களாக உள்ளது.

பற்றாக்குறையை ஈடுகட்ட கரும்புக்கு கட்டுபடியாகும் விலை கொடுத்து கரும்பு விவசாயத்துக்கு ஊக்கமும் ஆதரவும் அளிக்க முன்வராத அரசு, வெளிநாடுகளிலிருந்து அதிக விலைக்கு 25 லட்சம் டன் கச்சா சர்க்கரையையும் 10 லட்சம் டன் சுத்திகரிக்கப்படாத சர்க்கரையையும் இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளது. கரும்பு உற்பத்தி குறைந்து விட்டதால், சர்க்கரை ஆலைகள் பாதிக்கப்படாமலிருக்க, இறக்குமதியாகும் கச்சா சர்க்கரையைச் சுத்திகரித்து உள்நாட்டில் விற்பனை செய்யலாம் என்று அரசு அறிவித்துள்ளது.

ஆனால், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கச்சா சர்க்கரையைச் சுத்திகரிக்க அனுமதி அளிக்கப்படவில்லை. இதனால் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பாதிக்கப்படும். கரும்பு உற்பத்தி குறைந்துள்ளதால், சர்க்கரை ஆலைகளில் பகாஸ் உற்பத்தி குறைந்து, அந்த ஆலைகள் பகாஸ் மூலம் தயாரிக்கும் மின்சார அளவும் குறைந்து விடும். தும்பை விட்டு வாலைப் பிடித்தவன் கதையாக, பகாஸ் குறைவை ஈடுகட்ட நிலக்கரியை வழங்க மைய அரசு உத்தரவிட்டுள்ளது. நிலக்கரி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை எந்த விலைக்கு வேண்டுமானாலும் வெளிச் சந்தையில் விற்றுக் கொள்ள அரசு தாராள அனுமதி அளித்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகளால் சர்க்கரை ஆலை முதலாளிகளைக் காப்பாற்றலாமே தவிர, கரும்பு விவசாயத்தைக் காப்பாற்ற முடியாது.

எண்ணெய் வித்துகள், கரும்பு எனத் தொடங்கி இன்று பருப்பு, அரிசி, கோதுமை என அனைத்துவகை உணவு தானியங்களும் தாராளமாக இறக்குமதி செய்யப்படுகின்றன. ஐ.டி.சி. மான்சான்டோ, கோத்ரெஜ், கார்கில், நெஸ்லே, டாடா, ரிலையன்ஸ் முதலான விவசாயப் பெருந்தொழில் நிறுவனங்கள் தான் இதன் மூலம் கொழுத்த ஆதாயமடைந்துள்ளன. விவசாயிகளோ ஓட்டாண்டிகளாகி வருகிறார்கள்.

நொந்த மாட்டை காக்கைகள் கொத்துவது போல, வறட்சியால் துவண்டு போயுள்ள விவசாயிகளைப் பார்த்து, தண்ணீரை வரைமுறையின்றி விவசாயத்துக்குப் பயன்படுத்தியதால்தான் மழை பொய்த்த நிலையில் வறட்சி தீவிரமாகி விட்டது என்று விவசாயிகள் மீதே பழிபோடுகிறது, அரசு. விவசாயத்துக்கு நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறும், நீர் அதிகம் தேவைப்படாத சூரியகாந்தி, கற்றாழை முதலான மாற்றுப் பயிர்களைப் பயிரிடுமாறும் உபதேசிக்கிறது. இதன்மூலம் மீண்டும் உணவு தானிய உற்பத்தியைக் கைவிடுமாறு விவசாயிகளை நிர்ப்பந்திக்கிறது. பெருமுதலாளிகள் - ஏகாதிபத்தியவாதிகளின் நலனுக்காக பெருநகரங்களில் சாலைகள்-மேம்பாலங்கள் முதலான அடிக்கட்டுமானத் திட்டங்களுக்குப் பல்லாயிரம் கோடிகளை வாரியிறைக்கும் அரசு, விவசாயத்துக்கான அடிக்கட்டுமானத் திட்டங்களை அறவே புறக்கணித்து வருகிறது. நீர் நிலைகளைப் பாதுகாப்பது என்ற பெயரில் மீண்டும் ஏகாதிபத்திய நிறுவனங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டி, நீர் நிலைகளை அழிப்பதையே தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

''உணவு உற்பத்தியைக் குறை! உணவு மானியங்களைக் குறை!'' என்று உத்தரவிடுகிறது உலக வங்கி. இதையே வேறு வார்த்தைகளில் ''நெல், கோதுமைக்கான கொள்முதல் விலையை உயர்த்த முடியாது. பட்ஜெட் பற்றாக்குறையால் வறட்சி நிவாரணம் தர இயலாது. மேலும் இந்த நிவாரணங்கள் விவசாயிகளிடம் போய் சேராமல் ஊழல் அரசியல்வாதிகளும் இடைத்தரகர்களும் விழுங்கி வருகிறார்கள்'' என்று கூறுகின்றனர், ஆட்சியாளர்கள்.

தொடரும் இத்தகைய மறுகாலனியத் தாக்குதலாலும் விவசாயப் பெருந்தொழில் நிறுவனங்களின் சூறையாடலாலும் விவசாயமும் விவசாயிகளும் நாசமாக்கப்பட்டு வருகிறார்கள். வறட்சியானது இப்போக்கை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது. தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு அமைப்பின் ஆய்வுகளின்படி, நாட்டின் 40%-க்கும் மேலான விவசாயிகள், பிழைக்க வேறு தொழில் கிடைத்தால் விவசாயத்தை விட்டு வெளியேறவே விரும்புகிறார்கள்.

விவசாய நாடான இந்தியா, உணவுக்காகக் கையேந்தி நிற்கும் அவலத்தையும் விவசாயப் பேரழிவையும் எதிர் கொள்ள அனுமதிக்கப் போகிறோமா? அல்லது மறுகாலனியத் தாக்குதலை முறியடிக்க அணிதிரளப் போகிறோமா? நாட்டின் மீதும் விவசாயிகள் மீதும் அக்கறை கொண்டுள்ள ஒவ்வொருவரையும் உலுக்கும் கேள்வி இது.

● பாலன்

# நீதியின் வறட்சியும் பாயும் நிதியும்

**விவசாயத்தைப் புறக்கணித்துவரும் ஆட்சியாளர்கள், உள்நாட்டு-வெளிநாட்டு முதலாளிகளின் பகற்கொள்ளைக்கு வரிப்பணத்தை வாரியிறைப்பதை பிரபல பத்திரிகையாளரான பி.சாய்நாத் அம்பலப்படுத்திக் காட்டுகிறார்.**

ஆகஸ்ட் மாதம் தனித்தன்மை வாய்ந்தது என்பது உண்மை தான். கடந்த ஜூலை மட்டும் என்னவாம்? உலகிலேயே மிக மலிவான கார் நமக்கு கிடைத்தது, ஜூலை மாதத்தில்தான். வரலாற்றிலே முன்னெப்போதும் இல்லாத விலைக்கு துவரம் பருப்பு உயர்ந்ததும் அதே ஜூலையில்தான். இது ஒன்றும் சொடுக்குப் போடும் கணத்தில் நடந்துவிடவில்லைதான். 2004 தேர்தல் முடிந்தபோது துவரம் பருப்பின் விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 34 தான். அதுவே, 2009 தேர்தலுக்கு முன் ரூபாய் 54. தேர்தலுக்குப் பின் அது, ரூபாய் 62 ஆகி, இப்போதோ ரூபாய் 90-ஐயும் தாண்டி, மூன்றிலக்கத்தைத் தொட்டுவிடத் துடிக்கிறது.

மாண்டேக் சிங் அலுவாலியாவின் ''கஷ்ட காலத்தைக் கடந்து கரையேறிவிட்டோம்'' என்ற சொல்லாடலும் ஜூலை மாதக் கூத்தில் கலந்திருந்தது (இவ்வாறு அவர் சொல்லிவைப் பது முதல்முறையல்ல; ஜூனிலும் இப்படித் தான் சொன்னார். ஏன், அதற்கு முன்பும் சொல் லியிருக்கலாம்). இதையெல்லாம் சொன்னவர், நமக்குக் கஷ்டகாலம் எப்போதிலிருந்து தொடங்கியது என்பதை உரைத்திடாததால், கரையேறித் தப்பித்ததை அறிந்து பாராட்ட நம் மால் இயலவில்லை.

''உள்ளபடியே, நாம் மோசமான நிலை மையை எதிர்நோக்கி உள்ளோம்'' என்று பிரத மர் மன்மோகன் சிங்கும், வேளாண்துறை அமைச்சர் சரத்பவாரும் கோடிட்டுக் காட்டு கிறார்கள். மோசமான நிலைமை என இவர்கள் குறிப்பிடுவது பன்றிக் காய்ச்சலை அல்ல. இவ் வாண்டு குறுவை சாகுபடி தேறாது என்று இரு வருமே முடிவுக்கு வந்துவிட்டார்கள். எனவே, வறட்சியின் காரணமாக உணவுப் பொருட் களின் விலை இன்னும் உயரும்; அதற்கு தயா ராகிக் கொள்ளுங்கள் என்று நமக்கு அறிவுரை கூறுகிறார்கள். வறட்சியால் 177 மாவட்டங்கள் பாதிக்கப்பட் டுள்ளன என்று இப்போது கூறுகிறார்கள். சம்பா சாகுபடியை இன்னும் திறமையாக திட்டமிட்டுச் செய்ய வேண்டும் என்று இப்போது இவர்கள் கதறுவதன் மூலம், குறுவை சாகுபடியை சுத்தமாகக் கைகழுவி விட்டார்கள் என்பது வெட்ட வெளிச்ச மாகத் தெரிகிறது. ஓரளவு மழை பெய்ய வாய்ப்புள்ள இடங் களில், விளைச்சல் பற்றாக்குறையை ஈடு செய்யும் வகையில் உணவு தானியங்களைப் பயிரிடுவதை அதிகப்படுத்த, அரசாங் கத்துக்கு குறுவைச் சாகுபடியில் மீதமுள்ள இரண்டு மாத அவகாசம் இருந்தது. ஆனால், பருவ மழை மேலாண்மைக் கான எந்த முன்முயற்சியும் எடுக்கப்படவில்லை.

இப்போது கூட சில உருப்படியான நடவடிக்கைகளை மேற் கொள்வதன் மூலம் வரவிருக்கும் மோசமான நிலையை எதிர் கொள்ளலாம். ஊரக வளர்ச்சித் துறை உருப்படியானதொரு நட வடிக்கையை மேற்கொண்டது. பாசனக் குளங்கள் போன்ற சிறிய - ஆனால், ஆதாரமான வளங்களை விவசாயிகளின் நிலங்களி லேயே உருவாக்குவதற்கு தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலம் வழிவகை செய்துள்ளது. ''வயலுக்கு ஒரு குட்டை'' என்பதுதான் எந்தவொரு அரசாங்கத்தினுடைய இலக்காகவும் இருக்க வேண்டும். (இது சம்பா சாகுபடிக்கு பெரி யளவில் உதவிகரமாக இருக்கும். மேலும், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மீது சில விவசாயிகளுக்கு இருக்கும் கோபத்தைத் தணிக்கவும் உதவும்). தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தைப் பரந்த அளவில் விரிவு படுத்தினால், அது உணவுப் பொருள் விலையேற்றத்தைச் சமாளிக்க இயலாமல் தத்தளிக்கும், வேலையில்லாமல் தவிக்கும் இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவுவதாக அமையும். குடும்பத்திற்கு 100 நாள் வேலை என்ற கேடான உச்ச வரம்பைத் தூக்கி வீசவேண்டிய தேவையையும் இது ஏற்படுத்திவிடும். வறட்சிக்கு எதிரான நடவடிக்கைகளை



**வறட்சியால் கருகிப்போனப் பயிர்களைக் கண்டு கலங்கிப் போய்விட்ட விவசாயத் தம்பதியினர்.**

'போர்க்கால அடிப்படையில்' மேற்கொள்ளச் சொல்லி பிரதம மந்திரி அறைகூவியுள்ள இக்கணம்தான், இதனைச் செயல் படுத்த சரியான தருணமாகும்.

வறட்சிதான் விலைவாசி ஏற்றத்துக்குக் காரணம் எனும் எச்சரிக்கையே மோசடியானது. வறட்சியும், விவசாயம் பொய்த்துப் போவதும் விலைவாசியை மேலும் உயர்த்தும் என்பது என்னவோ உண்மைதான். ஆனால், விலைவாசியோ வறட்சிக்கு ரொம்ப காலத்து முன்பிருந்தே, 2004 தேர்தல் முடிந்த காலத்திலிருந்து, கடந்த ஐந்து வருடங்களாக சளைக் காமல் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. ஓரளவு பருவ மழை பெய்த 2004-2008-க்கு இடைப்பட்ட ஆண்டு களை எடுத்துக் கொள்வோம். இந்த காலகட்டத்தில் உணவு உற்பத்தியில் ''சாதனை படைத்ததாக''க் கூட சில ஆண்டுகளில் நாம் அறிவித்தோம். ஆனால், உணவுப் பொருட்களின் விலையைப் பொறுத்தளவில் அரிசி 46 சதவீதமும், கோதுமை 62 சதவீதமும், கோதுமை மாவு 55 சதவீதமும், உப்பு 42



**நசிவடைந்து போன விவசாயத்தையோ, கிராமப்புற பொருளாதாரத்தையோ தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மீட்டெடுத்துவிடுமா?**

சதவீதமும் உயர்ந்தன. மேற்கண்ட பொருட்களின் விலை மார்ச் 2008-இல், சராசரியாக 40 சதவீதத்திற்கும் மேல் உயர்ந்து இருந்தது. பிறகு, 2009 தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு அவை மீண்டும் உயர்ந்தன. கடந்த மூன்று மாதங்களிலோ அவற்றின் விலைகள் மிகக் கடுமையாக உயர்ந்துவிட்டன.

தானியங்களின் விலை சகட்டுமேனிக்கு உயர்வதற்கும் வறட்சிக்கும் பெரியளவில் தொடர்பு இல்லை என்பது வேளாண் அமைச்சருக்குப் புலப்பட்டுவிட்டதாகவே தெரிகிறது. ''இது போன்ற விலைவாசி உயர்வுக்கு, தேவைக்கும் வினியோகத்திற்குமான இடைவெளி மட்டுமே காரணம் என்பது ஆதாரமற்றது'' என அவர் கண்டறிகிறார். பிறகு, அவரே ''கள்ளச் சந்தையும், பதுக்கலும்''தான் இதற்கு காரணம் என்பதைச் சரியாக கண்டுபிடிக்கிறார். ஆயினும்,விவசாய விளைபொருட்களின் மீதான முன்பேர வர்த்தகம் குறித்து மௌனம் சாதிக்கிறார். முன்பேர வர்த்தகத்தில் நிலவும் ஊக வணிகம் உணவுப் பொருட்களின் விலையை பாதித்ததற்கு, ''எந்த ஆதாரமும் இல்லை'' என்று பல மூத்த அமைச்சர்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறார்கள். (2009-ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகள் மே மாதத்தில் அறிவிக்கப்படுவதற்கு முன்பே கோதுமையின் மீது முன்பேர வர்த்தகம் செய்வதற்கான தடையை நீக்கிவிட்டனர். மேலும், மற்ற பொருட்களின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையையும் எதிர்த்து வருகின்றனர்).

நெருக்கடி நிலைக்கு(1975-க்கு) முந்தைய காலகட்டத்தைத் தவிர்த்து விட்டு பார்த்தால், நமது நாட்டிலேயே 2004-க்குப் பிறகான விலைவாசி உயர்வுதான் வேறெந்த காலத்தையும் விட அதிகபட்சமானதாக இருக்கிறது. ஊடகங்களைப் பொறுத்தவரையோ, அம்பானி சகோதரர்கள் எரிவாயுவுக்காக அடித்துக் கொண்டதும், அது நாடாளுமன்றத்தில் கிளப்பும் அரசியல் புழுதியும்தான் ஜூலை மாதத்தின் சுவாரசியமான விசயங்களாக இருந்தன. இந்தப் பெருந்தொழில் முதலாளித்துவக் கோமான்கள் போடுகின்ற குடுமிப்பிடி சண்டையில் அரசாங்கமே மண்ணைக் கவ்விவிடும் நிலையில் உள்ளது. மேலும், விமானக் கட்டணங்களை விடவா கோதுமை மாவின் விலை சுவாரசியமானதாக இருந்துவிடப் போகிறது? (விமானக் கட்டணங்களின் விலை கடந்த சில வருடங்களாகவே கவனத்தை ஈர்க்கும் வகையில் குறைந்து வந்தன). உணவுப் பொருட்களின் விலை உயர்ந்திருக்கலாம்; ஆனால் விமானக் கட்டணம் குறைந்துவிட்டதே, அதுதானே முக்கியம்?

மொத்தத்தில், விமான எரிபொருள் விலையை முறைப்படுத்தப் பொறுப்பேற்றுக் கொள்வதுதான் முதன்மையானதாகிவிட்டது. பொதுமக்களின் பணத்திலிருந்து தம்மை மீட்டுத்தரக் கோரி வேலை நிறுத்தம் செய்யப் போவதாக தனியார் விமான முதலாளிகள் மிரட்டும் பொழுது, ஐயோ பாவம், அரசாங்கம் என்ன செய்யும்? இக்கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இவர்கள் தொழில் செய்வதற்கான செலவீனங்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யும் என்று தெரிகிறது. இந்த தனியார் விமான முதலாளிகளில் சிலர், கடந்த வருடம் கோடிக்கணக்கான ரூபாயை வரிவிலக்காகப் பெற்ற ஐ.பி.எல். கிரிக்கெட்டு கேளிக்கையுடன் தொடர்புடையவர்கள். மகாராஷ்டிரா அரசு ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் மீது கேளிக்கை வரியை ரத்து செய்த நிலையில், மும்பையில் எக்கச்சக்கமான போட்டிகளை நடத்தி கோடிக்கணக்கான ரூபாய் பொதுமக்களின் பணத்தை வரிச்சலுகையாக இந்தப் பெருமுதலாளிகள் வாரிச் சுருட்டிக் கொண்டனர்.

பெரும் புள்ளிகளுக்குப் பணத்துக்கு என்றைக்கும் பஞ்சம் வந்ததில்லை. ஒரு எடுத்துக்காட்டுக்கு பட்ஜெட்டையும், ''மைய வரிவிதிப்பில் ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பையும்'' ஒப்பிட்டுப் பார்க்கலாம். பெருந்தொழில் முதலாளித்துவ நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் வருவாயில் 2008-09-இல் ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு ரூபாய் 68,914 கோடிகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. (http://indiabudget.nic.in/ub2009&10/statrevfor/annex12.pdf). இந்த வருவாய் இழப்புடன் ஒப்பிடும் போது கோடிக்கணக்கில் ஏழ்மையில் வாடும் மனிதர்களுக்கான தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கு, 2009-10-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகையோ வெறும் ரூபாய் 39 ஆயிரம் கோடிகள்தான்.

2008-ஆம் ஆண்டு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க கடன் தள்ளுபடி நினைவில் உள்ளதா? அப்போது அதனை ''முன்யோசனையற்ற நிதி மேலாண்மை'' என்று பத்திரிகைகள் தலையங்கம் எழுதிக் கதறியதெல்லாம் நினைவில் உள்ளதா? பல இலட்சம் விவசாயிகளுக்கு, வாராது வந்த மாமணியான அந்தக் கடன் தள்ளுபடி அதிகபட்சம்

**உணவுப் பொருட்களின் விலை உயர்ந்திருக்கலாம்; ஆனால், விமானக் கட்டணம் குறைந்துவிட்டதே. அதுதான் மன்மோகன் சிங்கிற்கு முக்கியம்.**

ரூபாய் 70,000 கோடியை தொடும் என்று சொல்லப்பட்டது. ஆனால், இதே நேரத்தில் கடந்த இரு நிதிநிலை அறிக்கைகளில் மட்டும் ரூபாய் 1,30,000 கோடி, நேரடி வரிச் சலுகைகளாக பொதுப்பணத்தைச் சூறையாடும் ஒரு சிறு கும்பலாக உள்ள பெருந்தொழில் முதலாளிகளின் மந்தைக்கு வழங்கப் பட்டது. இது குறித்து ஊடகங்கள் மூச்சுக் கூட விடவில்லை. இதுவே இப்படியென்றால், பெருந்தொழில் பூதாகர நிறுவனங்களுக்கு 1991-லிருந்து மொத்தமாக எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கும் என்பதை கற்பனை செய்து பார்த்தால், அது பல டிரில்லியன்கள் வரும் (ஒரு டிரில்லியன் = ஒரு இலட்சம் கோடிகள்).




கடந்த இரண்டு வருடங்களில் சராசரியாக நாளொன்றுக்கு ரூபாய் 700 கோடி வீதம் இம்முதலாளித்துவக் கும்பலுக்குத் தீனி போட்டுள்ளோம்.

இதுதவிர, மறைமுக வரிச் சலுகைகளின் மூலம் இந்தப் பெருந்தொழில் முதலாளித்துவக் கும்பல் ஏற்படுத்தியிருக்கும் வருவாய் இழப்பைக் கணக்கிடுவதாகக் கற்பனை செய்து பார்த்தால், அதன் அளவு மிக மிக அதிகமானதாகவும், இப்பெருந்தொழில் நிறுவனங்களின் கல்லாப் பெட்டியை வீங்கிப் பெருக்க வைப்பதாகவும் இருப்பது தெரியவரும். ஏனெனில், இது போன்ற வரிச் சலுகைகளின் பலன் நுகர்வோருக்கு செல்வதை மிக அரிதாகவே உற்பத்தியாளர்கள் அனுமதிக்கிறார்கள். அது ஒருபுறமிருக்கட்டும். நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளதை மட்டுமே எடுத்துக் கொண்டு பார்ப்போம் (பட்ஜெட் இணைப்பு 12, பட்டியல் 12, பக்கம் 58). நேரடி வரிகளின் மீதான சலுகைகள் மூலம் 2007-08-இல் ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூபாய் 62, 199 கோடி.. தீர்வை வரிச் சலுகையின் மூலம் இழப்பு ரூபாய் 87,468 கோடி.. சுங்க வரியின் மூலம் ரூபாய் 1,53,593 கோடி.. ஆக மொத்தம், ரூபாய் 3,03,260 கோடி ரூபாய் வருவாய் இழப்பு. ஏற்றுமதி வரவை இதிலிருந்து கழித்து விட்டால் கூட, இது ரூபாய் 2 லட்சம் கோடிக்கு மேல் போகிறது. இதுவே 2008-09-இல் ரூபாய் 3 லட்சம் கோடியைத் தாண்டுகிறது. இதுகூட குறைத்துக் காட்டப்பட்ட உத்தேச மதிப்பீடுதான். பெருந்தொழில் முதலாளித்துவக் கும்பலுக்குக் கொடுக்கப்படும் பிற எல்லாவகையான மானியங்கள், விலை குறைப்புக்கள், இதர இலவசங்கள் போன்றவையெல்லாம் இங்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனினும், இந்தத் தொகை மிக அதிகமே.

சுருக்கமாகச் சொன்னால், ''முன்யோசனையற்ற நிதி மேலாண்மை'' என்று விமர்சிக்கப்பட்ட விவசாயக் கடன் தள்ளுபடிக்குக் கொடுக்கப்பட்டதைவிட 7 மடங்குக்கும் அதிகமாக, இரண்டே வருடங்களில் சலுகைகள் என்ற பெயரில் இம்முதலாளித்துவக் கும்பல் விழுங்கியுள்ளது. சராசரியாக நாளொன்றுக்கு கிட்டத்தட்ட ரூபாய் 700 கோடி வீதம் அந்த இரண்டு வருடங்களில் இம்முதலாளித்துவக் கும்பலுக்கு தீனி போட்டுள்ளோம் என்பதுதான் உண்மை. இப்படி 1991-லிருந்து இதுவரை எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள் (அந்தோ! அதனைக் கணக்கிட பூஜ்ஜியங்கள் போதாதே!). ஆனால், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை விரிவாக்கவோ, அனைவருக்கும் உணவுப் பொருட்களுக்கான பொது விநியோகத்தை நீட்டிக்கவோ, கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு அதிகமாக செலவிடவோ கேட்டால், பணம் இல்லையாம். ஆனால், பெருந்தொழில் முதலாளித்துவ நிறுவனங்களுக்கு ஒரு மணி நேரத்துக்கு ஏறத்தாழ 30 கோடி ரூபாய் வீதம் சலுகையாக அள்ளித் தருவதற்கு மட்டும் போதுமான பணம் இருக்கிறதாம்.

உலக முதலாளித்துவம், பொருளாதார மந்தத்தையும் வரப்போகும் அழிவையும் கண்டு விழிபிதுங்கும் போது, இந்த வருடம் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில், இந்தியப் பெருமுதலாளித்துவக் கும்பல் மட்டும் தமது நிகர லாபத்தை அதிகப்படுத்த முடிந்துள்ளது என்றால், அதற்கு காரணம் உள்ளது. பொதுமக்களின் பணத்தை வெறியோடு தின்று கொழுத்ததன் விளைவுதான் அது. இதே காலாண்டில், தொழிலாளர் அமைச்சகம் வெளியிட்டுள்ள மேலோட்டமானதொரு மதிப்பீட்டின் படியே, அமைப்பு சார்ந்த தொழிற்துறையில் 1.7 லட்சம் வேலையிழப்புகள் ஏற்பட்டுள்ளன. செப்டம்பர் முதல் ஏப்ரல் வரை ஏற்றுமதித் துறையில் மட்டும் 15 லட்சம் வேலையிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இப்படிப்பட்ட சூழலில்தான் வறட்சி வந்துள்ளது. இதுவரை இவர்கள் உருவாக்கி வந்துள்ள எல்லா பேரழிவுகளுக்கும் இதுதான் காரணமெனப் பழிபோட வறட்சி பொருத்தமான சாக்காகக் கிடைத்திருக்கிறது. வறட்சியைக் காரணம் காட்டியே இன்னும் விரிவாக இந்த நாசகர அழிவு வேலைகளைச் செய்வார்கள். வேளாண் வருவாய்க்கு மிகப் பெரிய சரிவு காத்திருக்கிறது. அரசாங்கம் போர்க் கால அடிப்படையில் செயல்பட விரும்பினால், அது தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை மிகத் தீவிரமாக விரிவுபடுத்துவதைச் செய்ய வேண்டும் (இன்றைய நிலையில், இதுதான் ஆந்திராவின் அனந்தபூர் மாவட்டங்கள் போன்ற பகுதிகளைச் சேர்ந்த வறுமையில் தவிக்கும் மக்களுக்கு இருக்கும் ஒரே போக்கிடம்).

''வயலுக்கு ஒரு குட்டை'', என்பது போன்ற பல திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம். விவசாயக் கடனைத் திருப்பிக் கொடுக்கும் தவணைக் கால அளவை மாற்றிச் சீரமைக்கலாம். பருவ மழை மேலாண்மை குறித்த சிந்தனைகளைக் கருத்தில் கொள்ளலாம். வறட்சி தலைகாட்டுவதற்கு முன்னரே, வரலாறு காணாத மோசமான விலை உயர்வை உருவாக்கிய முன்பேர வர்த்தகம் தொடர்புடைய ஊக வணிகத்தைக் கட்டுப்படுத்தலாம். பொது விநியோக முறையை அனைவருக்குமானதாக அறிவிக்கலாம். இதற்கெல்லாம் ஆகும் செலவை ஈடுகட்ட, பெருந்தொழில் முதலாளித்துவக் கும்பல்கள் நமது நாட்டில் வரைமுறையின்றி இலவசமாகத் தின்று கொழுப்பதிலிருந்து ஒரு சிறு அளவைக் குறைத்தாலே போதும்.

● பி. சாய்நாத்

***(நன்றி: தி இந்து, ஆகஸ்ட் 15, 2009).***

## பஞ்சாப்:

# பண்ணையடிமைத்தனத்திற்கு எதிராக தாழ்த்தப்பட்டோரின் கலகம்

பஞ்சாப் மாநிலத்தின் மால்வா பகுதியில் அமைந்துள்ள மான்ஸா, சங்க்ரூர், பதிந்தா ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 35 கிராமங்களில் ''நிலம் கொடு! வேலை கொடு!'' என்ற கோரிக்கையை முன்வைத்து, போராட்டங்கள் அடுத்தடுத்து அலைஅலையாக எழுந்து வருகின்றன. சீக்கிய மதத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலிகள் நடத்திவரும் இப்போராட்டங்களைக் கண்டு, சீக்கிய-ஜாட் சாதியைச் சேர்ந்த நிலப்பிரபுக்களும், அவர்களை நத்திப் பிழைக்கும் அகாலிதள், காங்கிரசு, பா.ஜ.க. ஓட்டுப் பொறுக்கிக் கும்பலும் கொஞ்சம் அரண்டுதான் போயுள்ளன.

பஞ்சாப் மாநில அரசும், நிலப்பிரபுக்களும் தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகளின் இக்கோரிக்கையை, தீவிரவாதமாகச் சித்தரிக்க முயன்று வருகின்றனர். பஞ்சாப் மாநில அரசின் நிலச் சீர்திருத்தச் சட்டங்களைப் புரட்டிப் பார்த்தாலே, ஆளும் கும்பலின் இக்குற்றச்சாட்டு பேடித்தனமான அவதூறு என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

பஞ்சாப் கிராமங்கள் பொது நில ஒழுங்குமுறைச் சட்டம், கிராமப்புற பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமான நிலத்தில், மூன்றில் ஒரு பகுதியை விவசாயக் கூலிகளுக்கு வேளாண் நடவடிக்கைகளுக்காகக் குத்தகைக்கு விட வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. இச்சட்டத்தின் மாற்றொரு பிரிவு கிராமப்புற பஞ்சாயத்து நிலங்களில் இருந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறது.

இதுவொருபுறமிருக்க, 1997-ஆம் ஆண்டு பஞ்சாப் மாநில சட்டசபைத் தேர்தலில் வென்ற காங்கிரசு கட்சி, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் 0.03 ஏக்கர் நிலம், கிராமப்புற பஞ்சாயத்து நிலங்களில் இருந்து ஒதுக்கிக் கொடுக்கப்படும் என வாக்குறுதி அளித்தது. காங்கிரசுக்குப் பின் ஆட்சிக்கு வந்த அகாலிதள் - பா.ஜ.க. கூட்டணியும் இந்த வாக்குறுதியை ஏற்றுக் கொண்டது; மேலும், நிலத்தின் அளவை 0.06 ஏக்கராக உயர்த்தப் போவதாக மூன்று கட்சிகளுமே அறிவித்தன.

1961-இல் போடப்பட்ட நிலச்சீர்திருத்தச் சட்டமும், 1997 முதல் ஓட்டுக்கட்சிகள் கொடுத்து வரும் வாக்குறுதிகளும் வெறும் ஏட்டுச் சுரைக்காயாகத்தான் இருந்து வருகின்றன. அதே சமயம், ஜாட் சாதியைச் சேர்ந்த நிலப்பிரபுக்களும், பணக்கார விவசாயிகளும் கிராமப்புற பஞ்சாயத்து நிலங்களை நேரடியாகவும், பினாமிகள் மூலமாகவும் ஆக்கிரமித்துக் கொண்டு அனுபவித்து வருகின்றனர். நிலப்பிரபுக்களின் இந்தச் சட்ட விரோத ஆக்கிரமிப்பை அகற்றுவதோடு, பஞ்சாயத்து நிலங்களில் தங்களுக்கு உரிய சட்டபூர்வமான பங்கை வழங்க வேண்டும் எனக் கோரிதான் தாழ்த்தப்பட்ட மக்கள் கடந்த சில ஆண்டுகளாகவே போராடி வருகின்றனர்.

மான்ஸா மாவட்டத்திலுள்ள தலேர் சிங்வாலா என்ற கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலிகள், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ஆம் தேதி (பாட்டாளி வர்க்க ஆசான் தோழர் லெனின் பிறந்த நாளில்) நிலம் கேட்டுப் போராடியதோடு, அக்கிராம பஞ்சாயத்துக்குச் சொந்தமான 22 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தித் தங்களுக்குள் பிரித்துக் கொண்டனர். அதன் பிறகு ஓடிவந்த அதிகாரிகள், கிராமப் பஞ்சாயத்துக்களுக்கான தேர்தல்கள் முடிந்த பிறகு நடவடிக்கை எடுப்பதாகக் கூறித் தாழ்த்தப்பட்ட மக்களை ஆறுதல்படுத்தினர்.

சமரசப் பேச்சுவார்த்தை நடந்து ஒரு வருடம் கழிந்த பிறகும் நடவடிக்கை எடுக்காமல் மாநில அரசு மெத்தனமாக இருந்து வந்ததால், கடந்த மே 1-ஆம் தேதி தொழிலாளர் தினத்தன்று, மான்ஸா மாவட்டத்திலுள்ள கியாலா கிராமத்தில் மீண்டும் போராட்டம் வெடித்தது. அப்போராட்டம் கியாலா கிராமத்தோடு மட்டும் சுருங்கிப் போய் நின்றுவிடாமல், மான்ஸா மாவட்டத்தில் 26 கிராமங்களுக்கும்; சங்க்ரூர் மாவட்டத்தில் ஏழு கிராமங்களுக்கும்; பதிந்தா மாவட்டத்தில் இரண்டு கிராமங்களுக்கும் பரவியது. போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயக் கூலித் தொழிலாளர்கள் கிராமப் பஞ்சாயத்து நிலங்களைக் கையகப்படுத்தித் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டதோடு, அதில் குடிசைகளையும் கட்டிக் கொண்டனர்.

அச்சமயம் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடந்து வந்ததால் அடக்குமுறையை ஏவிவிடாமல் நல்ல பிள்ளை போல அரசு நடந்து கொண்டது. அரசு அதிகாரிகளுக்கும், போராட்டத் தலைமைக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தையில், ''தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 0.03 ஏக்கர் நிலம் வழங்குவது தொடர்பான விண்ணப்பங்கள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் பரிசீலிக்கப்படும்; தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான அடையாள அட்டைகள் அடுத்த ஒரு மாதத்திற்குள் வழங்கப்படும்; போராட்டத்தை நிறுத்திக் கொண்டு, ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் இருந்து போராட்டக்காரர்கள் வெளியேற வேண்டும்'' என அரசு தரப்பு முன்வைத்தது. அரசின் முதலிரண்டு வாக்குறுதிகளை ஏற்றுக் கொண்ட போராட்டத் தலைமை, போராட்டத்தையோ, கையகப்படுத்தப்பட்ட நிலங்களையோ கைவிட முடியாது என அறிவித்தது.

நாடாளுமன்றத் தேர்தல்கள் முடிந்து, முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடனேயே ஜாட் சாதி நிலப்பிரபுக்கள் மான்ஸா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சாலை மறியல் நடத்தியதோடு, பஞ்சாப் மாநிலத் துணை முதல்வர் சுக்பிர் சிங் பாதலின் காரை மறித்து ''கெரோ'' செய்தனர். தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலிகளோடு அரசு போட்டுக் கொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என அவர்கள் கோரியதோடு, ''இன்று பஞ்சாயத்து நிலங்களை ஆக்கிரமிப்பவர்கள், நாளை எங்கள் நிலங்களையும் கைப்பற்றிக் கொள்வார்கள்'' எனப் பீதியூட்டினர்.

இதற்காகவே காத்திருந்த அகாலிதள் - பா.ஜ.க. கூட்டணி அரசு, போராடி வந்த தாழ்த்தப்பட்ட மக்களின் மீது போலீசு அடக்குமுறையை ஏவிவிட்டது. பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டு 3,000-க்கும் மேற்பட்ட விவசாயக் கூலித் தொழிலாளர்களும், இப்போராட்டத்துக்குத் தலைமையேற்று வழி நடத்தி வந்த சி.பி.எம். (எம்-எல்) லிபரேஷன் கட்சி மற்றும் அதன் முன்னணி அமைப்பான புரட்சிகர இளைஞர் கழகத்தைச்

சேர்ந்த செயல்வீரர்களும் கைது செய்யப் பட்டனர். தாழ்த்தப்பட்ட மக்கள் கிராமப் பஞ்சாயத்து நிலத்தில் போட்டிருந்த குடிசைகள் போலீசாரால் பிய்த்து எறியப்பட்டன. கைது செய்யப்பட்டு 17 நாட்கள் கழிந்த பிறகுதான் தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்குப் பிணை வழங்கப் பட்டது. எனினும் போராட்டத்துக்குத் தலைமை தாங்கியவர்கள் மீது வழக்குக்கு மேல் வழக்குப் போட்டு சிறையிலேயே அடைத்து வைத்திருக்கிறது, பஞ்சாப் மாநில அரசு. இதன் மூலம், அப்போராட்டத்தைப் பிசுபிசுக்கச் செய்து விடவும் முயலுகிறது.

•••



**கிராமப்புற பஞ்சாயத்து நிலங்களைத் தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு பிரித்துக் கொடுக்கக் கோரி, மான்சா நகரிலுள்ள துணை ஆணையர் அலுவலகத்தின் முன் நடத்தப்பட்ட தர்ணா போராட்டம்.**

பசுமைப் புரட்சியால் பஞ்சாப் மாநில கிராமப்புற மக்கள் அனைவருமே செல்வந்தர்களாக ஆகிவிட்டதைப் போல அரசும், அதன் எடுபிடிகளும் நீண்டகாலமாகப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். அம்மாநிலத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலித் தொழிலாளர்களின் வாழ்க்கையை எடுத்துப் பார்த்தால்தான், அரசின் பொய்ப் பிரச்சாரத்தையும், பசுமைப் புரட்சி மேல்சாதி நிலப்பிரபுக்கள் - பணக்கார விவசாயிகளுக்கே சாதகமாக இருப்பதையும்; அம்மாநிலத்தில் சீக்கிய மதத்தைச் சேர்ந்த ஆதிக்கசாதி வெறியர்களின் கொட்டம் தலைவிரித்தாடுவதையும் புரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவிலேயே தாழ்த்தப்பட்ட மக்கள் அதிக எண்ணிக்கையில் வாழும் மாநிலம் பஞ்சாப்தான். அம்மாநிலத்தின் மொத்த மக்கட் தொகையில், 23 சதவீதம் பேர் தாழ்த்தப்பட்ட சாதியினர். அதேசமயம், அம்மாநிலத்தின் மொத்த விவசாய நிலப்பிரப்பில் வெறும் 2.34 சதவீதம்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சொந்தமாக உள்ளது. வளமான நிலங்கள் மேல்சாதி நிலப்பிரபுக்கள் - பணக்கார விவசாயிகளிடம் குவிந்து கிடக்க, தாழ்த்தப்பட்ட மக்களோ நிலமற்ற விவசாயக் கூலிகளாக, வறுமையோடு வாழ்க்கையை ஓட்டி வருகின்றனர்.

''முன்னேறிய'' மாநிலமாகக் கருதப்படும் பஞ்சாபின் கிராமப்புறங்களில் இன்றும்கூடத் தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகள், ஜாட்சாதி நிலப்பிரபுக்களிடம் பண்ணையடிமைகளாக வேலை செய்து வருவதைக் காண முடியும். குறிப்பாக, இப்போராட்டம் வெடித்த மான்ஸா மாவட்டத்தில் இப்பண்ணையடிமைத்தனம் ஆழமாக வேரூன்றியிருப்பதைப் பல சமூக ஆய்வுகள் வெட்டவெளிச்சமாக்கியுள்ளன.

பஞ்சாப் மாநிலத்தில் விவசாயம் பெருமளவு இயந்திரமயமாகியிருப்பதால், தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகளுக்கு வருடம் முழுவதும் வேலை கிடைப்பதே கிடையாது. வருடத்தில் இரண்டு அல்லது மூன்று மாதங்கள், அதுவும் அறுவடை சமயத்தில் மட்டும்தான் வேலை கிடைக்கும்; அதற்குக் கொடுக்கப்படும் கூலியோ, மற்ற 'வளர்ந்த' மாநிலங்களை ஒப்பிடும்போது மிகவும் குறைவானது. இதனால் வேலை தேடி நகர்ப்புறங்களுக்கு ஓடும் தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டே போகிறது.

இந்த இடப்பெயர்வு, நகரங்களில் வேலை தேடி அலையும் மிகப் பெரும் உதிரித் தொழிலாளர் பட்டாளத்தையே உருவாக்கி வருகிறது. நகர்ப்புறங்களிலும் வேலைவாய்ப்புகள் சுருங்கிக் கொண்டே போவதால், நகரத்துக்கு ஓடிவரும் விவசாயக் கூலிகளுக்கு மாதம் முழுவதும் வேலை கிடைப்பதில்லை.

பஞ்சாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் நடத்திய ஒரு ஆய்வில், கிராமப்புறங்களில் வாழும் தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலித் தொழிலாளர் குடும்பங்களின் சராசரி ஒருநாள் வருமானம் ரூ.12/- தான் என்ற அதிர்ச்சிகரமான புள்ளி விவரத்தை வெளியிட்டுள்ளனர். இந்த ஏழ்மை நிலை, தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலிகளைக் கந்துவட்டிக் கடன் வலையில் சிக்க வைத்திருப்பதையும் அவர்களின் ஆய்வு அம்பலப்படுத்தியுள்ளது. நிலப்பிரபுக்களிடம் கடன் வாங்கும் தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், நிலப்பிரபுக்களின் வயல்களிலும், வீடுகளிலும் எவ்விதக் கூலியும் இன்றி, இலவசமாக உழைக்க வேண்டும் என்ற மத்தியகால உழைப்புச் சுரண்டலில் இன்றும் இருத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

கூலி உயர்வு கேட்டாலோ, பண்ணையடிமைத்தனத்தை எதிர்த்தாலோ, இலவச உழைப்புச் சுரண்டலுக்கு மறுத்தாலோ, ''கலகம்'' செய்யும் தாழ்த்தப்பட்டோர் குடும்பங்களைச் சமூகப் புறக்கணிப்பு செய்து தண்டிப்பதை மேல்சாதி நிலப்பிரபுக்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். ''குருத்வாராக்களில் வழிபடுவதைத் தடை செய்வது; வேலை கொடுக்க மறுப்பது; பொது இடங்களைப் பயன்படுத்துவதற்கு தடை விதிப்பது; இவற்றை விடக் கொடூரமாக, காலைக் கடன்களைக் கழிக்கச் செல்லும் இடங்களைக்கூடப் பயன்படுத்த முடியாமல் தடைகளை ஏற்படுத்துவது'' எனப் பல்வேறு வழிகளில் வடிவங்களில் இச் சமூகப் புறக்கணிப்பு அரசுக்குத் தெரிந்தே நடந்து வருகிறது.

இப்படிப்பட்ட நிலையில் ''வாழும்'' சீக்கிய தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலிகள், ''நிலம் கொடு; வேலை கொடு'' என்ற போராட்டத்தை, தங்களுக்கு ஓரளவு பொருளாதார சுதந்திரத்தை அளிக்கும் போராட்டமாகவும்; தங்களது அடிமைத்தனத்தை ஒழித்து, சமூக அந்தஸ்து வழங்கும் போராட்டமாகவும் காண்கிறார்கள். இப்போராட்டத்தின் ஊடாக அவர்கள் அரசின் வர்க்கச் சார்பை மட்டுமல்ல, சட்டபூர்வமாகவும், அமைதியாகவும் நடத்தப்படும் போராட்டங்கள் கொடூரமாக ஒடுக்கப்படும்பொழுது, வேறு வழியில் எப்படிப் போராடித் தமது கோரிக்கைகளை வென்றெடுப்பது என்பதையும்; நிலப்பிரபுக்களின் அரசியல்-பொருளாதார ஆதிக்கத்தையும்; சாதிக் கட்டுமானத்தையும் தகர்க்காமல் முழுமையாக விடுதலை அடைய முடியாது என்பதையும் புரிந்து கொள்வார்கள்!

● திப்பு

## தமிழ்நாடு வேளாண் தொழில் ஆலோசகர் ஒழுங்காற்றுச் சட்டம்:

# யாருக்கு இலாபம்?

**தமிழக விவசாயிகளின் பாரம்பரிய வேளாண் அறிவையும், தற்சார்பையும் முற்றிலுமாக அழிப்பதே இச்சட்டத்தின் நோக்கம்.**

**வி**வசாயத்தை ஒழுங்குபடுத்துவது என்ற பெயரில், தமிழக அர கடந்த ஜூன் மாத இறுதியில் தமிழ்நாடு வேளாண்மை தொழில் ஆலோசகர் ஒழுங்காற்றுச் சட்டத்தைச் சட்டசபையில் எவ்வித எதிர்ப்புமின்றி ஒருமனதாக நிறைவேற்றியிருக்கிறது. இச்சட்டத்தின் கீழ் வேளாண் கவுன்சில் என்ற புதிய அமைப்பு உருவாக்கப்படும். இக்கவுன்சிலில், தமிழகத்தில் உள்ள சென்னைப் பல்கலைக்கழகம், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் வேளாண் அறிவியல் தொடர்பான பட்டப்படிப்பு முடித்த வேளாண் பட்டதாரிகள் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். இக்கவுன்சிலில் பதிவு செய்து கொண்ட வேளாண் பட்டதாரிகள் மட்டும்தான், இனி தமிழகத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு விவசாயம் தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகள், சேவைகளை வழங்க முடியும் எனக் குறிப்பிடுகிறது, இச்சட்டம்.

வேளாண் தொழில்நுட்ப ஆலோசனை, சேவை என்பதில் விவசாய நடவடிக்கைகள் தொடர்பான அனைத்தையும் அடக்கிவிடுகிறது, இச்சட்டம். வெளிமாநிலப் பல்கலைக்கழகங்களில் வேளாண் பட்டப்படிப்பு முடித்தவர்கள்கூட இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் கவுன்சிலில் உறுப்பினராக முடியாது. தமிழகத்தைச் சேர்ந்த இலட்சக்கணக்கான விவசாயிகள் இக்கவுன்சிலின் வாசற்படியைக்கூடத் தொடமுடியாது.

இக்கவுன்சிலில் உறுப்பினராக இல்லாத ஒருவர் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினால், அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, 5,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும். இந்தத் தண்டனையையும் மீறி அவர் ஆலோசனை வழங்குவதைத் தொடர்ந்தால், 10,000 ரூபாய் அபராதம் அல்லது ஆறுமாதச் சிறை தண்டனை அல்லது இரண்டும் சேர்ந்து விதிக்கப்படும். தலைமுறை தலைமுறையாக விவசாயம் செய்து வரும் விவசாயிகள் தமது பக்கத்து வயல்காரனுக்கு வேளாண்மை தொடர்பாக ஆலோசனை வழங்குவதுகூட, இச்சட்டத்தின் படித் தண்டனைக்குரிய குற்றமாகிவிடும்.

யாரோ ஒரு சிலர் தமிழக விவசாயிகளுக்குத் தவறான ஆலோசனைகளை வழங்கி வருவதாகவும், அவர்களைத் தடுப்பதற்காகத்தான் இச்சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாகவும் கூறி வருகிறது, தமிழக அர . அந்த ஒரு சிலர் யார்?

நமக்குத் தெரிந்த வரையில் மான்சாண்டோ என்ற அமெரிக்க நிறுவனத்தின் தயாரிப்பான பி.டி. பருத்தி விதை அமோக விளைச்சலைக் கொடுக்கும் என விளம்பரப்படுத்தி விவசாயிகளின் தலைகளில் கட்டினார்கள். அதனை நம்பி பருத்தி போட்ட விவசாயிகள், போதிய விளைச்சல் எடுக்க முடியாமல் போய், கடனாளியாகி, தற்கொலை செய்து கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதை நாடே கண்டது.

காட்டாமணக்கு பயிர் செய்தால் கடனையெல்லாம் அடைத்துவிடலாம் எனப் புதிதாக முளைத்த சில விவசாய கம்பெனிகள் விவசாயிகளுக்கு ஆசை காட்டின. விளைந்த காட்டாமணக்கை விற்க முடியாமல் போய், விவசாயிகள் ஏமாந்து நின்றார்கள்.

இப்படி நவீன விதை, ஏற்றுமதிப் பயிர் எனத் தமிழக விவசாயிகளைச் சீரழித்த கனவான்களை இச்சட்டம் தண்டிக்குமா என்றால், இல்லை; முடியாது என்பதுதான் தமிழக அரசின் பதில். ஏனென்றால், இவர்களெல்லாம் பன்னாட்டு விவசாய கம்பெனிகளின் விற்பனைப் பிரதிநிதிகள், வேளாண் அறிவியலைக் கரைத்துக் குடித்த மேதாவிகள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், அரசாங்க வேளாண்துறை அதிகாரிகள். இக்கும்பலைத் தண்டிக்காத இச்சட்டம் வேறு யாரைத் தண்டிக்கப் போகிறது?

விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க வேளாண் அறிவியலைப் படித்து முடித்துப் பட்டம் பெற்றவர்களைத் தவிர, வேறு யாருக்கும் தகுதி இல்லை என்பதன் பொருள், விவசாயிகள் வேளாண்மை பற்றிய தங்களின் பாரம்பரிய அறிவை, பாட்டன் முப்பாட்டனிடமிருந்து செவி வழியாகக் கேட்டுப் பெற்ற அறிவைப் பயன்படுத்தக்கூடாது; அடுத்த தலைமுறைக்கோ, பக்கத்து வயல்காரனுக்கோ கற்றுக் கொடுக்கக் கூடாது என்பது தவிர, வேறென்னவாக இருக்க முடியும்?

ப மைப் புரட்சி என்ற பெயரில், பாரம்பரியமான உணவுப் பயிர் ரகங்களை விவசாயிகளிடமிருந்து பறித்துக் கொண்ட கும்பல்; பாசன நீர் பயன்படுத்துவோர் சங்கம் என்ற பெயரில் நீர்நிலைகளின் மீது விவசாயிகளுக்கு இருந்து வந்த அற்ப

**இந்திய விவசாயத்தில் பன்னாட்டு வேளாண் கழகங்கள் ஆதிக்கம் செய்து வருவதை எதிர்த்துவரும் இயற்கை வேளாண்மை ஆர்வலர்கள் வந்தனா சிவா (இடது) மற்றும் நம்மாழ்வார்.**



உரிமைகளையும் பறித்துக் கொண்ட கும்பல், இப்பொழுது, இச்சட்டத்தின் மூலம், தமிழக விவசாயிகளின் 5,000 வருட பாரம்பரிய அறிவை, அவர்களிடமிருந்து அகற்றிவிடத் திட்டம் போடுகிறது.

ஒரு சட்டத்தின் மூலம் பாரம்பரிய அறிவை அகற்றிவிட முடியுமா என்ற சந்தேகம் பலருக்கு எழலாம். ஆங்கில மருத்துவத்துக்குப் பழகிய பிறகு, இன்று பாட்டி வைத்தியம் பெரும்பான்மையான மக்களின் நினைவில் இருக்கிறதா?

பன்னாட்டு மற்றும் உள்நாட்டு (தரகு) முதலாளித்துவ மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள், தமது விற்பனைப் பிரதிநிதிகள் மூலம் ஆங்கில மருத்துவர்களை வளைத்துப் போட்டிருப்பதைப் போல, இந்த வேளாண் பட்டதாரிகள் உரம்-பூச்சி மருந்து கம்பெனிகளுக்காகத் தமிழக விவசாயிகளை வளைத்துப் போடும் ''சேவையை''த்தான் ஆற்றப் போகிறார்கள். இதுவொருபுறமிருக்க, இதுநாள் வரை தமிழக அரசு, தனது விவசாயத் துறை மூலம் விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி வந்த ''சேவையை'', இச்சட்டத்தின் மூலம் தனியார்மயப்படுத்தி விட முயலுகிறது.

இரசாயன உரம், பூச்சி மருந்துகளை இந்திய விவசாயிகளிடம் அறிமுகப்படுத்திய பசுமைப் புரட்சியின் காரணமாக நெல், கோதுமை, கரும்பு போன்ற உணவு மற்றும் பணப் பயிர்களின் உற்பத்தி அதிகரித்திருக்கலாம். ஆனால், அதற்குக் கொடுக்கப்பட்ட விலை அதிகம். பசுமை புரட்சியால் விவசாயிகளின் தற்சார்பு அழிக்கப்பட்டு, விதை, உரம், பூச்சி மருந்து என விவசாய இடுபொருட்கள் அனைத்திற்கும் வேளாண் கம்பெனிகளைச் சார்ந்தே இயங்க வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். இக்கம்பெனிகள் விவசாய இடுபொருட்களின் விலையை தமது விருப்பம் போல் ஏற்றிக் கொண்டே போனதால், விவசாயத்தில் செலவுக்கும், வரவுக்கும் இடையே பெரும் பள்ளம் ஏற்பட்டு, விவசாயிகள் கடனாளியானார்கள்; உரமும், பூச்சு மருந்துகளும் மண்ணை மட்டுமல்ல, உணவுப் பொருட்களையும் விஷத் தன்மையுடையதாய் ஆக்கின. ''ஆபரேஷன் வெற்றியடைந்து விட்டது; நோயாளி இறந்து விட்டான்'' என்ற கதையாகத்தான் பசுமைப் புரட்சி முடிந்திருக்கிறது.

''நோய்க்கு அல்ல, அந்த நோயால் துயருறும் மனிதனுக்குத்தான் மருந்து'' என்பதுதான் ஹோமியோபதி மருத்துவ முறையின் தத்துவம் எனக் கூறுவார்கள். இந்திய விவசாயத்தில் நிலவும் குறைபாடுகளைக் களைய வந்ததாகச் சொல்லப்பட்ட பசுமைப் புரட்சியோ, இந்தத் தத்துவத்தின்படி இயங்காமல், விவசாயத்தைச் சூதாட்டமாக்கி, விவசாயிகளைத் தற்கொலை பாதைக்குத் தள்ளிவிட்டுள்ளது.

•••

**வி**வசாயத்தில் நமது பாரம்பரிய மிக்க அறிவைப் பயன்படுத்தி, இயற்கை வேளாண்மை முறையில் நல்ல மகசூலைப் பெற முடியும் என வந்தனா சிவா, நம்மாழ்வார் போன்ற சமூக ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றனர். அது மட்டுமல்ல, வேளாண் பட்டம் பெறாதவர்கள், அதேசமயம் விவசாயத்தில் நல்ல அனுபவம் பெற்றவர்கள், விவசாய வளர்ச்சிக்குப் பல்வேறு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்திருப்பதையும் இவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

தமிழக அரசின் ஆதரவுடன் விவசாயிகளிடம் தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டு வரும் ''செம்மை நெல் சாகுபடி'' என்ற வேளாண் தொழில்நுட்ப முறை, எந்தவொரு விவசாயப் பல்கலைக்கழகத்தாலோ, விவசாய நிறுவனங்களாலோ கண்டு பிடிக்கப்பட்டதல்ல; மடகாஸ்கர் நாட்டைச் சேர்ந்த




**தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகம் மரபீனி மாற்றம் செய்யப்பட்ட மக்காச்சோளத்தைப் பயிரிட்டுச் சோதனை செய்து வருவதைக் கைவிடக் கோரி, தமிழ்நாடு வணிகர் சங்கமும், விவசாய சங்கங்களும் இணைந்து மார்ச் 16, 2009 அன்று கோவையில் நடத்திய ஊர்வலம் (மேலே) மற்றும் அப்பல்கலைக்கழகத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்.**

விவசாயிகள், தங்கள் சொந்த அனுபவ அறிவின் மூலம் கண்டுபிடித்ததாகும்.

இன்று விவசாயிகளால் இரசாயனப் பூச்சிக் கொல்லி மருந்துக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படும் ''பஞ்ச கவ்யா'' எனப்படும் இயற்கையான, உயிரி பூச்சிக் கொல்லி மருந்தைக் கண்டுபிடித்தவர், க.நடராசன் என்ற அலோபதி (ஆங்கில) மருத்துவர். இந்த இயற்கையான பூச்சிக் கொல்லியைத் தமிழக வேளாண் பல்கலைக்கழகமும் அங்கீகரித்திருப்பதோடு, அக்கரைசலைத் தயாரிப்பது குறித்த செயல்விளக்க வகுப்புகளை விவசாயிகளுக்கு நடத்தி வருகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட நிலங்களைக் கரம்பாகப் போடுவதைத் தவிர வேறு வழியில்லை என வேளாண் அதிகாரிகள் கைவிட்டுவிட்ட நிலையில், அந்த நிலங்களில் சனப்புப் பயிரைத் தொடர்ச்சியாகப் பயிர் செய்து, அந்நிலங்களின் உப்புத் தன்மையைக் குறைக்கலாம் என்ற ஆக்கப்பூர்வமான மாற்று வழியை இயற்கை வேளாண்மையை ஆதரிக்கும் விவசாயிகள்தான் முன் வைத்துள்ளனர்.

- இப்படி இயற்கை வேளாண்மையைப் பின்பற்றும் விவசாயிகளோ, சமூக ஆர்வலர்களோ, இயற்கை வேளாண்மை குறித்த நுட்பங்களைத் தமிழக விவசாயிகளுக்கு ஆலோசனைகளாக வழங்குவதற்கு இச்சட்டம் தடை போடுகிறது; மீறினால், ஜெயில் களியைத் தின்ன வேண்டியிருக்கும் என மிரட்டுகிறது, தமிழக அரசு.

இவர்களுக்கு பதிலாக, இந்த இயற்கை வேளாண்மை குறித்த நுட்பங்களை கோவை வேளாண் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்களோ, வேளாண்துறையைச் சேர்ந்த விரிவாக்க அதிகாரிகளோ கற்றுக் கொடுப்பார்களா என்றால், அந்நிறுவனங்கள் இரண்டும் இயற்கை வேளாண்மையை மாற்றந்தாய் மனப்பான்மை கண்ணோட்டத்துடன் தான் அணுகுகின்றன. குறிப்பாக, கோவை வேளாண் பல்கலைக்கழகம், அமெரிக்காவின் தேசங்கடந்த வேளாண் நிறுவனமான மான்சாண்டோ மற்றும் ஃபோர்டு பவுண்டேஷன் ஆகியவற்றின் நிதியுதவியைப் பெற்றுக் கொண்டு, அவற்றின் கிளை போலச் செயல்படுவதாகக் குற்றஞ் சுமத்தப்படுகிறது.

தமிழக மண்ணின் மருத்துவமான சித்த மருத்துவம்கூட, தனி மருத்துவ அறிவியலாக அங்கீகரிக்கப்பட்டு, அதில் பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள கல்லூரிகளும், ஆராய்ச்சி நிலையங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், பாரம்பரிய இயற்கை வேளாண்மை நுட்பங்கள் ஒரு பாடப் பிரிவாகக்கூட வேளாண் பல்கலைக்கழகங்களால் அங்கீகரிக்கப் படவில்லை. இப்படிப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து படித்து முடித்து வெளிவரும் வேளாண் பட்டதாரிகளிடம் இயற்கை வேளாண்மை குறித்த புரிதலோ, ஆழமான அறிவோ இருக்கும் என எதிர்பார்க்க முடியுமா? விவசாயிகளுக்கு இவர்கள் வழங்கப் போகும் ஆலோசனையும், சேவையும், உரம்-பூச்சி மருந்து விற்கும் ஏஜெண்டுகள் விவசாயிகளுக்கு வழங்கிவரும் ஆலோசனைகளைவிட மேம்பட்டதாக இருந்துவிட முடியாது.

•••

**க**டந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இந்தியாவின் விவசாய உற்பத்தித் தேங்கிப் போய்க் கிடப்பதற்கு விவசாயத்தில் நிலவும் அரை நிலப்பிரபுத்துவ உறவுகளும், அதில் திணிக்கப்பட்டு வரும் தனியார்மயம் - தாராளமயமும்தான் காரணம். விவசாயத்தை விட்டு வெளியேறி, நகரத்தில் உதிரித் தொழிலாளர்களாக வாழ்க்கையை ஓட்டும் விவசாயிகளின் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடத்தில் உள்ளது. விவசாயத்தில் இரண்டாம் கட்ட பசுமைப் புரட்சியைத் திணிப்பதன் மூலம் இந்தத் தேக்க நிலையை உடைத்து விடலாம் என மன்மோகன் சிங் கும்பல் திட்டம் போட்டு வருகிறது.

இதற்கு ஏற்றாற்போல, பன்னாட்டு வேளாண் கழகங்கள் உருவாக்கி வரும் மரபீணி மாற்றம் செய்யப்பட்ட விதைகள், உயிரி தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உருவாக்கப்படும் பயிர்கள் போன்றவற்றைப் பரிசோதித்துப் பார்க்கும் சோதனைச்சாலையாக இந்திய விவசாயம் மாற்றியமைக்கப்படுகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த வேளாண் கழகங்களின் தொழில் நுட்பங்களை அப்படியே இந்திய விவசாயத்தின் மீது திணிப்பதற்கு ஏற்றவாறு, இந்திய-அமெரிக்க வேளாண்மை அறிவு முன் முயற்சி என்ற ஒப்பந்தமும் கையெழுத்தாகியிருக்கிறது. இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகளின் விவசாயம், அது சார்ந்த தொழில்கள் அனைத்தையும் உலக வர்த்தகக் கழகத்தின் கீழ் கொண்டு வரும் பேச்சுவார்த்தைகளும் நடந்து வருகின்றன.

இன்னொருபுறமோ, ஒப்பந்த விவசாயம், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டங்களின் அடிப்படையில், சிதறிக் கிடக்கும் இந்திய விவசாயத்தை, அமெரிக்க பாணி முதலாளித்துவப் பண்ணைகளாக மாற்றுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு ஏற்றாற்போல, நில உச்சவரம்புச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வருமாறு தரகு முதலாளிகள் கோரி வருகின்றனர். விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளை வழங்குவது, அவர்களின் உற்பத்திப் பொருட்களை நல்ல விலையில் விற்றுக் கொடுப்பது என்ற

> **வேளாண் பட்டதாரிகள் விவசாயிகளுக்கு வழங்கப் போகும் ஆலோசனையும், சேவையும், உரம்-பூச்சி மருந்து விற்கும் ஏஜெண்டுகள் விவசாயிகளுக்கு வழங்கிவரும் ஆலோசனைகளைவிட மேம்பட்டதாக இருந்துவிட முடியாது.**

பெயரில், ஐ.டி.சி. போன்ற தரகு முதலாளித்துவ நிறுவனங்களும், எம்.எஸ்.சுவாமிநாதன் பவுண்டேஷன் போன்ற அரசு சாரா நிறுவனங்களும் சிறு-நடுத்தர விவசாயிகளைத் தங்களின் பிடிக்குள் கொண்டு வரும் முயற்சியில் இறங்கியுள்ளன.

தமிழகம் உள்ளிட்டு இந்தியாவெங்கும் விவசாயத் துறையில் அறிமுகப்படுத்தப்படும் இச்சீர்திருத்தங்கள் அனைத்தும் அடிப்படையிலேயே சிறு-நடுத்தர விவசாயிகளின் நலனுக்கு எதிரானவை. இப்புதிய அபாயத்தை நக்சல்பாரி புரட்சியாளர்கள் மட்டுமல்ல, வந்தனா சிவா, நம்மாழ்வார் போன்ற இயற்கை வேளாண்மை ஆர்வலர்களும் எதிர்த்து வருகின்றனர். பன்னாட்டு வேளாண் கழகங்கள் திணிக்க முயலும் இரண்டாம் கட்ட ப மைப் புரட்சிக்கு எதிராகப் பேசிவரும் இவர்களின் வாய்க்குப் பூட்டுப் போடும் நோக்கத்தில்தான் தமிழக அரசு இச்சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

விதை கம்பெனிகளின் கல்லா பெட்டியை நிரப்புவதற்காகவே, விவசாயிகள் விதைகளை அடுத்த போகத்திற்குச் சேமித்து வைக்கக் கூடாது; இத்தடையை மீறி விதைகளைச் சேமித்து வைக்கும் விவசாயிகளின் வீட்டினுள் புகுந்து சோதனை நடத்தி, அவர்களைக் கைது செய்யலாம் என்றொரு கருப்புச் சட்டத்தை சில ஆண்டுகளுக்கு முன் மகாராஷ்டிர மாநில அரசு நிறைவேற்றியது. தற்பொழுது தமிழக அரசு கொண்டு வந்துள்ள வேளாண்மைத் தொழில் ஆலோசகர் ஒழுங்காற்றுச் சட்டம், அக்கருப்புச் சட்டத்திற்கு எள்ளளவும் குறைந்தது அல்ல.

இந்த வேளாண்மைத் தொழில் ஆலோசகர் ஒழுங்காற்றுச் சட்டம், தமிழகச் சட்டசபையில் எவ்வித விவாதமும் இன்றி, அறிமுகப்படுத்தப்பட்ட மறுநிமிடமே ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. விவசாய நிலங்களை வீட்டு மனைகளாகவும்; நதிகளை மணல் வியாபாரமாகவும்; கண்மாய் போன்ற நீர் நிலைகளை ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டிய புறம்போக்காகவும் பார்த்து வரும் சட்டமன்ற உறுப்பினர்கள், இச்சட்டத்தை எதிர்த்துப் பேசியிருந்தால்தான் நாம் ஆச்சரியப்பட நேர்ந்திருக்கும்.

எந்த முறையில் விவசாயம் செய்வது? எனத் தீர்மானிக்கும் உரிமையை விவசாயிகளிடமிருந்து தட்டிப் பறிக்கும் இச்சட்டத்திற்கு எதிராக இயற்கை வேளாண்மை ஆர்வலர்கள், ''கருப்புச் சட்ட எதிர்ப்புக் குழு'' என்ற அமைப்பைக் கட்டி, விவசாயிகளைத் திரட்டிப் போராடப் போவதாக அறிவித்துள்ளார். இப்போராட்டங்களுக்கு ஆதரவாகத் திரள வேண்டியது தமிழக மக்களின் கடமையும் கூட!

• குப்பன்

# அடக்குமுறை-வன்கொடுமைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த பள்ளி மாணவர்கள்

திருச்சி, புத்தூர் திரு.வி.க.நகர் வண்ணாரப்பேட்டையில் செயல்பட்டு வருகிறது சி.இ. மேல்நிலைப்பள்ளி. கிறிஸ்துவ சிறுபான்மையினருக்கான சலுகையோடு அரசின் நிதியுதவி பெறும் இப்பள்ளியில், தனியாருக்கு நிகராக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இங்கு பயிலும் மாணவர்கள் சாதிரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் வன்கொடுமைகளுக்குள்ளாகிறார்கள்.

பள்ளி நிர்வாகி ஜேம்ஸ் ஆபிரஹாம் தனது மகள்கள் மற்றும் மருமகன்களையே ஆசிரியர்களாக நியமித்துக்கொண்டு, வரைமுறையற்ற முறைகேடுகளையும் வன்கொடுமைகளையும் இழைத்துவந்திருக்கிறார்.

இக்கும்பலின் கொடுமைகளை காணச்சகிக்காது, மாவட்ட கல்வி அதிகாரிகளிடம் புகார் அளித்த குற்றத்திற்காக லாமெக் என்ற ஆசிரியரை, பள்ளி மாணவர்களின் முன்னிலையிலேயே கொலைமிரட்டல் விடுத்துக் கன்னத்தில் அறைந்திருக்கிறார், ஜேம்ஸின் மகளான ஸ்டெல்லா மேரி. தமக்காக வாதாடிய ஆசிரியர் தம் கண் எதிரிலே அவமானப்படுத்தப்படுவதைக் கண்டு கொதித்த மாணவர்கள் உடனே, சாலை மறியலில் ஈடுபட்டிருக்கின்றனர். மனுகொடுத்தும் மறியல் நடத்தியும் கூட நடவடிக்கை எதுவுமில்லை!

இந்நிலையில், இப்பகுதியில் செயல்படும் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியினர் இதில் தலையிட்டு, இத் தனியார் கல்விக்கொள்ளைக் கும்பலுக்கு எதிராக ஆயிரக்கணக்கான துண்டுப் பிர ரங்களோடு, இப்பகுதியெங்கும் தெருமுனைப்பிரச்சார இயக்கங்களை நடத்தி, மாணவர்களையும் பெற்றோர்களையும் அணிதிரட்டினர்.



அலுவலகத்தை விட்டு வெளியே வந்து,
மாணவர்களிடம் குறைகளைக் கேட்கும்
மாவட்ட ஆட்சியர் சவுண்டையா (வட்டத்திற்குள்).

கடந்த 17.08.09 அன்று இவ்வமைப்பினரின் தலைமையில் திரண்டு, தனியார் கல்விகொள்ளைக் கும்பலுக்கு எதிராக விண்ணதிர முழங்கியபடி மாவட்ட ஆட்சியரிடம் முறையிடச் சென்றது, அரைக்கால் சட்டைபோட்ட -ற்றுக்கணக்கான மாணவர்களின் கூட்டம்.

ஆயிரம்பேர் வந்தாலும் அதிலிருந்து ஐந்து பேரை மட்டும் அழைத்து சமரசம் பே ம் ஆட்சியரின் நைச்சியம் பலிக்கவில்லை இம்மாணவர்களிடம். இவர்கள் எழுப்பிய கண்டன முழக்கமும் கம்பீரமாய் தூக்கிப் பிடித்திருந்த செங்கொடியும் ஆட்சியரையே வெளியே இழுத்து வந்தது. கேள்விமேல் கேள்விகேட்டு ஆட்சியரையே திணறடித்தனர், இவ்விளம் மாணவர்கள்.

இதனைதொடர்ந்து, ஸ்டெல்லா மேரி தற்காலிகப் பணியிடைநீக்கம் செய்யப்பட்டார். இப்போராட்டத்தில் கிடைத்த முதற்கட்ட வெற்றி, இப்பள்ளி மாணவர்கள் மற்றும் பகுதிவாழ் மக்களிடம் பு.மா.இ.மு.வின் மீது புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

— தகவல்:
பு.மா.இ.மு., திருச்சி

# அச்சுறுத்தல்களால் புரட்சிகரப் பண்பாட்டை வீழ்த்த முடியாது!

''மக்களைப் பிளக்கும் சாதியை, மாதரை வதைக்கும் தாலியை, சித்தத்தை அழிக்கும் சாத்திரத்தை, ரத்தத்தை உறிஞ் ம் சீதனத்தை மொத்தமாய் புதைப்போம்'' என்ற அறைகூவலோடு, ஓசூர் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் சார்பாக தோழர் நாராயணமூர்த்தி-தீபா ஆகியோரின் புரட்சிகர திருமணம் மற்றும் தோழர் சரோஜா-சின்னசாமி தம்பதியினரின் தாலியறுப்பு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் 23.08.09 அன்று நடந்து கொண்டிருந்த நேரம்.

மக்களின் கவனத்தை ஈர்த்த இப்புரட்சிகர பண்பாட்டு நிகழ்ச்சியினை, எப்படியேனும் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற வெறியோடு, விழாப்பந்தலை, நாற்காலிகளை பிடுங்கி வீசியது, இளங்கோ தலைமையிலான இந்துமதவெறிக் கும்பல்!

விநாயகர் சதுர்த்திக்காக மதவெறியூட்டப்பட்டிருந்த ஆர்.எஸ்.எஸ், இந்து முன்னணி, வி.எச்.பி. காலிகள் ஒன்று சேர்ந்து, இப்பகுதி பு.ஜ.தொ.மு.வின் முன்னணியாளர் தோழர் பர ராமனின் வீட்டைக் குறிவைத்துத் தாக்குதல் தொடுத்தனர், இக்கொலைவெறிக்கும்பல். கூடியிருந்த பெண் தோழர்களை நாகூ ம் வார்த்தைகளால் ஏசியும், தோழர்கள் மீது கற்களையும், மரக்கட்டைகளை வீசியும் வெறியாட்டம் போட்டது.

இதனைக் கண்டித்த பகுதிவாழ் மக்களை ஆபாசமாக திட்டிக்கொண்டே வெறியாட்டத்தை நடத்திய இக்கும்பல், பு.ஜ.தொ.மு.வை சேர்ந்த தோழர் சின்னசாமி, வி.வி.மு.வை சேர்ந்த தோழர் முருகேசன் ஆகியோரை வெட்டரிவாள் கொண்டும் கத்தியைக் கொண்டும் தாக்கியதில், அத்தோழர்கள் படுகாயமுற்றனர்.

'சூத்திர' கருணாநிதியின் போலீசோ, கொலைவெறியாட்டம் போட்ட இந்துமதவெறிக் கும்பலை தந்திரமாக விநாயகர் சதுர்த்தி விழாவில் கலந்துகொள்ள அனுமதித்துவிட்டு, திருமணத்திற்கு ஏற்பாடு செய்த தோழர்களை விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்று, அவர்கள் மீது பொய்வழக்கும் போட்டுள்ளது.

இந்துமதவெறியர்களின் வெறியாட்டத்தையும் இக்கும்பலுக்கு ஆதரவாக நடந்து கொண்டு பொய்வழக்கு போட்ட போலீசின் மிரட்டலையும் துணிவுடன் எதிர்கொண்ட இவ்வமைப்பினர், திட்டமிட்டபடியே, அதேநாளில் அருகாமை பகுதியொன்றில், சாதிமறுப்பு புரட்சிகர திருமணத்தை திரளான பகுதி மக்களின் பங்கேற்புடன் நிகழ்த்திக் காட்டினர்.

— பு.ஜ. செய்தியாளர்கள், ஓசூர்.

# இப்படியோர் இந்தியா இருப்பது உங்களுக்குத் தெரியாதா?

**இன்று ம.பி.யிலும், பீகாரிலும் நடக்கும் பட்டினிச் சாவுகள், நாளை உங்கள் வீட்டுக் கதவையும் தட்டக்கூடும்.**

அப்துல் கலாம் சென்னை வரும்போதெல்லாம் விரும்பிச் சென்று சாப்பிடும் உணவகம் அன்னலட்சுமி. அங்கு ஒரு சாப்பாட்டின் விலை 750 ரூபாய். எளிமையின் சிகரமான கலாம், அன்னலட்சுமியில் உணவருந்திக் கொண்டிருக்க, 2020-இல் இந்தியாவை வல்லரசாக்க கனவு காணுங்கள் என அவர் கோருகின்ற இந்தியக் குழந்தைகளோ 2 ரூபாய் கொடுத்து ரேசன் அரிசி வாங்க இயலாத வறுமையால் பட்டினியில் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

‘‘பருவ மழை பொய்த்து வறட்சி ஏற்பட்டாலும் நமது மக்கள் எவரும் பட்டினி கிடக்கும் நிலை ஏற்பட அனுமதிக்க மாட்டோம்’’ எனக் கடந்த மாதம் மன்மோகன் சிங் முழங்கிக் கொண்டிருந்தபோதே, இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் பட்டினிச் சாவுச் செய்திகள் வெளிவரத் தொடங்கியிருந்தன.

மத்தியப் பிரதேச மாநிலத்தில மட்டும் ஜூலை 2008 முதல் ஜனவரி 2009 வரை, சத்தான உணவின்றி உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கை 676. அங்கு கர்ப்பிணிகளுக்குப் போதிய ஊட்டச்சத்தான உணவு இல்லாததால், ஒவ்வொரு நாலு நிமிடத்திற்கும் ஒரு குழந்தை இறந்தே பிறக்கிறது. தப்பிப் பிழைக்கும் குழந்தைகளில் 14 சதவீதம், தங்களது ஆறு வயதிற்குள் மடிந்து போகின்றன. ஊட்டச் சத்தின்மையால் வாடும் குழந்தைகளின் சதவீதம் 45-இல் இருந்து 60-ஆக இப்போது உயர்ந்துள்ளது.

அம்மாநிலத்தில் கிராமங்களைப் பெயர் சொல்லி அழைக்கும் வழக்கொழிந்து, பசியின் கொடுமையால் அண்மையில் இறந்து போன குழந்தைகளின் எண்ணிக்கையைக் கொண்டு அழைக்கும் வழக்கம் உருவாகி உள்ளது. அவற்றை ‘‘ஆறு பிள்ளைகளின் கிராமம்’’ என்றும் ‘‘பத்து பிள்ளைகளின் கிராமம்’’ என்றும் அழைப்பதைக் கேட்கவே கொடுமையாக உள்ளது.

அந்தக் கிராமங்களில் உள்ள குழந்தைகள், உப்பிய வயிறோடும் வதங்கிய கை-கால்களோடும் பிதுங்கிய விழிகளோடும் — அவை மனிதக் குழந்தைகள்தானா என்று சந்தேகம் எழும் அளவு பட்டினியால் ஒடுங்கிப் போய்க் காணப்படுகின்றன.

இவ்வாறு குழந்தைகள் பட்டினியால் சாவது குறித்து அம் மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசு கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. பா.ஜ.க.வின் நாடாளுமன்ற உறுப்பினரான கணேஷ் சிங், ‘‘எதற்கெடுத்தாலும் அரசாங்கம்தான் வர வேண்டுமென இந்த மக்கள் ஏன் எதிர்பார்க்கிறார்கள்?’’, ‘‘தன் கையே தனக்குதவி என இருப்பவர்களுக்குத்தான் அரசு உதவும்’’ என திமிரோடு கூறுகிறான்.

கணேஷ் சிங்கின் தொகுதியைச் சேர்ந்த மக்கள், எதற்கெடுத்தாலும் அரசை எதிர்பார்த்திருப்பவர்களும் அல்லர். கிராமங்கள் மீது எவ்வித அக்கறையுமில்லாத அரசு, விவசாயம் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்திவிட்ட பிறகு, சோத்துக்கே வழியில்லாத மக்கள் தங்களது நிலங்களை முதலில் அடமானம் வைத்தார்கள். வேறு வேலையும் கிடைக்காத நிலையில் ஒரு கட்டத்தில் மொத்த கிராமமுமே கடனில் மூழ்கி, பசிப் பிணியால் குழந்தைகள் செத்து மடியும் சூழல். அப்போதுதான் வேறுவழியின்றி அரசின் உதவியை அம்மக்கள் நாடினர். மக்கள் பிரதிநிதிகளாகக் கருதப்படுவோரோ அம்மக்களைப் பிச்சைக்காரர்களைப் போலச் சித்தரிக்கின்றனர்.

‘‘உணவுக்கான உரிமை’’ என்ற பிரச்சார குழுவைச் சேர்ந்த சச்சின் ஜெயின், ‘‘இனம், மொழி, நிற பேதமின்றி அனைத்து தேசங்களிலும், குழந்தைகளுக்கு உணவளிப்பதைத்தான் தமது முதல் கடமையாகப் பெற்றோர்கள் கருதுகின்றனர். இங்கே குழந்தைகள் பஞ்சத்தில் மடிகிறார்கள் எனில், அதுதான் பஞ்சத்தின் உச்சம். இங்கு ஒட்டுமொத்த சமூகமே உணவின்றி வாடுகிறது என்று பொருள்’’ என்கிறார்.

**எலும்பும் தோலுமாக மரணத்தின் பிடியில் சிக்கியுள்ள மத்தியப் பிரதேச பச்சிளம் குழந்தைகள்.**



மத்தியப் பிரதேசத்தில் மட்டுமல்ல, நாடு முழுவதும் பட்டினிச் சாவுகள் நடந்தவண்ணம் உள்ளன. நாம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுவிட்டோம், நமது கிடங்குகளில் உள்ள தானிய மூட்டைகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கினால் நிலவுக்கே கூட போய் வரலாம் எனப் பொருளாதார மேதைகள் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கும் போதே, திசைகள் எங்கும் பட்டினிக் கொடுமை நீக்கமற நிறைந்திருக்கிறது. நெல்லின் பிறப்பிடமான ஒரிசாதான் இந்தியாவிலேயே பட்டினிக் கொடுமையில் முதலிடத்தைப் பிடித்திருக்கிறது. இந்தியாவிலேயே அதிகபட்ச இறப்பு விகிதம் உள்ள மாவட்டம் ஒரிசாவின் காலகந்தி ஆகும் (ஒவ்வொரு ஆயிரம் பேருக்கும் 140 பேர் செத்துப் போகிறார்கள்). பட்டினிக் கொடுமையின் இறுதி நிகழ்வான வயிற்றுப் போக்கால் இங்கு மக்கள் மடிந்து போவது வழமையாக உள்ளது. ''இந்த கிராமத்தில் ஒருவன் நோயில் படுத்தால் அவன் செத்து போக வேண்டியதுதான்'' என்கிறார், தனது மனைவியையும், குழந்தையையும் அடுத்தடுத்து பறிகொடுத்த மதன் நாயக் என்பவர். இவ்வாறு பட்டினியால் மக்கள் சாகும் காலகந்தி-போலன்கிர்-கோராபுட் பகுதியில் இருந்துதான் ஏழு கோடீஸ்வர வேட்பாளர்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டனர் என்பது முரண்நகை.

காலகந்திக்கு அருகிலே உள்ள காசிப்பூர் பகுதியில் விவசாயம் பொய்த்துப் போனதால், உணவுக்கு வழியின்றி மக்கள் அல்லாடுகின்றனர். ஒரு காலத்தில் தமக்கென சொந்தமாக நிலம் வைத்திருந்த பழங்குடியினரும், சிறு விவசாயிகளும் கொஞ்சம் கொஞ்சமாக பெரு விவசாயிகளிடம் அற்ப

**குழந்தைகள் பஞ்சத்தில்**
**மடிகிறார்கள் எனில், அதுதான்**
**பஞ்சத்தின் உச்சம்.**
**இங்கு ஒட்டுமொத்த சமூகமே**
**உணவின்றி வாடுகிறது**
**என்று பொருள்.**

விலைக்குத் தமது நிலங்களை விற்று விட்டு விவசாயக் கூலிகளாக மாறிப்போயுள்ளனர். விவசாயம் பொய்த்துப் போகும் போது உணவுக்கு வழியின்றி மாங்கொட்டைகளை அரைத்து உண்கின்றனர். பூஞ்சை படர்ந்து நஞ்சாகிப் போன மாங்கொட்டைகளை உட்கொண்டதால் 2001-இல் இந்தப் பகுதியில் 54 பேர் வாந்தி-பேதிக்கு பலியானார்கள்.

கடந்த சில வருடங்களில், இதுவரை 540 பேர் வரை பட்டினியால் மடிந்து போனது குறித்து ஒரிசா முதல் மந்திரி நவீன் பட்நாயக்கிடம் கேட்ட பொழுது ''இங்கு பட்டினிச்சாவே இல்லை'' என்று ஒரே வரியில் கூறி மழுப்பிவிட்டார். ஆனால் ஒரிசாவின் பழங்குடியினரும், விவசாயிகளும் வயிற்றுப் பிழைப்புக்காக சென்னை, பெங்களூர் போன்ற மாநகரங்களுக்குப் படையெடுக்கும் காட்சியோ, அவர் கூறுவது முற்றிலும் பொய் என்பதை நிரூபிக்கிறது. அவர்கள் அந்நகரங்



**'வல்லர ' இந்தியாவின் மறுபக்கம்:**
**ஊட்டச்சத்தின்மையால் மாண்டுபோன பிஞ்சுக் குழந்தைகள்.**

களில் கூலி வேலை பார்த்து சம்பாதிப்பதில் 70 சதவீதத்தை அந்நகரங்களில் செலவழித்தது போக, மிஞ்சும் அற்பத் தொகைதான் ஒரிசாவிலுள்ள அவர்களது குடும்பத்திற்கு உணவுக்குச் செலவிடப்படுகிறது.

நிலச் சீர்திருத்தத்தை முறையாகச் செய்த ஒரே மாநிலம் என சி.பி.எம். கட்சியினர் பெருமையுடன் பீற்றிக் கொள்ளும் மேற்கு வங்கத்தின், மேற்கு மித்னாபூரில் உள்ள அம்லாசோல் கிராமத்தில் கடந்த 2004-ஆம் ஆண்டிலிருந்தே பட்டினிச் சாவுகள் நிகழ்ந்து வருகின்றன. மேற்கு வங்க போலி கம்யூனிஸ்டு அரசு பல மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருவதாகக் கதையளந்தாலும், இன்றும் அம்லாசோல் அதே நிலைமையில்தான் உள்ளது. பட்டினிச் சாவுகளை வெளிக் கொணர்ந்த அம்லாசோல்-ஐச் சேர்ந்த சி.பி.எம். கட்சி உறுப்பினரான கைலாஷ் முண்டா என்பவர், கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டார் என்ற ஒரேயொரு மாற்றம் தவிர்த்து, எதுவும் மாறிவிடவில்லை. அதேபோல, லால்கரை ஒட்டிய பகுதிகளில் உணவுப் பற்றாக்குறையும், குழந்தைகள் ஊட்டச்சத்தில்லாமல் தவிப்பதும் நிரந்தரமாக நிலவுகிறது.

இம்மூன்று மாநிலங்களில் மட்டுமல்லாது இன்னும் பிற மாநிலங்களிலும் விவசாயக் கூலிகளும் அவர்களது குழந்தைகளும் பட்டினியால் மரணமடைந்து வருகின்றனர். விஷம் போல ஏறும் விலைவாசி அவர்களது மரணத்தைத் துரிதப்படுத்திவருகிறது. இந்தியாவை ஒரு வல்லரசாக மாற்றிவருவதாக ஆளும் வர்க்கம் கூறி வருகிறது. ஆனால் உண்மையில் ''மக்களின் வாழ்கைத் தரத்திலும், சுகாதாரத்திலும், குழந்தைகளுக்கான ஊட்டச்சத்திலும் இந்தியா பஞ்சத்தில் அடிபட்ட ஆப்பிரிக்காவின் சஹாராப் பாலைவனப் பிரதேசங்களைப் போன்று நலிவுற்று உள்ளது'' என நோபல் பரிசு பெற்ற பொருளாதாரப் பேராசிரியர் அமர்த்யா சென் கூறியுள்ளார். இதுதான் வல்லரசுக் கனவுகளோடு நோஞ்சான் தலைமுறையை அடைகாக்கும் இந்தியாவின் நிலைமை. வயிற்றை நிரப்ப உணவின்றிப் பச்சிளங்குழந்தைகள் ஒவ்வொரு நொடியும் செத்துக் கொண்டிருக்கும்போது நாட்டை வல்லரசாக்குவதையும், சந்திரனுக்கு மனிதனை அனுப்புவதையும் பற்றி மேதாவிகள் அளந்து கொண்டிருக்கின்றனர். கும்பி கூழுக்கு அழுததாம்! கொண்டை பூவுக்கு அழுகிறதாம்!

● அப்பு

# உங்கள் ஓட்டு அம்பானிகளின் ஆட்சி

**அம்பானிகளுக்கு இடையேயான சண்டை, இந்திய ஜனநாயகத்தின் போலித்தனத்தை மீண்டும் அம்பலப்படுத்திவிட்டது.**

அம்பானி சகோதரர்களிடையே மீண்டும் சொத்துத் தகராறு வெடித்து, உலகமே பார்க்க நடந்து வருகிறது. ஆனால், அந்தச் சொத்தோ அவர்களுக்குச் சொந்தமானது கிடையாது என்பதுதான் இந்த இரண்டாம் கட்டத் தகராறில் வராசியமான விசயம். அந்தச் சொத்து — கிருஷ்ணா — கோதாவரி நதிப் படுகையில் கிடைக்கும் இயற்கை எரிவாயு — இந்திய மக்களுக்குச் சொந்தமானது.

ஊரான் சொத்தை எப்படி பங்கு போட்டுக் கொள்வது என்பதையொட்டி அண்ணன் முகேஷ் அம்பானிக்கும், தம்பி அனில் அம்பானிக்கும் இடையே நடந்துவரும் இந்தச் சண்டை, பேராசை பிடித்தவர்களின் கீழ்த்தரமான கிரிமினல் குற்றமாக இந்திய மக்களின் முன் நிறுத்தப்படவில்லை. மாறாக, பாகப் பிரிவினை சட்டச் சிக்கலைப் போல இந்திய நீதிமன்றங்களால் கையாளப்படுகிறது. இந்தப் பொதுச் சொத்தைக் காக்க வேண்டிய பொறுப்பில் உள்ள இந்திய அரசோ, இந்தச் சொத்துத் தகராறில் அண்ணன் முகேஷ் அம்பானிக்கு எந்த விதமான பாதகமும் நேர்ந்துவிடக் கூடாது என்ற உள்நோக்கத்தோடு காய்களை நகர்த்தி வருகிறது.

பிரதம மந்திரி அலுவலகம், நிதி அமைச்சகம், பெட்ரோலிய அமைச்சகம், சட்ட அமைச்சகம், ஹைட்ரோ கார்பன் இயக்குநர் அலுவலகம் என இந்திய அரசின் பல்வேறு துறைகளும் இந்தச் சொத்துத் தகராறைத் தீர்த்து வைப்பதில் குதித்துள்ளன. அம்பானி சகோதரர்களுக்கு இடையேயான சொத்துத் தகராறு, ஓட்டுக்கட்சிகளுக்கு இடையேயான கொள்கை பிரச்சினை போல நாடாளுமன்றத்தில் வெடிக்கிறது. மக்களைப் பாதிக்கும் விலைவாசி உயர்வு, வறட்சி போன்ற பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, இந்தச் சொத்து தகராறுதான் நாட்டின் தற்போதைய தலையாய பிரச்சினை என்பது போல நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுகிறது.

தாராளமயம் - தனியார்மயத்திற்கு முன், இந்தியாவில் கிடைக்கும் பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் இயற்கை எரிவாயு ஆகிய மூலவளங்களைக் கண்டுபிடிப்பது, அவற்றைப் பூமிக்கடியில் இருந்து தோண்டியெடுப்பது, த்திகரிப்பது, விநியோகிப்பது ஆகிய அனைத்தும் அர வசம் மட்டுமே இருந்து வந்தன. 1990-க்குப் பின் இந்தத் துறைகளிலும் இந்தியத் தரகு முதலாளிகளையும் பன்னாட்டு நிறுவனங்களையும் அனுமதிக்கும் முடிவை எடுத்த மைய அர , அதற்காக ''என்.இ.எல்.பி.'' என்ற லைசென் முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இதன்படி ஏலம் விடப்பட்ட எண்ணெய் வயல்களில் நான்கில் ஒரு பகுதியை (பிளவுபடாத) ரிலையன்ஸ் நிறுவனம் கைப்பற்றிக் கொண்டது.

இந்த எண்ணெய் வயல்கள் அனைத்தும் அடிமாட்டு விலைக்கு ஏலம் விடப்பட்டதாக அப்பொழுதே குற்றச்சாட்டுகள் எழுந்தன. குறிப்பாக, அரபிக்கடல் பகுதியில் அமைந்துள்ள 20,000 கோடி ரூபாய் பெறுமான முக்தா மற்றும் பன்னா என்ற இரு எண்ணெய் வயல்களை, ரிலையன்ஸும், அமெரிக்காவின் என்ரான் நிறுவனமும் கூட்டணி கட்டிக் கொண்டு வெறும் 12 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தன. இந்த மோசடியான ஏலத்தை ரத்து செய்யக் கோரி மக்கள் இயக்கங்களின் தேசியக் கூட்டணி என்ற அமைப்பால் உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு, ''ஏலத்தில் எந்தத் தீய உள்நோக்கமும் இல்லை'' எனக் கூறப்பட்டுத் தள்ளுபடி செய்யப்பட்டது.

இப்படி பொன் முட்டையிடும் வாத்தாக ரிலையன்ஸுக்குக் கிடைத்த எண்ணெய் வயல்களுள் ஒன்றுதான் கிருஷ்ணா - கோதாவரி படுகை வயல். 339 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டுள்ள இந்த வயலில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவை, ஏதோ பெரிய அம்பானி தனக்கு எழுதி வைத்து விட்டு போனது போல சொந்தம் கொண்டாடுகிறார், முகேஷ் அம்பானி.

அம்பானி சகோதரர்களிடையே பாகப்பிரிவினை நடந்த பிறகு, இந்த எண்ணெய் வயல் முகேஷ் அம்பானியின்

**அரசின் உதவியோடு பொதுச்சொத்தைக் கொள்ளையடித்தே உலகின் பெரும் கோடீ வரர்களின் பட்டியலில் இடம்பிடித்துவிட்ட முகேஷ் அம்பானி (இடது) மற்றும் அனில் அம்பானி.**



கைகளுக்கு வந்தது. அதே சமயம் அந்த எண்ணெய் வயலில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவை எப்படி பிரித்துக் கொள்வது என்பது தொடர்பாக இருவருக்கும் இடையே ஓர் ஒப்பந்தமும் கையெழுத்தானது. இதன்படி, அவ்வயலில் இருந்து ஒவ்வொரு நாளும் எடுக்கப்படும் இயற்கை எரிவாயுவில், 120 கோடி கன மீட்டர் எரிவாயுவை இந்திய அர க்குச் சொந்தமான தேசிய அனல் மின்கழகத்திற்குக் கொடுக்க வேண்டும். 280 கோடி கன மீட்டர் எரிவாயுவை அனில் அம்பானிக்குச் சொந்தமான ரிலையன்ஸ் இயற்கை மூலவளங்கள் நிறுவனத்திற்குத் (Reliance Natural Resources Limited) தர வேண்டும். மீதமுள்ள இயற்கை எரிவாயுவை அண்ணனும் தம்பியும் 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்த வயலிலிருந்து அனில் அம்பானி நிறுவனத்திற்குத் தரப்படும் இயற்கை எரிவாயுவை, பத்து இலட்சம் பிரிட்டிஷ் தெர்மல் யூனிட்டிற்கு 2.34 அமெரிக்க டாலர் என்ற கட்டணத்தில் (இந்திய மதிப்பின்படி ஒரு மெட்ரிக் டன் இயற்கை எரிவாயுவை ரூ.120-க்கு) கொடுக்க வேண்டும்.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுச் சொத்தைப் பிரித்துக் கொண்ட முகேஷ் அம்பானி, ஒப்பந்த விலையில் இயற்கை எரிவாயுவை அனில் அம்பானிக்குத் தர இப்பொழுது மறுக்கிறார். இதற்கு, பத்து இலட்சம் பிரிட்டிஷ் தெர்மல் யூனிட் விலை 4.20 அமெரிக்க டாலராக (ஒரு மெட்ரிக் டன் ஏறத்தாழ 207 ரூபாய்) இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகக் காரணம் கூறி வருகிறார். தனக்கு இலாபம் என்றால் அரசாங்கத்தை ஏமாற்றக்கூடத் தயங்காத முகேஷ் அம்பானி (ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் சர்வதேச அழைப்புகளை உள்ளூர் அழைப்புகளாகக் காட்டி அரசாங்கத்தை மோசடி செய்ததை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்) இந்தப் பிரச்சினையில் அரசின் விதியைக் காரணமாகக் கூறுவதன் உள்நோக்கத்தைப் பாமரன்கூடப் புரிந்து கொள்ள முடியும்.

பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தியைப் பொருத்தவரை இந்தியா தன்னிறைவு அடைந்த நாடல்ல. எனவே, பற்றாக்குறையான இந்த மூலவளங்களைப் பகிர்ந்து கொள்வது பற்றி இந்திய அர கொள்கையொன்றையே வகுத்து வைத்துள்ளது. இதன்படி பார்த்தால், அம்பானி சகோதரர்களுக்கு இடையே கையெழுத்தான இந்த ஒப்பந்தம் அரசின் பகிர்வுக் கொள்கைக்கு எதிரானது மட்டுமல்ல, முறைகேடானதும்கூட. தற்பொழுதுள்ள நிலையில் நாட்டின் ஒட்டுமொத்த (ஒருநாள்) நுகர்வுக்கே 720 கோடி கன மீட்டர் எரிவாயுதான் கிடைக்கிறது என்ற புள்ளிவிவரத்தை வைத்துப் பார்த்தால், அம்பானி சகோதரர்கள் மலை விழுங்கி மகாதேவன்களாக இருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

'தேசிய நலனும்', முகேஷ் அம்பானியின் நலனும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து கிடப்பதால்தான், இரு தரப்புமே இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார்கள்.



கிருஷ்ணா-கோதாவரிப் படுகையில் முகேஷ் அம்பானி அமைத்துள்ள இயற்கை எரிவாயு துரப்பணவு ஆலை: ஊரான் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே!

நாட்டு மக்களின் நலனை முன்னிறுத்தி யாராவது தனியார் மயத்திற்கு எதிராக வழக்குத் தொடுத்தால், அவ்வழக்குகளில் அரசின் கொள்கை முடிவுகளில் தலையிட முடியாது எனக் கூறி நழுவிக் கொள்வதை நீதிமன்றங்கள் வாடிக்கையாகக் கொண்டுள்ளன. ஆனால், இப்பிரச்சினையிலோ, மும்பய் உயர்நீதி மன்றம் அரசின் பெட்ரோலியப் பொருட்கள் பகிர்வுக் கொள்கைக்கு எதிரான அம்பானி சகோதரர்களின் ஒப்பந்தத்திற்கு ஆதரவாகத் தீர்ப்பளித்துள்ளது. அது மட்டுமல்ல, அம்பானி சகோதரர்களின் தாயார் இப்பிரச்சினையில் தலையிட்டு, சகோதரர்களுக்கு இடையேயான பிணக்கைத் தீர்த்து வைக்க வேண்டும் என ஆலோசனை வழங்கியுள்ளது. இதன் மூலம் நாட்டு மக்களின் சொத்தான இயற்கை எரிவாயுவை அம்பானியின் குடும்பச் சொத்தாக்கி விட்டது, மும்பய் உயர்நீதி மன்றம்.

•••

முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம், அனில் அம்பானிக்குச் சாதகமான மும்பய் உயர்நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறது. இவ்வழக்கு தொடர்பாக சிறப்பு விடுப்பு மனு தாக்கல் செய்துள்ள இந்திய அர , அம்மனுவில் அம்பானி சகோதரர்களுக்கு இடையே கையெழுத்தாகியுள்ள பகிர்வு ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரியுள்ளது.

இந்தப் பகிர்வு ஒப்பந்தம் நான்கு ஆண்டுகளுக்கு முன்பே அம்பானி சகோதரர்களிடையே கையெழுத்தாகியிருப்பது மைய அரசிற்கு நன்கு தெரியும். இத்துணை நாளாக இந்த ஒப்பந்தம் பற்றிக் கண்டு கொள்ளாமல் இருந்துவிட்டு, இப்பொழுது இதனை ரத்து செய்யச் சொல்லி மைய அர வரிந்து கட்டிக்கொண்டு இறங்கியிருப்பதைச் சந்தேகக் கண்ணோடுதான் பார்க்க வேண்டியிருக்கிறது. இந்தப் பகிர்வு ஒப்பந்தம் உச்ச நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டால், அதனால் பலனடையப் போகும் முதல் ஆசாமி முகேஷ் அம்பானிதான். ஆனால், மைய அரசோ, ''தேசிய நலன்'' கருதியே இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோருவதாக அடித்துச் சொல்லி வருகிறது. நாட்டின் பொதுச் சொத்துகள் அனைத்தையும் தனியார்மயமாக்க வேண்டும் என்பதை ஆன்மாவாகக் கொண்டுள்ள மன்மோகன் சிங் கும்பலிடமிருந்து இப்படிபட்ட வாதத்தைக் கேட்கும்பொழுது நாம் திடுக்கிட்டுத்தான் போகிறோம்.

அனில் அம்பானி கேட்கும் விலைக்கு இயற்கை எரிவாயுவை விற்றால் பலத்த நட்டமேற்படும் என முகேஷ் அம்பானி மட்டுமல்ல, மைய அர ம் கூறி வருகிறது. இந்த வாதம் உண்மையாகவே இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால்,

மாடர்ன் பிரட், பால்கோ, சென்டார் ஐந்து நட்சத்திர விடுதி உள்ளிட்ட பல பொதுத்துறை நிறுவனங்களை அடிமாட்டு விலைக்குத் தனியாருக்கு விற்ற மைய அர , இந்தப் பிரச்சினையில் தலைகீழாகப் பே வதுதான் நமக்கு வியப்பை ஏற்படுத்துகிறது. இந்தப் பிரச்சினையில், மன்மோகன் சிங் குறிப்பிடும் 'தேசிய நலனும்' முகேஷ் அம்பானியின் நலனும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து கிடப்பதால்தான், இரு தரப்புமே இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார்கள்.



''முகேஷ் அம்பானிக்கு எனது அர வக்காலத்து வாங்கவில்லை'' என நெஞ்சில் கைவைத்துச் சத்தியம் செய்கிறாரோ, மன்மோகன்சிங்!

முகேஷ் அம்பானி, அனில் அம்பானிக்குக் 'குறைந்த' விலையில் இயற்கை எரிவாயுவை விற்க ஒப்புக் கொண்டதை தம்பி பாசம் என்ற சென்டிமெண்டுக்குள் அடைத்துவிட முடியாது. இந்த ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன்பாக, மைய அரக்குச் சொந்தமான தேசிய அனல் மின் கழகம், தான் அமைத்துவரும் இரு மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் இயற்கை எரிவாயுவை வாங்குவதற்கு ''டெண்டர்'' விட்டது. அதில் கலந்து கொண்ட முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் ஒரு மெட்ரிக் டன் இயற்கை எரிவாயுவை 120 ரூபாய்க்குத் தருவதாக ஒப்புக்கொண்டு அந்த ஏலத்தில் வெற்றியடைந்தது. முகேஷ் அம்பானி இலாபம் இல்லாமலா இந்த விலைக்குச் சம்மதித்திருப்பார்? இதனை அடிப்படையாகக் கொண்டுதான், அனில் அம்பானி உ.பி. மாநிலத்தில் 'அமைத்து வரும்' மின் நிலையத்திற்குத் தேவைப்படும் இயற்கை எரிவாயுவை (ஒரு மெட்ரிக் டன்) 120 ரூபாய்க்குத் தரும் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த இரண்டு வர்த்தக ஒப்பந்தங்களும் கையெழுத்தான அடுத்த சில ஆண்டுகளில் சர்வதேச சந்தையில் பெட்ரோலியப் பொருட்களின் விலை தாறுமாறாக உயரத் தொடங்கியது. இதனைச் சாதகமாக்கிக் கொண்ட முகேஷ் அம்பானி ஒரு மெட்ரிக் டன் இயற்கை எரிவாயுவின் விலையை 4.33 அமெரிக்க டாலராக நிர்ணயிக்க வேண்டும் எனக் கோரினார். மைய அர அக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, ஒரு மெட்ரிக் டன் இயற்கை எரிவாயுவின் விலையை 4.20 அமெரிக்க டாலர் (217 ரூபாய்) என நிர்ணயம் செய்தது.

உள்நாட்டில் உற்பத்தியாகும் பெட்ரோலியப் பொருட்களின் விலையை, சர்வதேச சந்தை விலைக்கு இணையாக நிர்ணயம் செய்வதன் நோக்கமே, கொள்ளை இலாபம் அடிக்க வேண்டும் என்பதுதான். எனவே, முகேஷ் அம்பானியும் அர ம் கூட்டணி கட்டிக்கொண்டு இயற்கை எரிவாயுவுக்கு நிர்ணயம் செய்துள்ள விலை, அடிப்படையிலேயே நியாயமற்றது. மேலும், ஜூலை மாத சர்வதேச சந்தை நிலவரப்படி ஒரு மெட்ரிக் டன் இயற்கை எரிவாயுவின் விலை 3.30 அமெரிக்க டாலராகக் குறைந்து விட்ட பிறகும், அர ம் முகேஷ் அம்பானியும் இயற்கை எரிவாயுவின் விலையைக் குறைக்க மறுத்து வருகிறார்கள். வியாபார நோக்கில் பார்த்தால்கூட, இது நாணயமற்றதாகும்.

''தேசிய நலன்'' என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டு இந்த விலை உயர்வை நியாயப்படுத்தி வருகிறது, மைய அர . கிருஷ்ணா- கோதாவரிப் படுகையில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவை விற்றுக் கிடைக்கும் வருமானத்தை முகேஷ் அம்பானி, அரசின் காலடியில் கொட்டப் போவதைப் போல ஒரு மோசடி நாடகத்தை நடத்தி வருகிறார்கள். ஆனால், உண்மையோ இதற்கு நேர் எதிரானது.

கிருஷ்ணா - கோதாவரிப் படுகையில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவை எடுப்பது தொடர்பாக மைய அரசிற்கும் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்கும் கையெழுத்தாகியுள்ள ஒப்பந்தத்தின்படி, ரிலையன்ஸ் நிறுவனம் அவ்வயலில் தான் போட்டுள்ள மூலதனத்தைப் போல ஒன்றரை மடங்கு வருவாயை ஈட்டும் வரை, அவ்வயலில் இருந்து எடுக்கப்படும் இயற்கை எரிவாயுவை விற்றுக் கிடைக்கும் வருமானத்தில் 10 சதவீதத்தை மட்டும் ''ராயல்டியாக'' மைய அரக்குச் செலுத்தினால் போதும்; வருமானம், போட்ட மூலதனத்தைப் போல இரண்டு மடங்கை எட்டினால்தான் அரசின் பங்கு 16 சதவீதமாக அதிகரிக்கும். அரசின் பங்கு 50 சதவீதத்தைத் தொட வேண்டும் என்றால்கூட, முகேஷ் அம்பானிக்கு போட்ட மூலதனத்தைப் போல 2.5 மடங்கு வருமானம் கிடைக்க வேண்டும்.

முகேஷ் அம்பானி போடும் மூலதனமும் அவரது நிறுவனம் அரக்குச் செலுத்த வேண்டிய ராயல்டியும் எதிர்விகிதத்தில் அமைந்துள்ள இந்த எளிய கணிதச் சூத்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, முகேஷ் அம்பானி அவ்வயலில் போடும் மூலதனத்தைச் செயற்கையாக ஊதிப் பெருக்கி வருவதாக அனில் அம்பானி குற்றம் மத்தி வருகிறார். அத்திட்டத்தின் மூலதனம் 12,000 கோடி ரூபாயில் இருந்து திடீரென 42,500 கோடி ரூபாயாக அதிகரித்துள்ள இரகசியத்தை அனில் அம்பானி வெளிப்படையாக பத்திரிகைகள் மூலம் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறார்.

நியாயமாகப் பார்த்தால், இக்குற்றச்சாட்டுக்கு முகேஷ் அம்பானியோ, அவரது நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகளோ, தணிக்கையாளர்களோதான் பதில் சொல்லியிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் இது பற்றிக் கண்டு கொள்ளாமல் இருக்க, மைய அரக்குச் சொந்தமான ஹைட்ரோ கார்பன் துறையின் தலைமை இயக்குநர் வீ.கே.சிபல், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் பத்திரிகை தொடர்பாளர் போலப் பதில் சொல்லியிருக்கிறார். ''மைய அரசின் தலைமை தணிக்கை அதிகாரி உள்ளிட்டு மூன்றடுக்குத் தணிக்கை நடத்தப்பட்டதாகவும், அத்தணிக்கைகளில் எவ்விதமான மோசடியும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதோடு, இத்திட்டத்திற்கு 42,500 கோடி ரூபாய் மூலதனம் போடப்பட்டிருப்பது அவசியமானது, நியாயமானது'' எனப் பொருள்பட அவர் பத்திரிகைகளின் மூலம் விளக்கம் அளித்திருக்கிறார்.

வீ.கே.சிபலின் இந்தப் பதில் வெளிவந்த அடுத்த சில நாட்களிலேயே, பொருளாதார மற்றும் சேவைத் துறை அமைச்சகங்களைத் தணிக்கை செய்யும் அலுவலகத்தைச் சேர்ந்த முதன்மை இயக்குநர் ஏ.கே.சிர்வி, ''ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் கிருஷ்ணா-கோதாவரி படுகை வயலில் போட்டுள்ள மூலதனம் குறித்து தலைமை தணிக்கை அதிகாரி

தணிக்கை செய்வதாகக் கூறுவது உண்மைக்குப் புறம்பானது'' எனப் பத்திரிகைகளின் மூலம் மறுப்பு தெரிவித்துள்ளார். அம்பானி சகோதரர்களுக்கு இடையேயான சண்டையில் மைய அர முகேஷ் அம்பானியை முட்டுக் கொடுத்து வருகிறது என்பதை இந்த மறுப்பே அம்பலப்படுத்தி விட்டது.

இதனால் அர க்கு என்ன இலாபம் என்ற கேள்வி எழலாம். கங்காணிகளுக்கு நிலப்பிரபுக்களால் என்ன இலாபமோ, அதே வகையில்தான் முகேஷ் அம்பானி-இந்திய அரசின் உறவைப் பார்க்க முடியும். தனியார் மூலதனத்தின் நலனை, அவர்களின் இலாபத்தைப் பாதுகாக்கும் அடியாள்தான் அர என்பதுதான் இந்தக் கேள்விக்கான பதில். இரண்டு முதலாளிகளுக்கு இடையயான மோதல், இந்திய 'ஜனநாயக' அரசின் வர்க்க குணாம்சத்தை அம்பலப்படுத்தியிருப்பதுதான் இதன் தனிச்சிறப்பு.

•••

**தே**சிய நலன் என்ற வகையில் பார்த்தால், இந்த ஒப்பந்தத்தை மட்டுமல்ல, முகேஷ் அம்பானி நிறுவனத்துடன் போடப்பட்டுள்ள குத்தகை ஒப்பந்தத்தையே மைய அர ரத்து செய்ய முன் வந்திருக்க வேண்டும். ஆனால், பெட்ரோலியத் துறை அமைச்சர் முரளி தியோரா, ''தேசியமயம் என்பதெல்லாம் பழங்காலக் கதை'' என நாடாளுமன்றத்திலேயே நக்கலடித்து, முகேஷ் அம்பானிக்கு முட்டுக் கொடுத்திருக்கிறார்.

பாம்பும் சாகக்கூடாது தடியும் நோகக்கூடாது என்ற வகையில் சி.பி.எம்.முன்வைத்த, ''எரிவாயுவை எடுக்கும் குத்தகை உரிமை முகேஷ் அம்பானியிடமே இருக்கட்டும்; அதனை விநியோகிக்கும் உரிமையை அர எடுத்துக் கொள்ளட்டும்'' என்ற ஆலோசனையையும் மைய அர ஒதுக்கித் தள்ளிவிட்டது.

இதுமட்டுமா, முகேஷ் அம்பானியின் நிறுவனம் ஏலத்தில் ஒப்புக் கொண்டபடி, தேசிய அனல்மின் கழகத்திற்கு ஒரு மெட்ரிக் டன் இயற்கை எரிவாயுவை ரூ. 120/-க்கு வழங்காமல், கடந்த நான்காண்டுகளுக்கும் மேலாக இழுத்தடித்து வருகிறது. இதனால், அம்மின்கழகம் கட்டி முடித்துள்ள இரண்டு மின் நிலையங்களும் இயங்க முடியாமல் முடங்கிப் போயுள்ளன.

முகேஷ் அம்பானியின் இந்த அடாவடித்தனத்தைத் தெரிந்திருந்தும்கூட, மைய அர கடந்த நான்காண்டுகளாக இப்பிரச்சினையைக் கண்டும் காணாமல் நடந்து கொண்டு, கூடுதல் விலை கொடுத்தே எரிவாயுவை வாங்கும்படி அம்மின்கழகத்திற்கு மறைமுகமாக நிர்பந்தம் கொடுத்து வந்தது. கூடுதல் விலை கொடுத்து, அர நிர்ணயித்துள்ள விலைக்கு முகேஷ் அம்பானியிடமிருந்து எரிவாயுவை வாங்கினால், அம்மின் கழகத்திற்கு 30,000 கோடி ரூபாய் வரை நட்டமேற்படும் என்பதும் மைய அர க்குத் தெரியாத இரகசியமல்ல. மன்மோகன் சிங் அரசின் முகேஷ் அம்பானி பாசம் அம்மணமாக வெளியே தெரிந்த பிறகுதான், தனது 'தேசிய நலனை'க் காட்டிக் கொள்ள, இப்பிரச்சினையில் தேசிய அனல்மின் கழகத்தை ஆதரிக்கப் போவதாக மைய அர சவடால் அடித்து வருகிறது.

அனில் அம்பானி, முகேஷ் அம்பானிக்கு எதிராகத் தொடுத்த வழக்கைச் சூட்டோடு சூடாக விசாரித்துத் தீர்ப்பளித்த மும்பய் உயர்நீதி மன்றம், தேசிய அனல்மின் கழகம் முகேஷ் அம்பானி நிறுவனத்திற்கு எதிராக 2005-ஆம் ஆண்டில் தொடுத்த வழக்கை விசாரணை என்ற பெயரில் நான்காண்டுகளாக இழுத்தடித்து வருகிறது. இதனைத் தனக்கும், முகேஷ் அம்பானிக்கும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்தோடு, இவ்வழக்கில் அளிக்கப்படும் தீர்ப்பைப் பொறுத்துதான் தேசிய அனல்மின் கழகம் அடுத்த நடவடிக்கைக்குச்

காங்கிரசு கூட்டணி அரசைப் பொதுமக்கள் ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுத்திருக்கலாம். அந்த 'மக்கள்' அரசை முகேஷ் அம்பானி குத்தகைக்கு எடுத்திருக்கிறார் என்பதே உண்மை.

செல்லும் என அறிவித்து, இப்பிரச்சினையை முடிந்த மட்டும் தள்ளிப் போடும் சதிராட்டத்திலும் இறங்கியிருக்கிறது, மைய அர . மேலும், தேசிய அனல்மின் கழகம் இப்பிரச்சினையை உச்சநீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்ல முயன்றதையும் கைகழுவியதன் மூலம், முகேஷ் அம்பானியை முடிந்த மட்டும் காப்பாற்ற முயன்று வருகிறது, மன்மோகன் சிங் கும்பல்.

அம்பானி குடும்பம் உலகப் பெரும் பணக்காரர்களுள் ஒன்றாக வளர்ந்த வரலாற்றைப் புரட்டிப் பார்த்தோமானால், அதில் காங்கிர கட்சியின் பங்கு கணிசமாக இருப்பதைத் தெளிவாகக் காண முடியும். விமல் ஜவுளி ஆலையை நடத்திவந்த திருபாய் அம்பானிக்கும் பாம்பே டையிங் முதலாளி நுஸ்லி வாடியாவுக்கும் வியாபார மோதல் வந்தபொழுது, அப்பொழுது பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி திருபாய் அம்பானியை ஆதரித்து நின்றார். அம்பானி சகோதரர்கள் ஒன்றாக இருந்து நடத்திய ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலான தொலைபேசிக் கட்டண மோசடியில் எவ்விதத் தண்டனையுமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

முகேஷ் அம்பானி குஜராத் மாநிலம் ஜாம் நகரில் நடத்தி வரும் எண்ணெய் த்திகரிப்பு ஆலையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பெட்ரோலியப் பொருட்களின் மீது எவ்வித ஏற்றுமதி வரியும் விதிக்கப்படாமல் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டுத் தேவையைப் புறக்கணித்துவிட்டு அவ்வாலையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுவதற்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையைப் பரிசீலிக்கக்கூட மன்மோகன் சிங் மறுத்து வருகிறார். இந்த ஆண்டு பட்ஜெட்டில், எரிவாயுவைப் பிற இடங்களுக்குக் கொண்டு செல்லும் குழாய்களைப் பதிக்கும் தொழிலில் போடப்படும் மூலதனத்திற்குப் பல்வேறு வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. இது, முகேஷ் அம்பானிக்காகவே கொண்டு வரப்பட்ட வரிச் சலுகை எனக் கூறப்படுகிறது. இப்படி இந்திய அரசையும், ஓட்டுக் கட்சிகளையும் ஆட்டிப் படைத்து, அம்பானி குடும்பம் அனுபவித்து வரும் சலுகைகளைப் பட்டியல் போட்டால், அதற்கு இந்த இதழே போதாது.

ருக்கமாகச் சொன்னால், காங்கிர கூட்டணி அரசைப் பொதுமக்கள் ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுத்திருக்கலாம். அந்த 'மக்கள்' அரசை முகேஷ் அம்பானி குத்தகைக்கு எடுத்திருக்கிறார் என்பதே உண்மை.

• **ரஹீம்**

# இலங்கைத் தூதரகத்தின் கைக்கூலி பத்திரிகையாளர்கள்!

தமிழக ஊடகவியலாளர்களிடையே சமீபத்தில் பரபரப்பாகப் பேசப்படும் ஒரு விஷயம், விகடன் குழுமத்திற்குச் சொந்தமான ஜூனியர் விகடன் இதழில் நிர்வாக ஆசிரியராக இருந்த விகேஷ் என்பவர் அதிரடியாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்பது பற்றித்தான். அவருக்கு சென்னையில் மட்டும் சொந்தமாக நான்கு வீடுகள் இருப்பதாகவும், சில பெரிய புள்ளிகளோடு சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாகவும், அது தொடர்பான கட்டப் பஞ்சாயத்துகள் போன்றவற்றில் நீண்டகாலமாகவே அவர் கைதேர்ந்தவர் என்றும், ஒட்டுமொத்தமாக தன் தொழிலுக்கு ஜூனியர் விகடன் பெயரைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டதாகவும் கூறுகிறார்கள்.

சமீபத்தில் மோசடி வைத்தியசாலை தொடர்பான கட்டுரை ஒன்றைப் பிரசுரிக்காமல் தவிர்த்ததைத் தொடர்ந்து, நிர்வாகம் அவரைக் கண்காணித்ததாகவும் தனியார் துப்பறியும் நிறுவனம் மூலமாக விசாரணை நடத்தியதில் பல லட்சமோ, கோடியோ மோசடி நடந்திருப்பது உறுதியானதாகவும், அதன் தொடர்ச்சியாகத்தான் விகேஷ் அலுவலகத்துக்குள் அனுமதிக்கப்படாமலேயே வீட்டிற்கு அனுப்பப் பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இதைக்காட்டிலும் தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியூட்டத்தக்க குற்றச்சாட்டு ஒன்றும் உள்ளது. அது விகேஷ் இலங்கைத் தூதரகத்துடன் வைத்திருந்த உறவு தொடர்பானது. இன அழிப்புப் போரின் போது தமிழகத்து அரசியல்வாதிகளையும், பத்திரிகையாளர்களையும் 'திறமையாக'க் கையாண்டதற்காக சென்னையில் இலங்கை அரசின் துணைத்தூதராக இருந்த அம்சாவுக்கு பதவி உயர்வு கொடுத்து இலண்டனுக்கு அனுப்பி வைத்தது, இலங்கை அரசு. தமிழ் ஊடகவியலாளர்களில் சிலர் அம்சாவோடு மிக நெருக்கமாகப் பழகி வந்திருக்கிறார்கள். போருக்கு முன்னர்; இலங்கை அரசின் பிரச்சாரத்தை முன்னெடுக்க அவர்களுக்குச் சன்மானங்கள் வழங்கப்பட்டன. போரின் வெற்றிக்குப் பின்னர், செய்த வேலைக்காக சன்மானமும் விருந்தும் வைக்கப்பட்டது.

அம்சாவிடம் கேள்வி எழுதிக் கொடுத்து ராஜபட்சேவிடம் பதில் வாங்கி, அதைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தன, சில ஊடகங்கள். போர் தீவீரமாக நடந்த காலத்தில் வழக்கறிஞர்களும் மாணவர்களும் அரசியல் அமைப்புகளும் போர் நிறுத்தம் கேட்டு போராடிய காலத்தில், இலங்கைத் தூதரகம் துரோகி கருணாவின் நேர்காணலுக்கான ஏற்பாட்டைச் செய்து, இங்குள்ள எல்லா பெரிய ஊடக நிறுவனங்களிலும் அது வெளியானது. ஜூனியர் விகடன் இரண்டு வாரமாக துரோகி கருணாவின் பேட்டியை வெளியிட்டது. இந்த நேர்காணல்களை வெளியிடும் சுதந்திரம் எல்லா ஊடகங்களுக்குமே உண்டு என்று வாதிடலாம். ஆனால், அதிர்ச்சிகரமான செய்தி என்ன வென்றால், புலிகளின் அரசியல் பிரிவுத்தலைவர் பா.நடேசனின் நேர்காணலை ஜூனியர் விகடனும், டெக்கான் குரோனிக்கலும் வெளியிட மறுத்து கருணாவின் நேர்காணலை வெளியிட்டதுதான்.

சிங்கள பாசிச இனவெறிக்கு ஆதரவாக ஊடகவியலாளர்களை விலை பேசிய, இலங்கையின் முன்னாள் துணைத்தூதர் அம்சா.



தமிழ் ஊடகங்களில் உள்ள கணிசமான பத்திரிகையாளர்கள் வளைக்கப்பட்டார்கள். சில மானமுள்ள பத்திரிகையாளர்கள் அம்சாவின் அன்பளிப்புகளைப் புறக்கணித்தும் இருக்கிறார்கள்.இலங்கை தூதரகத்தின் செயல்பாடுகளைக் கண்டித்தும் அம்பலப்படுத்தியும் எழுதிய ஊடகங்களும் உண்டு. போருக்கு முன்னரும் பின்னரும் ஆங்கிலம் பேசும் ஊடகவியலாளர்களை கொழும்புக்கு அழைத்துச் சென்று குளிப்பாட்டியும். தமிழ் பேசும் ஊடகவியலாளர்களை சென்னையிலேயே குளிப்பாட்டியதும் கூட நடந்திருக்கிறது.

இதில் விகேஷ் மட்டுமல்ல, ஜூனியர் விகடன் குழுமத்தில் இப்போதும் பணியாற்றிவரும் ஒருவர்தான் அம்சாவுக்கு அதிகமான தரகு வேலை பார்த்ததாகவும், இப்போது புதிதாக வந்திருக்கும் துணைத் தூதருக்கும் அவரே ஊடகத் தரகராக இருப்பதாகவும் பேச்சு அடிபடுகிறது.

இவரது பணி வித்தியாசமானது; யாராவது புலிகளை ஆதரித்து எழுதினால், உடனே இவர் விகடனின் தீவீர வாசகர் என்ற போர்வையில் பிரமுகர்களை அழைத்துக் கொண்டு விகடன் நிர்வாகத்தினரைப் பார்க்கச் செல்வார். இவர் அழைத்துச் செல்லும் நபர் இலங்கை தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்படுபவராக இருப்பார். இவர் போய் 'விகடனில் ஒரே புலி ஆதரவு கட்டுரையாக வருகிறது' என்று பற்ற வைப்பார். இலங்கை தூதரகத்தால் இவருக்கு வழங்கப்பட்ட பல பணிகளில் இதுவும் ஒன்று.

தனிப்பட்ட பத்திரிகையாளர்கள் மட்டுமல்ல, சென்னை அரசினர் தோட்டத்திற்குள் இருக்கும் பத்திரிகையாளர் மன்றம் என்கிற அமைப்பின் பழைய கட்டிடம் இடிக்கப்பட்டு நவீன வசதிகளுடன் புதிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. தமிழ் ஊடகவியலாளர்களுக்காகக் கட்டப்பட்ட இந்த கட்டிடத்திற்குப் பெயர் வைக்கும் போது ஒரு பைசாத் தமிழன் இதழை நடத்திய அயோத்திதாசப் பண்டிதரின் பெயர் முதல் தினத்தந்தி ஆதித்தனார் பெயர் வரை, ஏதாவது ஒரு ஊடகவியல் சார்ந்தோரின் பெயரை வைத்திருக்கலாம்.

ஆனால், அக்கட்டிடத்திற்கு வைக்கப்பட்ட பெயர் என்ன தெரியுமா? '' எஸ்.ஆர். எம். மாளிகை''. அதாவது, எஸ்.ஆர். எம். கல்லூரி முதலாளி பச்சைமுத்துவின் நிதியில் அந்தக் கட்டிடம் கட்டப்பட்டதால், அவர் பெய

ரையே கட்டிடத்திற்கு வைத்து விட்டார்களாம். இலங்கை அரசின் முன்னாள் அதிபர் சந்திரிகா விடம் விருது வாங்கியவரும் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு எதிராக நஞ்சைக் கக்கிவருபவரு மான ஹிந்து ராமைக் கொண்டு 'எஸ்.ஆர்.எம்' என்ற அந்தக் கட்டிடம் திறக்கப்படுகிறது என் றால், பத்திரிகையாளர் மன்றத்தின் இன்றைய சில துரோக நிர்வாகிகளுக்கும் இலங்கைத் தூத ரகத்திற்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா என் பதை ஊடக நிறுவனங்கள் விசாரித்திருக்க வேண்டும்.




எஸ். ஆர்.எம். கல்லூரியின் மர்ம அறையில் மாணவர்களை அடைத்து வைத்துத் தாக்கிய தும். அந்தக் கல்லூரியின் தொழில் நுட்பச் சான் றிதழ்கள் செல்லாதவை என்று இந்திய தொழில் கூட்டமைப்பு அறிவித்தது குறித்தும் எஸ். ஆர். எம். கல்லூரி நிர்வாகத்தின் கட்டணக் கொள்ளை குறித்தும் யோக்கியமான எந்தப் பத் திரிகையாவது வெளியில் கொண்டு வந்திருக்கிறதா? போர் கொடூரமாக நடந்த காலத்தில், போர் நிறுத்தம் கோரியோ சிங்கள இனவெறி அரசைக் கண்டித்தோ ஒரு அறிக்கை கூட வெளியிடவில்லை இந்த ஊடக அமைப்பு. காரணம் இதில் தலைமைப் பொறுப்பில் உள்ள சிலர் எது செய்தாலும் இந்து ராமிடம் கேட்டுத்தான் செய்வார்களாம்.

ஈழத்தமிழினத்திற்கெதிராக நடைபெற்ற ஒரு இன அழிப்பு போரை இருட்டடிப்பு செய்வதற்காகவும், சிங்கள இனவெறி அரசை நியாயப்படுத்துவதற்காகவும் கைநீட்டி காசு வாங்கிய பத்திரிகையாளர்களின் குற்றம் வெறும் ஊழல் குற்றமல்ல. அது போர்க்குற்றத்திற்கு இணையாக, தண்டிக்கப்பட வேண்டிய ஒரு கிரிமினல் குற்றம். இவர்கள் இனப்படுகொலையின் கூட்டாளி கள்.

எண்ணிப்பாரக்கவே இயலாத இந்த அருவருப்பான நடவ டிக்கை சிறு சிறு ஊழல்கள் வழியாகத்தான வளர்ந்து விசுவரூ பமெடுத்திருக்கிறது. மாணவ நிருபராக இருந்து ஜூனியர் விக டனுக்கு நிர்வாக ஆசிரியராக வந்தவர்தான் விகேஷ். பொறுப் புக்கு வந்த மாணவ நிருபர்கள் மிக மிக தந்திரமாக செய்த ஒரு விஷயம், தங்கள் இருப்புக்கு இன்னொரு மாணவ நிரு பர் உலைவைத்து விடாமல் பார்த்துக் கொண்டதுதான். ஒரு கட்டத்தில் மாணவ நிருபர்களின் வரவே குறைந்து ஒப்புக்கு மட்டும் அந்தத் திட்டம் இப்போது விகடனில் இருப்பதாக அறிய முடிகிறது.

நேர்மை, ஊடக தர்மம், எழுத்தை மட்டுமே நம்பி வாழ் கிற பத்திரிகையாளர்கள் பிழைக்கத் தெரியாதவர்களாகவும், ஊழல், செல்வாக்கை வளர்த்து அதிகார பீடங்களுக்கு வருப வர்கள் திறமைசாலிகளாகச் சித்தரிக்கப்பட்டதும் ஊழல்மயப் பட்ட ஊடக ஒழுக்கம் கட்டமைத்த கருத்தியலே. அந்தக் கருத் தியலின் ஒரு நவகால அடையாளம் மட்டுமே விகேஷ். ஒரு எல்லை வரை ஊழல், கட்டப்பஞ்சாயத்து போன்ற இழி செயல் களை எல்லா ஊடக நிறுவனங்களும் அனுமதித்தே வந்திருக் கின்றன. தமிழ் மக்களின் மனச்சாட்சி. நாடித்துடிப்பு என்றெல் லாம் பறைசாற்றிக் கொள்ளும் இந்த ஊடகங்கள் பத்திரிகை யாளர்களுக்கு வழங்கும் ஊதியம் மிகவும் சொற்பமானது. உழைப்பைச் சுரண்டி ஊதியம் கொடுக்காத முதலாளிகள் ஒரு எல்லை வரை தனது நிருபர்கள் வெளியில் லஞ்சம் வாங்கு வதை அனுமதிக்கிறார்கள். இதுதான் பெரும்பலான தமிழக பத்திரிகையாளர்களின் நிலை.

தொடக்க காலத்தில் போலீ அக்கிரமங்களை வெளிக்கொண்டு வந்த ஜூனியர் விகடன், நாளடைவில் போலீ புகழ்பாடத் துவங்கியது. போலீசை வைத்து வாசகர்களுக்குச் சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிலைக்கு அது வளர்ந்து சென்றது. சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு வழக்க றிஞர்கள் இருக்க, போலீசாரைக் கொண்டு சட்ட விழிப்பு ணர்வை ஏற்படுத்துவதில் தொடங்குகிறது விகடன் நிருபர்களின் போலீ கூட்டு. ரௌடி, போலீ, அரசியல்வாதி கூட்டணி யோடு பத்திரிகையாளர்களில் சிலரும் இணைந்து வளர்ந்த கதை சுவாரசியமானது. போலீசார் நடத்திய கட்டப்பஞ்சாயத் துகளில் பத்திரிகையாளர்களும் கூட்டு சேர்ந்து தொழில் துரோ கம் செய்த விஷயங்கள் ஏராளமாக இருக்கின்றன. காலம் தோறும் இத்தகைய மோசடிப் பேர்வழிகள் குமுதம், விகடன் குமுமம், நக்கீரன் என எல்லா ஊடகங்களிலுமே இருந்துதான் வந்திருக்கிறார்கள். ஆனால், அதிர்சியளிக்கும் விஷயமாக அத் தனை பேரும் பேசிக் கொள்வது விகடனுக்குள்ளேயே இது நடந்து விட்டது என்பதுதான்

பாரம்பரியமிக்க பத்திரிகை நிறுவனம் எங்களுடையது என்று மூச்சுக்கு முந்-று தடவைச் சொல்லிக் கொள்ளும் விக டன் தங்கள் நிறுவனத்தின் பெயரை தவறான வகையில் பயன் படுத்திய மோசடிப் பேர்வழி விகேஷ் மீது ஏன் சட்ட நடவ டிக்கை எடுக்க வில்லை என்கிற கேள்வி இங்கே முக்கியமா னது. சில வருடங்களுக்கு முன்பு இதே ஜூனியர்விகடனில் புதி தாக வேலைக்குச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் பிரச்சினை ஒன்றில் செய்தியை வெளியிடாமல் இருக்க, சம்பந்தப்பட்டவர் களை மிரட்டுகிற தொனியில் பேசி வகையாகச் சிக்கிக் கொண் டார். அப்போது ஜூனியர் விகடன் நிர்வாகத்தினர், அவரை போலீசில் ஒப்படைத்தார்கள். அவர் சிறைக்கு அனுப்பப்பட் டார். விகேஷ் போன்றோரின் குற்றங்களை ஒப்பிடும்போது அது மிகச்சாதாரண குற்றம்.

இலங்கைத் தூதரின் விருந்தைச் சுவைத்தவர்கள் முதல் எலும்பைச் சுவைத்தவர்கள் வரையிலான எல்லா குற்றவாளிக ளும் அடையாளம் காட்டப்படவேண்டும். இதனைத் தெரிந்து கொள்வது தமிழ் மக்களின் உரிமை. ஆதாரங்கள் தெரியாத வண்ணம் இழைக்கப்படும் இத்தகைய குற்றங்களுக்கான ஆதா ரங்களை அம்பலமாக்குவது நேர்மையான பத்திரிகையாளர் கள் ஒவ்வொருவரின் கடமை.

●இளநம்பி

## செல்வராசா பத்மநாதன் கைது:

# சிங்கள பாசிச பயங்கரவாத அரசின் தாக்குதல் தொடர்கிறது

ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனைத் தொடர்ந்து, அந்த அமைப்பின் புதிய தலைவராகவும், தேசங்கடந்த ஈழத்தை நிறுவியுள்ளதாகவும் அறிவித்துக் கொண்ட ''கே.பி.'' என்று அறியப்படும் செல்வராசா குமரன் பத்மநாதன் இலங்கை சிங்கள பாசிச - பயங்கரவாத அரசின் உளவுப் படையினரால் தென்கிழக்காசிய நாடொன்றிலிருந்து கைது செய்யப்பட்டு, இலங்கைக்குக் கடத்திச் செல்லப்பட்டு, கொழும்பு வதை முகாம் ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டு, மிகத் தேர்ச்சி பெற்ற இராணுவப் புலனாய்வுத் துறை உயர் அதிகாரிகளால் விசாரணை செய்யப்பட்டு வருகிறார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கே.பி. எங்கு, எப்போது, எவ்வாறு கைது செய்யப்பட்டார், விசாரணையின் போது அவர் இலங்கைப் புலனாய்வுத் துறைக்கு என்னென்ன தகவல்களைத் தெரியப்படுத்தியுள்ளார் ஆகியவை பற்றி பல்வேறு செய்திகள் பரவியுள்ளன. தற்போது பிளவுபட்டுள்ள புலிகளின் வெவ்வேறு குழுக்கள் முரண்பாடான பல செய்திகளைத் தமது வானொலி மற்றும் இணையத்தளங்கள் மூலம் அறியத் தருகின்றன.

புலிகளின் தலைமை முற்றாக ஒழிக்கப்பட்ட பிறகும், இலங்கை அரசினால் பலமுறை சரணடையும்படி எச்சரிக்கப் பட்டும் தொடர்ந்து ஈழத்தின் காடுகளில் வாழ்ந்து வரும் ராம் என்பவர் தலைமையிலான கிழக்கு மாகாணப் புலிகளே கே.பி.யைக் காட்டிக் கொடுத்தனர் என்றவாறு கே.பி.யின் விசுவாசிகள் நடத்தும் இணையத்தளம் கூறுகிறது.

ஆனால், கிழக்கு மாகாணப் புலிகளின் விசுவாசிகளோ, வேறு இரு பிரிவினர் மீது குற்றஞ்சுமத்துகின்றனர். புலிகளின் ஒட்டுமொத்த அழிவிற்கும் கே.பி.யே காரணமென்று பகிரங்கமாகத் தெரிவித்துள்ளது, சமீபத்தில் நார்வே நாட்டு போலீசால் கைது செய்யப்பட்டு, விசாரணைக்குப் பிறகு விடுவிக்கப்பட்டுள்ள நெடியவன் என்ற பெரியநாயகன் சிவப்பரன் தலைமையிலான புலம் பெயர் புலிகள் தரப்பு. கே.பி. கைதுடன், தமது கை ஓங்கி உள்ளதாகவும் தாமே எதிர்வரும் காலத்தில் புலிகளின் ஏகத் தலைமை என இத்தரப்பு தெரிவித்து வருகிறது. புலிகளின் தலைமையைக் காட்டிக் கொடுத்ததற்காக நெடியவன் தரப்பினராலோ அல்லது இன்னமும் இலங்கை இராணுவத்தின் கைதியாக இருப்பதாக நம்பப்படும் புலிகளின் உளவுத்துறைத் தலைவர் பொட்டு அம்மன் சதியினாலோ ''கே.பி.'' கைது செய்யப்பட்டிருக்கலாம் என்று கிழக்கு மாகாணப் புலிகளின் விசுவாசிகள் கூறுகின்றனர்.

கே.பி. அளித்த வாக்குறுதியின் பேரில் சரணடையச் சென்று, இலங்கை இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர் நடேசனின் மகனும் சகோதரரும் மலேசியாவிலுள்ள ''டியூன் விடுதி'' அறையில் கே.பி.யுடன் பேசிக் கொண்டிருந்தபோது, அழைப்பு வந்து கே.பி. வெளியே சென்றபோது கைது செய்யப்பட்டதாக அவ்விருவரும் கூறியுள்ளனர். இச்செய்தி புலிகளின் வானொலியிலும் ஒலிபரப்பாகி, பின்னர் மறைத்துக் கொள்ளப்பட்டது. நடேசனின் மகனும் சகோதரரும் கே.பி.யுடன் சேர்த்து கைது செய்யப்படாதது, பொட்டு அம்மன் இன்னமும் இலங்கை இராணுவக் கைதியாக இருப்பதாகக் கூறப்படுவது ஆகியவற்றை முடிச்சுப் போட்டு இலங்கை அரசு - பொட்டு அம்மன் - நடேசன் உறவினர் சதியும் கே.பி.யின் கைதிற்குக் காரணமாக இருக்கலாம் என்று கிழக்கு மாகாணப் புலிகளின் விசுவாசிகள் கூறுகின்றனர்.

ஈழத்தில் பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழரைப் படுகொலை செய்ததினூடாகப் புலித் தலைமையை முற்றாக அழித்த இன அழிப்புப் போரின் அடுத்த கட்டமாக, இலங்கை சிங்கள - பாசிச - பயங்கரவாத அரசு தனது தாக்குதல் வேட்டையை மேலும் விரிவுபடுத்தியிருக்கிறது. ஈழத் தமிழரிடையே குறிப்பாக, ஈழத்தில் எஞ்சியுள்ள மற்றும் புலம் பெயர்ந்த புலிகள் மத்தியிலே நிலவும் பிளவு இத்தாக்குதலுக்கு மிகவும் வசதியாக உள்ளது.

''பயங்கரவாதத்துக்கு எதிரான போர்'' என்ற பெயரில் அமெரிக்க மேல்நிலை வல்லரசின் தலைமையிலான உலகப் பிற்போக்கு பாசிச-பயங்கரவாத அரசுகளின் அணியில் இலங்கை ஆளும் ராஜபக்சே கும்பல் தன்னை இணைத்து கொண்டது இன்னொரு வசதியாகிப் போயுள்ளது. புலித் தலைமையைப் பூண்டோடு ஒழித்து விட்டதாக இலங்கை அரசு அறிவித்து விட்டபோதும், இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களைக் கண்டிப்பதாக கூறியபோதும் புலிகள் அமைப்பு மீதான தடையை அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் நீக்கிவிடவில்லை; நீட்டிக்கவே செய்கின்றன. இதைப் பயன்படுத்திக் கொண்டு உலகின் பல நாடுகளிலும் 'புலி வேட்டை'யை சிங்கள பாசிச-பயங்கரவாத அரசு நடத்துகிறது.



இலங்கை அரசினால் மர்மமான முறையில் கைது செய்யப்பட்டுக் கடத்திச் செல்லப்பட்ட விடுதலைப்புலிகளின் 'புதிய தலைவர்' பத்மநாதன்.

கே.பி.யைத் தொடர்ந்து, மேலும் பல புலி அமைப்பாளர்கள் மற்றும் புலி ஆதரவாளர்கள் என்று கருதப்படுபவர்களைக் கைது செய்து நாடு கடத்தும்படி இலங்கை அரசு பிற நாடுகளிடம் கேட்டுள்ளது. அவர்களுள் முக்கியமானவர்கள், கே.பி.யால் அறிவிக்கப்பட்ட தேசங்கடந்த தமிழ் ஈழ அரசாங்கத்தின் அமைப்புத் திட்டத்தை வரைவதற்கான குழுவின் ஒருங்கிணைப்பாளர் விசுவநாதன் உருத்திர

குமாரன். இவர் அமெரிக்காவில் வாழும் புலி ஆதரவு வழக்கறிஞர். ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல, சிங்களவர்கள்கூட இலங்கை அரசால் வேட்டையாடப்படும் புலி ஆதரவாளர்கள் பட்டியலில் உள்ளனர். முக்கியமாக ஜயந்தா ஞானகோனே, சார்லஸ் ஞானகோனே ஆகிய சகோதரர்கள். இவர்கள் முன்பு இலங்கை அரசுக்கும் புலி அமைப்புக்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தையில் உதவினார்கள் என்பதற்காகவே, புலிகளுக்காகப் பணம், ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டதாக இச்சகோதரர்கள் மீது முத்திரை குத்தி, நாடு கடத்தி ஒடுக்குவதற்கு இலங்கை அரசு எத்தணிக்கிறது.

''புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்படவில்லை; உயிருடன் இருக்கிறார்'' என்று அறிவித்த வரை கே.பி.யை நம்பத்தகுந்தவர் என்று கூறி வந்த தமிழ்நாட்டுத் தமிழினவாதிகள், பிரபாகரனின் சாவை உறுதி செய்து, அமைதி வழியில் தேசங்கடந்த தமிழீழத்தை அமைப்பதாகவும், தன்னையே இனிப் புலிகளின் தலைவரென்று அறிவித்தவுடன் ''இவர் பன்னாட்டு போலீசால் தேடப்படும் கிரிமினல்'' என்று கூறி நிராகரித்திருக்கிறார்கள். ''புலித் தலைவர் பிரபாகரன் உயிருடனே இருக்கிறார், ஒரு நாள் திடீரென்று வருவார்'' என்று இன்னமும் சாதித்து வரும் இந்தத் தமிழினவாதிகள், பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டார் என்ற அடிப்படையில் செயல்பட முயலும் புலிகள் / புலி ஆதரவாளர்கள் அனைவரையும் நிராகரிக்கிறார்கள். எனவேதான், அவர்களுக்கு எதிராக இலங்கை அரசு எடுக்கும் பாசிச-பயங்கரவாத வேட்டையைக் கூட கண்டு கொள்ளாது வாய்மூடிக் கிடக்கிறார்கள்.

ஆனால், கடந்த காலத்திலும் சரி, தற்போதும் சரி புலிகளின் அரசியல், நடைமுறைகளோடு உடன்படாதபோதும், ''பயங்ரவாதத்திற்கு எதிரான போர்'' என்ற பெயரில் அமெரிக்கா, இசுரேல் போன்ற வக்கிரமாக மனித உரிமைகளை மீறும் இலங்கை சிங்கள பாசிச-பயங்கரவாத அரசு மேற்கொள்ளும் காட்டுமிராண்டித்தனமான ''புலி வேட்டை''யை ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது. உண்மையில், இலங்கை சிங்கள - பௌத்த இன-மதவெறி பாசிச-பயங்கரவாதிகள் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பது புலிகளின் பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் ஈழத் தமிழின அழிப்புப் போர் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

● ஆர்.கே.

## நேபாளக் குண்டு வெடிப்பு:

# இந்து மதவெறி பயங்கரவாதிகளின் சதிகள்

இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுக்குத் தெற்கேயுள்ள புறநகரான லலித்பூரின் தேவாலயத்தில் அன்று அமைதியாக வழிபாடு நடந்து கொண்டிருந்தது. ஏறத்தாழ 500-க்கும் மேற்பட்ட கிறித்தவர்கள் வழிபாட்டுக்குத் திரண்டிருந்தனர். தலைமைப் பாதிரியார் பைபிளை மேற்கோள் காட்டிப் பிரசங்கம் செய்தபொழுது, திடீரென பேரொலியுடன் குண்டுகள் வெடித்தன. எங்கும் புகைமூட்டம்; தேவாலயத்தின் கண்ணாடி சன்னல்களும் மேசை - நாற்காலிகளும் நொறுங்கிச் சிதறின; ''யேசுவே! ஆண்டவரே!'' என எங்கும் மரண ஓலம். கடந்த மே 23-ஆம் தேதியன்று நடந்த இக்குண்டு வெடிப்பில் தீபா பாட்ரிக், செலஸ்டி எனும் இரு இளம் பெண்கள் கொல்லப்பட்டு இரத்த வெள்ளத்தில் மிதந்து கிடந்தனர். பாதிரியார்கள் உள்ளிட்டு 12 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் குற்றுயிராகக் கிடத்தப்பட்டனர்.

தீபா பாட்ரிக்கும், செலஸ்டியும் இந்தியாவின் பாட்னாவைச் சேர்ந்த மாணவிகள். அவர்கள் நேபாளத்தின் லலித்பூரிலுள்ள தமது உறவினரைச் சந்திக்கச் சென்றிருந்தனர். அந்தச் சிறுநகரம் அமைதியாகவும் அழகாகவும் உள்ளதென்று தீபா தனது தாயாருக்கு மின்னஞ்சல் மூலம் கடிதம் அனுப்பியிருந்தார். இளமைக் கனவுகளோடு பறந்து வந்த தீபா இன்று உயிருடன் இல்லை.

லலித்பூர் தேவாலயத்தில் வழிபாடு நடந்து கொண்டிருந்தபோது, சன்னலோரத்தில் ஒரு கருப்பு நிற பாலிதீன் பை கிடந்ததாகவும், அதைத் தேவாலய ஊழியர்கள் அப்புறப்படுத்த முயற்சித்தபோது குண்டுகள் வெடித்ததாகவும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவோர் சாட்சியமளித்துள்ளனர். நேபாளத்தில், மாவோயிஸ்டு அமைச்சரவை பதவி விலகிய பின்னர், புதிய பிரதமராக மாதவகுமார் நேபாள் பதவியேற்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக இக்கொடிய குண்டுவெடிப்பு நடந்துள்ளது.

**லலித்பூர் தேவாலயத்தில் இந்துவெறி பயங்கரவாதத் தாக்குதலின் கோரம்: மதச்சார்பற்ற குடியரசைக் கவிழ்க்கும் சதி.**



இக்குண்டு வெடிப்புகளை நேபாள பாதுகாப்புப் படை (NDA) எனப்படும் இந்துவெறி பயங்கரவாத கும்பல் நடத்தியுள்ளது. இது தொடர்பாக இக்கும்பலைச் சேர்ந்த ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார். ''நேபாளம், இந்துக்களின் தாயகம். அதை மதச்சார்பற்ற நாடாக மாற்றுவதை அனுமதிக்க முடியாது. கிறித்தவர்களும் முஸ்லீம்களும் சீக்கியர்களும் சமணர்களும் பவுத்தர்களும் இந்த மண்ணில் இருக்கவே கூடாது'' என்று அவர் வெளிப்படையாகவே வாக்குமூலமும் அளித்துள்ளார். ராம் பிரசாத் மைனாலி என்பவன் இப்பயங்கரவாதக் கும்பலின் தலைவன் என்றும் அவனும் இக்கும்பலும் தலைமறைவாகச் செயல்படுகின்றன என்றும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.



**நேபாள மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசை வீழ்த்த, சதிகளில் இறங்கிய பா.ஜ.க.வின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இந்துவெறி பயங்கரவாதியுமான யோகி ஆதித்யநாத்.**

இந்துக்கள் நிறைந்த நாடாக இருந்த போதிலும் நேபாள வரலாற்றில் இந்து வெறியாட்டங்களோ, மதக்கலவரங்களோ நடந்ததில்லை. மன்னராட்சி காலத்தில் மதச்சிறுபான்மையினரின் உரிமைகள் நசுக்கப்பட்டிருந்த போதிலும், பயங்கரவாதத் தாக்குதல்கள் நடந்ததுமில்லை. நேபாள பாதுகாப்புப் படை போன்ற இந்துவெறி பயங்கரவாதக் கும்பல்களும் செயல்பட்டதுமில்லை. மாவோயிஸ்டுகள் தலைமையில் மன்னராட்சி வீழ்த்தப்பட்டு, புதிய அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்புதிய அரசியல் நிர்ணய சபை நேபாளத்தை மதச்சார்பற்ற குடியரசாக அறிவித்த பின்னரே இப்படியொரு இந்துவெறி கும்பல் கிளம்பி பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

நேபாளத்தை மதச்சார்பற்ற குடியரசாகப் பிரகடனம் செய்து அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்கள் உறுதிமொழி ஏற்ற போது, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இக்கும்பல் தலைநகர் காத்மாண்டுவில் அடுத்தடுத்து இரு குண்டுவெடிப்புகளை நடத்தியது. அதன்பிறகு, நேபாள ஐக்கிய மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி அலுலகத்தின் மீதும், மருந்து நிர்வாக அலுவலகத்தின் மீதும் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியது. கடந்த ஆண்டில், நேபாளத்தின் கிழக்கு மாவட்டத்தில் ஒரு மசூதியில் குண்டு வெடிப்புகளை நடத்திய இக்கும்பல் இருவரைக் கொன்றொழித்தது. கடந்த ஜூலையில் சிர்சியா நகரிலுள்ள டான் போஸ்கோ பள்ளியின் தாளாளரான பாதிரியார் ஜான் பிரகாஷ் என்பவரை இக்கும்பல் கோரமாகக் கொன்றொழித்துள்ளது. குண்டு வெடிப்புகள், படுகொலைகள் நிகழ்ந்த இடங்களில் இக்கும்பலால் வீசியெறியப்பட்ட பிரசுரங்களில் ''மதச்சார்பின்மையை முறியடிப்போம்! நேபாளத்தை இந்து நாடாக்குவோம்!'' என்ற மைய முழக்கங்கள் தவறாமல் இடம் பெற்றுள்ளன.

மன்னராட்சியை வீழ்த்தியுள்ள நேபாளம், மதச்சார்பற்ற இளமையான ஜனநாயகக் குடியரசாக இப்போதுதான் அடியெடுத்து வைக்கத் தொடங்கியுள்ளது. மாவோயிஸ்டுகள் தலைமையில் நடைபோடத் தொடங்கிய இந்த ஜனநாயகக் குடியரசின் முன்முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு சதிகளில் இறங்கிய இந்திய மேலாதிக்கவாதிகள், இந்திய விசுவாச பொம்மையாட்சியை ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் அண்மையில் நிறுவினர். இதைச் சாதகமாக்கிக் கொண்டு, மதச்சார்பின்மையை அழித்து நேபாளத்தில் மீண்டும் இந்துத்துவ ஆட்சியை நிறுவ, அகண்ட பாரத லட்சியத்தைக் கொண்ட இந்தியாவின் இந்துவெறி பாசிச பயங்கரவாதிகள், தமது நேபாள பங்காளிகளுக்கு ஆதரவும் பயிற்சியும் அளித்து, இரகசிய சதித்திட்டங்களை வகுத்துக் கொடுத்து, அடுத்தடுத்து குண்டுவெடிப்பு பயங்கரங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

குறிப்பாக, இந்துவெறி பயங்கரவாத ஆர்.எஸ்.எஸ்-ம் அதன் முன்னோடியான இந்து மகாசபையும் காலனிய ஆட்சிக் காலத்திலிருந்தே நேபாளத்தில் தமது கிளை அமைப்புகளை நிறுவிச் செயல்பட்டன. நேபாள மன்னராட்சிக் காலத்தில் இந்துவெறி சங்கப் பரிவாரங்கள் தமது வலைப்பின்னலை நோபளம் மட்டுமின்றி பிற நாடுகளிலும் விரிவுபடுத்திக் கொண்டன. சாதுக்கள், சன்னியாசிகள், சங்கராச்சாரிகள் மூலமாகவும் கலாச்சார பரிவர்த்தனை என்ற பெயரில் அரசு முறையாகவும் இந்த வலைப்பின்னல் உறுதிப்படுத்தப்பட்டது. ''ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே கலாச்சாரம் என்ற லட்சியத்துடன் உருவான உலகின் ஒரே இந்து அரசு, நேபாள மன்னராட்சிதான். நேபாள மன்னராட்சியை ஆதரிக்க வேண்டியது உலகெங்குமுள்ள 90 கோடி இந்துக்களின் தலையாயக் கடமையாகும். இந்து தர்மத்தைப் பாதுகாக்கவே பாரத மாதா இந்த நேபாள மன்னரைப் படைத்திருக்கிறார்'' என்று ஜனவரி 23, 2004-இல் காத்மாண்டு நகரில் நடந்த இந்துமதத் தலைவர்கள் மாநாட்டில் இந்துவெறி விசுவ இந்து பரிசத்தின் தலைவரான அசோக் சிங்கால் குறிப்பிட்டார். (இந்தியன் எக்ஸ்பிரஸ், ஜன. 23, 2004)

தமது நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்த நேபாள மன்னராட்சியை ஆதரித்து வந்த இந்தியாவின் இந்துவெறி பாசிஸ்டுகள், மக்கள் போராட்டங்களால் நேபாள மன்னராட்சிக்கு நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம், இந்திய அரசு மற்றும் அரசியல்வாதிகள் மூலம் முட்டுக் கொடுத்து வந்தனர். நேபாள மக்களின் பேரெழுச்சியில் மன்னராட்சி தூக்கியெறியப்பட்டு, மாவோயிஸ்டுகள் தலைமையில் மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசு முகிழத் தொடங்கியதும், இரட்டிப்பு வெறியோடு நேபாள ஜனநாயகக் குடியரசை வீழ்த்தும் சதிவேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேபாளத்தில் இந்துவெறி பயங்கரவாத நேபாள பாதுகாப்புப் படை கடந்த பிப்ரவரி 16, 2007-இல் குண்டுவெடிப்புத் தாக்குதலை நடத்துவதற்கு இரு வாரங்களுக்கு முன்னதாக, இந்திய எல்லையிலுள்ள ரக்சால் என்ற ஊரிலுள்ள காளி மடத்தின் தலைமைப் பூசாரியான சன்ஜயா என்பவன், நேபாளத்தின் பிர்குன்ஜ் நகருக்கு வந்து இந்துவெறி பயங்கரவாதக் கும்பலுடன் சதியாலோசனை நடத்தியதோடு, இந்திய ஆதரவு பெற்ற மாதேசி இயக்கத்தின் மூலம் சீர்குலைவுகளைச் செய்ய உறுதியளித்தான்.

நாக்பூர் சித்பவன பார்ப்பன ஆர்.எஸ்.எஸ். பிரதிநிதிகள் கரம்பூரில், நேபாள மன்னராட்சியை மீண்டும் நிறுவத் துடிக்கும் நேபாள அரசியல் கட்சிகளின் பிரதிநிதியான உபேந்திர யாதவ் மற்றும் பிற மன்னராட்சி ஆதரவு கும்பலுடன் இரகசியக் கூட்டம் நடத்தினர். முன்னாள் பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினரான மகந்த் அவைத்தியநாத் இதில் முக்கிய பங்காற்றினார். (டெலிகிராப், ஜன.29, 2008).

கரக்பூரின் பா.ஜ.க. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்துவெறியூட்டும் பேச்சாளருமான யோகி ஆதித்யநாத், பல்ராம்பூரில் விசுவஇந்து மகா சங்கம் என்ற அமைப்பின் பெயரில் ஒரு கருத்தரங்கத்தை நடத்தினார். இவர் மலேகான் குண்டுவெடிப்பில் தொடர்புடைய குற்றவாளி. நேபாளத்தில் மாவோயிஸ்டுகள் தலைமையில் மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசு நிறுவப்பட்டதை எதிர்த்தும், நேபாளத்தில் மீண்டும் மன்னராட்சியை நிறுவ அனைத்துலக ஆதரவைத் தேடவும், எதிர்த் தாக்குதல் நடத்தத் திட்டமிடவும் இக் கருத்தரங்கம் கூட்டப்பட்டது. விசுவ இந்து மகாசங்கத்தின் அனைத்துலகத் தலைவரும், வீழ்த்தப்பட்ட மன்னர் ஞானேந்திராவின் தூதுவருமான பாரத் கேஷர்சிங் மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 75 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இந்து ராஷ்டிரத்தைக் காக்க இந்துக்கள் ஆயுதம் ஏந்த வேண்டும்; நேபாள மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசை வீழ்த்த வேண்டும் என்று இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



நேபாளம், மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டதை வரவேற்றுப் புரட்சிகர-ஜனநாயக சக்திகள் காத்மாண்டு நகரில் நடத்திய ஊர்வலம் (கோப்பு படம்).

இவை ஒருபுறமிருக்க, மலேகான் குண்டுவெடிப்பு வழக்கை விசாரணை செய்து வரும் மகாராஷ்டிர மாநில பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை போலீசுப் படைக் குழு, அண்மையில் இந்து வெறியர்களின் அனைத்துலக வலைப்பின்னல் பற்றிய சில உண்மைகளை வெளிக் கொணர்ந்துள்ளது. குண்டு வைப்புகளில் ஈடுபட்ட முக்கிய குற்றவாளிகளான தயானந்த பாண்டே மற்றும் சிறீகாந்த், புரோகித் ஆகிய இந்துவெறி பயங்கரவாதிகளின் கணினியில் உள்ள மின்னஞ்சல்களையும் பிற தகவல்களையும் இதற்கு ஆதாரமாகக் காட்டியுள்ளது. நேபாளத்தின் இந்துவெறி பயங்கரவாதிகளுடன் இந்தியாவின் இந்து வெறி சங்கப் பரிவாரங்கள் கொண்டிருந்த நெருக்கமான உறவு, நேபாளத்தையும் யூத இனவெறி பயங்கரவாத இஸ்ரேலையும் தளமாகப் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவில் இந்து ராஷ்டிரத்தை நிறுவ தயாரிக்கப்பட்ட சதித்திட்டங்கள், நேபாளத்தில் மீண்டும் மன்னராட்சியை நிறுவ மேற்கொள்ள வேண்டிய பயங்கரவாத நடவடிக்கைகள் ஆகியன இதில் அம்பலமாகியுள்ளன. முஸ்லீம்களுக்கு எதிராக இந்துக்களும் இஸ்ரேலின் யூதர்களும் புனிதக் கூட்டு சேரவேண்டிய அவசியம் பற்றிய கட்டுரைகளும் அக்கணினியில் கிடைத்துள்ளன.

சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க அரசு நான்கு யூத இனவெறி இணைய தளங்களை தீவிரவாதப் பட்டியலில் சேர்த்தது. இவற்றில் ஒரு இணைய தளம் (www.kahane.org) இந்தியாவின் இந்துவெறி பஜ்ரங்கதள், விசுவ இந்து பரிசத் ஆகியவற்றின் பிரச்சார இணையதளத்துடன் (www.hinduunity.org) நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது. இவ்விரு இணைய தளங்களையும் ஒன்றின் ஊடாக மற்றதைத் தொடர்பு கொள்ள முடிவதோடு, இரண்டுமே ஒரே பதிவு முகவரியைக் (IP address) கொண்டிருந்தன. (தற்போது இணையத்தில் இந்தத் தளங்கள் இயங்கவில்லை).

இவைதவிர, அமெரிக்காவில் ''இந்திய வளர்ச்சி மற்றும் நிவாரண நிதியம்'' (IDRF) என்ற அறக்கட்டளை நிறுவனத்தை உருவாக்கியுள்ள இந்துவெறியர்கள், அமெரிக்காவில் குடியேறியுள்ள இந்துக்களிடம் கட்டாயத் தீர்வையாக நிதி வசூலித்து, அவற்றை இந்தியாவில் இந்துவெறி பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். அமெரிக்க மட்டுமின்றி, பிற மேலை நாடுகளிலும் இந்த அறக்கட்டளை மூலம் கோடி கோடியாய் இந்துவெறியர்களுக்கு நிதி அனுப்பப்படுகிறது என்றும், மதவெறி பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு வெள்ளமெனப் பாயும் இத்தகைய நிதியை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் லண்டனிலிருந்து வெளிவரும் ஃபினான்சியல் டைம்ஸ் நாளேடு செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ளது (பிப்.24, 2003)

இவையனைத்தும் இந்துவெறி பாசிச பயங்கரவாதிகள் அனைத்துலக வலைப்பின்னலுடன் நன்கு திட்டமிட்டுச் செயல்பட்டு வருவதை நிரூபித்துக் காட்டுகின்றன. இந்த உண்மைகள் அடுத்தடுத்து அம்பலமான பின்னரும் 'மதச்சார்பின்மை' பேசும் காங்கிரசு கூட்டணி அரசு இப்பயங்கரவாதக் கும்பல் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை. இந்திய மேலாதிக்க ஆட்சியாளர்களின் நோக்கமே, நேபாளத்தில் தமது விசுவாச பொம்மையாட்சியை நிறுவுவதாக உள்ள நிலையில், அதற்கு இப்பயங்கரவாதக் கும்பல் வேறொரு வழியில் சேவை செய்து வரும் நிலையில், அதன் மீது இந்திய ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவும் அடிப்படையில்லை.

நேபாளத்தில் நடந்துள்ள குண்டுவெடிப்பு பயங்கரங்கள் ஏதோவொரு இந்துவெறி கும்பலின் கண்மூடித்தனமான தனிப்பட்ட நடவடிக்கையாகக் குறுக்கிச் சுருக்கிவிட முடியாது. அது, அனைத்துலக வலைப்பின்னலைக் கொண்ட இந்துவெறி பயங்கரவாதத் தாக்குதலின் ஓர் அங்கம். குஜராத் வழியில் நேபாளத்தை மாற்றுவதற்கான இந்துவெறி பாசிச பயங்கரத்தின் வெள்ளோட்டம்!

மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசாக நடைபோடத் தொடங்கிய நேபாளம், இந்திய மேலாதிக்கவாதிகளின் சதிகளாலும், இந்துவெறி பயங்கரவாதிகளின் சீர்குலைவுகளாலும் இன்று முடமாகி நிற்கிறது. நேபாளத்தின் மதச்சார்பற்ற - ஜனநாயக சக்திகளுடன் இணைந்து இந்தியாவிலுள்ள உழைக்கும் மக்கள் இந்துவெறி பயங்கரவாதக் கும்பலை அம்பலப்படுத்தி முறியடிப்பதன் மூலமே, இந்திய மேலாதிக்கத்தைத் தகர்த்து, நேபாள மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசை மீண்டெழச் செய்ய முடியும்.

● குமார்

# தமிழக அரசின் மருத்துவக் காப்பீடு திட்டம்:

# மு.க.வின் கருணையா? நரித்தனமா?

**அரசின் மருத்துவ சேவையை, அமெரிக்க பாணியில் தனியார்மயமாக்கும் சதிதான் இக்காப்பீடு திட்டம்.**

ஐந்தாம் முறையாக ஆட்சிக் கட்டிலில் ஏறியுள்ள கருணாநிதியின் 'பொற்கால' ஆட்சியின் சாதனையாக ''உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்'' எனும் புதியதொரு திட்டத்தை தற்போது தமிழக அர நடைமுறைப் படுத்தி வருகிறது. ''நுரையீரல் புற்றுநோயாளிக்கு மதுரை தனியார் மருத்துவமனையில் இலவச சிகிச்சை'' என்றும் ''சென்னை தனியார் மருத்துவமனையில் 15 வயது சிறுமிக்கு மூளைக்கட்டி இலவசமாக அகற்றப்பட்டது'' என்றும் தினசரிகளில் செய்திகள் வந்து குவிகின்றன.

தமிழக அரசின் 26 நல வாரியங்களின் உறுப்பினர்களும் அவர்களின் குடும்பத்தினரும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம் என்றும், இதன் மூலம் ஆண்டு வருமானம் ரூ.72 ஆயிரத்துக்குக் குறைவாக உள்ள மக்களில் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைவார்கள் என்றும் இத்திட்டம் கூறுகிறது. ஒவ்வொரு பயனாளிக்கும் ஸ்மார்ட் கார்டு (கிரெடிட் கார்டைப் போன்ற) ஒன்று வழங்கப்படுமாம். மாநிலமெங்கும் அரசு ஊழியர்கள் முகாம்களை நடத்தியும், வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்பு நடத்தியும், நல வாரியங்கள் எவற்றிலும் உறுப்பினராக இல்லாத பயனாளிகளை அடையாளம் கண்டு இத்திட்டத்தில் சேர்ப்பார்களாம்.

''ஸ்டார் ஹெல்த் அன்ட் அலைடு இன்சூரன் '' என்ற பன்னாட்டு காப்பீடு நிறுவனத்திடம் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் பட்டியலிட்டிருக்கும் தனியார் மருத்துவமனைகளில் அரசு ஊழியர்களுக்கு 4 ஆண்டு காலத்திற்கு இரண்டு லட்சம் ரூபாய் வரைக்கும் சிகிச்சை தரப்பட உள்ளது. இதற்காக ஒவ்வொரு அரசு ஊழியரிடமும் மாதாமாதம் ரூ.50-ஐ வசூலித்து காப்பீட்டு நிறுவனத்துக்கு இத்தொகையை அரசு வழங்கும். இதன் மூலம் காப்பீட்டு நிறுவனத்துக்கும், தனியார் மருத்துவமனைகளுக்கும் நிரந்தர வருவாயை அரசு உறுதிப்படுத்தியுள்ளது. சிகிச்சை பெற வரும் மக்களிடம் ஒட்டக் கறந்துவிடும் தனியார் மருத்துவமனைகள் திடீரெனக் கருணை பொங்க 'இலவசமாக' சிகிச்சை செய்வதன் பின்னணி இதுதான்.

இத்திட்டத்தின்படி ஏழைக் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் அரசே ஆண்டொன்றுக்கு ரூ.500 வீதம் காப்பீடு தொகையாக ஸ்டார் காப்பீட்டு நிறுவனத்துக்குச் செலுத்தி வரும். சென்ற ஜூலை மாதம் சென்னையில் நடந்த இதற்கான தொடக்கவிழாவில் இவ்வாண்டின் முதல் காலாண்டு பிரீமியமாக ரூ.130 கோடியை ஸ்டார் ஹெல்த் நிறுவன அதிகாரிகளிடம் கருணாநிதி வழங்கினார்.

உலகின் தலைசிறந்த மருத்துவ நிபுணர்கள், தமிழ்நாட்டு அரசு மருத்துவக் கல்லூரிகளில் உருவாக்கப்படுகிறார்கள். தலைசிறந்த மருத்துவர்களாக இருக்கும் அரசு மருத்துவர்களைக் கொண்டு மக்களுக்குத் தரமான சிகிச்சை அளிக்காமல் தனியார் மருத்துவமனைகளிடம் அதனை ஒப்படைத்தது ஏன் என்ற கேள்விக்கு, ''முதலமைச்சரின் மருத்துவ நிதி உதவி பெற விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஏழைகளுக்கும் தரமான சிகிச்சை கிடைக்கவேண்டும். எனவேதான் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது'' என்று அரசு காரணம் சொல்கிறது.

ஆண்டுதோறும் இத்திட்டத்திற்கு அரசு வழங்கப்போகும் தவணைத் தொகை மட்டும் ரூ.517 கோடிகளாகும். அதே நேரத்தில், மதுரை அரசு மருத்துவமனையை அனைத்திந்திய மருத்துவ விஞ்ஞான கழகம் (எய்ம்ஸ்) தரத்திற்கு உயர்த்தப் போவதாக அறிவித்து அரசு ஒதுக்கியுள்ள தொகையோ ரூ. 150 கோடிகள்தான். இதன்படி பார்த்தால், காப்பீடுக்குத் தனியாரிடம் ஒவ்வோராண்டும் போய்ச்சேரும் பணத்தைக் கொண்டு மூன்றுக்கும் மேற்பட்ட நவீன உயர்தர மருத்துவமனைகளைக் கட்டி விட முடியும்.

''உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்ட''த் தொடக்க விழாவில் தமிழக முதல்வர் மு.கருணாநிதி மற்றும் மைய அரசின் காதாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் (இடமிருந்து மூன்றாவது).




அரசு மருத்துவர்களோ, ''சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் இருக்கும் 30 அறுவைசிகிச்சை மையங்களில் 25 மையங்கள் தினமும் காலை 8 முதல் மதியம் 2 வரை மட்டுமே இயங்குகின்றன. 24 மணி நேரமும் இயங்குபவையோ அவற்றில் வெறும் ஐந்துதான். இவற்றை முறைப்படுத்தி 24 மணி நேரமும் இயங்குபவையாக மாற்ற எந்த நடவடிக்கையும் இல்லை'' என்று புலம்புகின்றனர். ஏற்கெனவே இருக்கும் அரசு மருத்துவமனைகளின் உள்கட்டமைப்பையும் நிர்வாகத்தையும் சீரமைத்தாலே தரமான சிகிச்சையினை அரசே

தரமுடியும் என்றும் மருத்துவர்கள் சொல்கின்றனர்.

ஆனால் இதனைச் செய்யாத அரசோ, கருணாநிதியின் திட்டத்தில் இடம்பெற்றுள்ள இதயநோய்க்கான பலூன் வால்வு சீரமைப்பிலும் இதய வால்வு சீரமைப்பிலும் நிபுணத்துவம் மிக்க சென்னை ரயில்வே மருத்துவமனையை தனியாருக்குத் தாரைவார்த்துத் தரும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. அதில் முதல்கட்டமாக, ரயில்வே மருத்துவமனையையும் தனியாரையும் சேர்த்து மருத்துவக்கல்லூரி தொடங்க முடிவு செய்துள்ளது.

மருத்துவ சேவையை தனியார்மயப்படுத்தினால் ஏற்படும் பேரவலத்துக்கு அமெரிக்கா சரியான முன்னுதாரணமாகும். அங்கு மருத்துவம் முழுக்க தனியார் காப்பீடு நிறுவனங்களின் பிடிக்குள் இருப்பதால், காப்பீடுத் தவணை செலுத்த முடியாத ஏழைகளுக்கு மருத்துவ சேவையே முற்றிலும் மறுக்கப்படுகின்றது. காப்பீடு நிறுவனங்களின் கொள்ளையால் அங்கு 5 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் மருத்துவ சிகிச்சை பெறமுடியாமல் அவதிப்படுகின்றனர்.



அர மருத்துவமனையொன்றின் அவலம்: மக்களின் வரிப்பணத்தில் இருந்து தனியார் காப்பீடு நிறுவனத்திற்குக் கொட்டிக் கொடுக்கும் தமிழக அர, அர மருத்துவமனைகளைச் சீர்படுத்த அக்கறை காட்டுவதில்லை .

இந்தியாவும் அதே பாதையில் உலகவங்கியின் வழிகாட்டுதலின் கீழ் ''அனைவருக்கும் ஆரோக்கியம்'' எனும் சுகாதாரக் கொள்கையை 2002-ஆம் ஆண்டு அறிவித்து, அதன்படி மருத்துவ நலத்திட்டங்களில் அரசின் பங்களிப்பைக் கொஞ்சம் கொஞ்சமாக குறைத்து வருகிறது. தனியாரின் காப்பீடுத் திட்டத்திற்குள் பொது மருத்துவத்தைத் தள்ளிவிட உத்தரவு போட்டிருப்பது, உலகவங்கி. அதற்கு தனது பெயரைச் சூட்டியிருப்பது தான், கருணாநிதியின் மூளை.

தொடக்கவிழாவில் பேசிய கருணாநிதி, கோபாலபுரத்தில் இருக்கும் அவரின் வீடு, அவரின் மரணத்திற்குப் பின்னர் இலவச மருத்துவமனையாக மாற்றப்படும் என்று அறிவித்துள்ளார். மருத்துவத்தைத் தனியாரிடம் ஒப்படைக்கும் திட்டங்கள் எதிர்ப்பே இன்றி நடைமுறைப்படுத்தப்படுமானால், அவருக்குப் பின், சென்னையில் கருணாநிதி வீடு ஒன்றில் மட்டும்தான் இலவச மருத்துவம் கிடைக்கும்.

இப்போதைக்கு கருணாநிதியின் காப்பீடுத் திட்டம், ஏழைகளிடமிருந்து கட்டணம் ஏதும் வசூலிப்பதில்லை. ஆனால் அரசின் நேரடி மருத்துவ சேவைகள் படிப்படியாக ஒழிக்கப்பட்ட பின்னர், அனைத்துத் தரப்பினரையும் தனது வியாபார வலைக்குள் காப்பீடு நிறுவனம் வீழ்த்தத் தொடங்கும். அதன் பிறகு மருத்துவக் காப்பீடு வைத்துள்ளவர்கள் மட்டுமே நோய்க்குச் சிகிச்சை பெற முடியும் ஆபத்தான நிலை உருவாகும்.

சேமநல அரசினை இலாபகரமாக இயங்கும் அரசாக மாற்றுதல் எனும் போக்கைத் தாராளமயமும் தனியார்மயமும் துரிதமாகச் செயல்படுத்தி வருகின்றன. இந்த அயோக்கியத்தனம் மக்களிடம் அப்பட்டமாகத் தெரிந்துவிடாதிருக்க அதற்குச் சில பூச்சுவேலைகளும் கவர்ச்சியான பெயர்களும் தேவைப்படுகின்றன. ஓட்டுப்பொறுக்கும் அரசியலுக்கு இந்தக் கவர்ச்சியும் தேவையாக இருக்கின்றது. இப்போதைய எதிர்க்கட்சி அடுத்த முறை ஆளும்கட்சியாகும்போது, இதே திட்டத்தை மாற்றமின்றி செயல்படுத்தும் என்பதால் எந்த எதிர்க்கட்சியுமே இத்திட்டத்தை தீவிரமாக எதிர்ப்பதில்லை.

இத்திட்டத்திற்கு தமிழக அரசு தேர்ந்தெடுத்துள்ள ''ஸ்டார் ஹெல்த்'' நிறுவனம்தான் ''ஆரோக்கியஸ்ரீ '' எனும் பெயரில் ஆந்திர அரசோடு கைகோர்த்துக் கொண்டு, வாரங்கல் மாவட்டத்தில் சில பினாமி மருத்துவமனைகளை உருவாக்கி, அறுவை சிகிச்சையே தேவைப்படாத பெண்களுக்கும்கூடக் கருப்பைகளை அகற்றிப் பல கோடிகளைச் சுருட்டியிருக்கின்றது.

கருணாநிதியின் மருத்துவ காப்பீடு திட்டத்தில் பயனாளிகளுக்கு 4 ஆண்டுகளுக்கு அதிகபட்சமாக ஒரு லட்சம் வரை மட்டுமே செலவிடப்படும். ஆனால், இன்றைக்கு இதய அறுவை சிகிச்சை மட்டும் ஒன்றரை இலட்சத்தில் இருந்து இரண்டு இலட்சம் வரை செலவு பிடிக்கக் கூடியதாக உள்ளது. இத்திட்டம் பட்டியலிட்டிருக்கும் 150 தனியார் மருத்துவமனைகளில் சென்னையில் மட்டும் 63 உள்ளன. காய்ச்சல், இருமல் என்று போனாலே எக்ஸ்-ரே, எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுக்க வைத்து குறைந்தது ரூ 5 ஆயிரத்தைக் கறந்து விடக்கூடிய லைஃப் லைன் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையும், அப்பல்லோவை விட அதிகமாகப் பணம் பறிக்கும் பில்ரோத் மருத்துவமனையும் கொலைகார - கொள்ளைக்கார மருத்துவமனைகளாகப் புகழ் பெற்றுள்ள ஓசூரின் அகர்வால், அசோகா, விஜய் முதலானவையும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

ஓய்வுபெற்ற அரசு ஊழியர் ஒருவரின் புற்றுநோய் சிகிச்சைக்கென அடையாறு புற்றுநோய் மருத்துவமனை அண்மையில் ரூ.2 லட்சத்து இருபதாயிரத்தைக் கோரியிருந்தது. ஆனால் காப்பீடுத் திட்டம் அவருக்கு அனுமதித்ததோ ஒரு லட்சத்து இருபதாயிரம்தான். அவர் முழுப் பணத்தையும் மருத்துவமனையில் முதலிலேயே கட்டிவிடுமாறும், இத்தொகையை அவருக்கு ஆறு தவணைகளில் பிரித்துத் தருவதாகவும் காப்பீடு நிறுவனம் கூறியது. இதற்கு எதிராக வழக்குத் தொடுக்கப் போவதாக அவர் எச்சரித்த பிறகுதான், அந்நிறுவனம் இறங்கி வந்து காப்பீடு தொகையை ஒரே தவணையில் தரச் சம்மதித்திருக்கிறது. விவரம் தெரிந்தவர்களையே மொட்டையடிக்கப் பார்க்கும் காப்பீடு திட்டம், சாமானியர்களை என்ன பாடுபடுத்துமோ! ஆரம்பமே இப்படி அமர்க்களமாக இருப்பதிலிருந்தே, இத்திட்டம் மக்களைக் காக்குமா, அல்லது காப்பீடு நிறுவனங்களைக் காக்குமா என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

• அழகு

## பாபர் மசூதி இடிப்பு வழக்குகள்:

# சட்டப்படி நடக்கும் கண்ணாமூச்சி ஆட்டம்!

**பாபர் மசூதி இடிப்பு வழக்குகள், பதினாறு ஆண்டுகளாக விசாரணை நிலையிலேயே முடங்கிக் கிடக்கின்றன.**

இந்து மதவெறிக் கும்பலால் பாபர் மசூதி இடித்துத் தள்ளப்பட்ட கிரிமினல் நடவடிக்கையை ஆராய லிபரான் கமிசன் டிசம்பர் 10, 1992 அன்று - பாபர் மசூதி இடித்துத் தள்ளப்பட்ட நான்காவது நாளில் - மைய அரசால் நியமிக்கப் பட்டது. மூன்று மாதங்களுக்குள் அறிக்கையைத் தர வேண்டும் என்ற நிபந்தனையோடு நியமிக்கப்பட்ட இக்கமிசன், 16 ஆண் டுகள் 6 மாதங்கள் கழித்து, கடந்த ஜூன் 30, 2009 அன்றுதான் தனது அறிக்கையை மைய அரசிடம் தந்துள்ளது.

இக்கமிசனின் விசாரணைக்கு டெல்லி உயர்நீதி மன்றம் விதித்திருந்த தடை, பாபர் மசூதி இடிப்பில் நேரடியாகத் தொடர் புள்ள கல்யாண் சிங் போன்ற 'சாட்சிகள்' கமிசனின் முன் விசா ரணைக்கு ஆஜராகாமல் இழுத்தடித்தது போன்றவைதான் இத் தாமதத்திற்கான காரணங்களாகக் கூறப்பட்டாலும், ''மசூதியை இடித்துத் தள்ளிய சதிகாரர்கள் யார்?'' என்பது உலகுக்கே தெரிந்த இந்த வழக்கு தொடர்பான விசாரணையை நடத்தி முடித்து அறிக்கை கொடுக்க, நீதிபதி லிபரானுக்கு 16 ஆண்டு கள் 'தேவைப்பட்டிருப்பதை' எந்தவிதத்திலும் நியாயப்படுத்தி விட முடியாது.

பாபர் மசூதியை இடித்துத் தள்ள வேண்டும் என்ற நோக் கத்தோடு நடத்தப்பட்ட அத்வானியின் ரத யாத்திரை; மசூதி இடிக்கப்படுவதற்கு முதல் நாள் பஜ்ரங் தள் தலைவர் வினய் கத்தியாரின் வீட்டில் நடந்த சதி ஆலோசனை; அதில் கலந்து கொண்ட அத்வானி உள்ளிட்ட தலைவர்களின் பங்கு; மசூதி இடிக்கப்படுவதற்கு முதல் நாள் அயோத்திக்கு வந்து உரை யாற்றி விட்டு, அன்றிரவு ராமஜென்ம பூமி நியாஸின் தலை வர் பரமஹம்ஸர் வீட்டில் நடந்த 'கலந்துரையாடலில்' கலந்து கொண்டுவிட்டுச் சென்ற வாஜ்பாயின் பங்கு; பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பான புகைப்படங்கள் மற்றும் வீடியோ படங்கள்; அக்கிரிமனல் நடவடிக்கையைத் தடுக்காமல், அதனை ரசித்துப் பார்த்துப் பெருமிதம் கொண்ட அத்வானி, உமாபாரதி, முரளி மனோகர் ஜோஷி மற்றும் பல குட்டித் தலை வர்களின் இந்து மதவெறி வக்கிரம்; சிவசேனா தலைவர் பால் தாக்கரே மற்றும் பா.ஜ.க.வைச் சேர்ந்த கல்யாண் சிங், உமா பாரதி ஆகியோர் மசூதி இடிக்கப்பட்டதை நியாயப்படுத்தி வெளியிட்ட அறிக்கைகள் மற்றும் நேர்காணல்கள் - இத்துணை அசைக்க முடியாத ஆதாரங்கள் இருக்கும்பொழுது, மசூதியை இடித்துத் தள்ளிய இந்து மதவெறிப் பாசிசக் கும்பலும், அவர் களுக்குத் துணையாக நின்றவர்களும் இந்நேரம் தண்டிக்கப் பட்டிருக்க வேண்டும்.

ஆனால், லிபரானோ மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாக, 16 ஆண்டுகள் கழித்துதான் 27 தொகுதிகள் கொண்ட அறிக்கையைக் கொடுத்திருக்கிறார். மைய அரசோ அந்த அறிக் கையை வெளியிட 'நல்ல நாள்'பார்த்துக் கொண்டிருக்கிறது. கள்வனிடமே பெட்டிச் சாவியைக் கொடுத்தது போல, பாபர் மசூதி இடிக்கப்பட்டதை வேடிக்கை பார்த்து நின்ற கயவாளி காங்கிர கும்பலிடம் லிபரான் அறிக்கை போய்ச் சேர்ந்திருக் கிறது. இதைவிட இந்து மதவெறிக் கும்பலுக்கு வேறு பாதுகாப்பு தேவையில்லை. பாபர் மசூதி இடிப்பு தொடர்பாக மையப் புலனாய்வுத் துறை நடத்தி வரும் வழக்கும் 16 ஆண்டு களாக விசாரணை-வாய்தா-மேல்முறையீடு என்ற இழுத்தடிப் புகளைத் தாண்ட முடியாமல் முடங்கிப் போய்க்கிடக்கிறது.

லிபரான் கமிசனில் அர தரப்பு வழக்குரைஞராகப் பணி யாற்றி வந்த பஞ்சாப்-ஹரியானா உயர்நீதி மன்றத்தைச் சேர்ந்த மூத்த வழக்குரைஞர் அனுபம் குப்தா, ''நீதிபதி லிபரான் விசா ரணையின் பொழுது அத்வானிக்கு அதிகபட்ச சலுகைகள் காட்டியதாக''க் குற்றம் மத்தி வருவதோடு, மசூதி இடிப்பில் அத்வானியின் பங்கு குறித்து நீதிபதி லிபரானுக்கும் தனக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடே கமிசனில் இருந்து தான் விலகு வதற்குக் காரணமாக அமைந்ததாகக் கூறி வருகிறார்.

அனுபம் குப்தா அத்வானியைக் குறுக்கு விசாரணை செய்த பொழுது, ''நாடு தந்திரமடைந்த பின் குஜராத்திலுள்ள சோம நாதர் ஆலயத்தைப் புதுப்பிக்கும் பிரச்சினையை ஜவஹர்லால் நேரு எப்படிக் கையாண்டார்'' என்பது தொடர்பாக அத்வானி யிடம் கேள்வி எழுப்பியதாகவும், இந்தக் கேள்வியினால் அத் வானியைவிட லிபரான்தான் அதிகப் பதற்றமடைந்ததாகவும், அதனால் அத்வானியிடம் தன்னை மன்னிப்புக் கேட்கக் கோரி லிபரான் நிர்ப்பந்தித்தாகவும் அனுபம் குப்தா கூறி வருகிறார்.

இதே போன்று, மசூதி இடிப்பு தொடர்பான உளவுத் துறை அறிக்கையொன்றைச் ட்டிக் காட்டி அத்வானியை, தான் குறுக்கு விசாரணை செய்தபொழுது, அத்வானி ஆத்திரமடைந் ததாகவும், அதனால், அந்தக் கேள்விக்கு லிபரான் தடை விதித் துவிட்டதாகவும் அனுபம் குப்தா கூறுகிறார். ''அத்வானி, ஜோஷி ஆகியோரின் கண் முன்னே மசூதி இடிப்பு நடந்த போதும், அவர்கள் அதற்குப் பொறுப்பல்ல; நிலைமை அவர் களின் கையை மீறிப் போய் விட்டது'' என்பதுதான் பா.ஜ.க.வின் நிலைப்பாடு. இதே நிலைப்பாட்டைத்தான் லிபரான் கொண்டி

முஸ்லீம் ஐக்கிய முன்னணியினர் லிபரான் கமிசன் அறிக்கையை வெளியிடக் கோரி பீகார் தலைநகர் பாட்னாவில் நடத்திய ஆர்ப்பாட்டம்.



ருப்பதாக அனுபம் குப்தா குற்றம் சாட்டி வருகிறார்.



நீதிபதி லிபரான், விசாரணையின் பொழுது அத்வானிக்குச் சலுகைக் காட்டியதாகக் குற்றஞ் மத்தி வரும் மூத்த வழக்குரைஞர் அனுபம் குப்தா.

லிபரான் கமிசன் மீதான இக் குற்றச்சாட்டுக்கள் கி கி செய்தி களைப் போல அல்லாமல், ''அவுட் லுக்'' என்ற ஆங்கில வார இதழில் அனுபம் குப்தாவின் நேர் காணலாகவே வெளிவந்திருக் கிறது. இதனால், நீதிபதி லிபரான் 'நடுநிலையாக' விசாரணையை நடத்தி அறிக்கை கொடுத்திருப் பாரா என்ற சந்தேகம் தவிர்க்க முடியாமல் எழுந்துள்ளது. இந்த சந்தேகத்தை ஒதுக்கி வைத்து விட்டு, நீதிபதி லிபரான் நேர்மை யாகவே விசாரணையை நடத்தியி ருப்பார் என்று எடுத்துக் கொண்டாலும், அதனால் என்ன விளைவு ஏற்பட்டுவிடும்?

பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து நடந்த மும்பய்க் கலவ ரத்தை விசாரித்து அறிக்கை அளித்த சிறீகிருஷ்ணா கமிசன், 1982-இல் நடந்த மண்டைக்காடு இந்து மதவெறிக் கலவரத்தை விசாரித்து அறிக்கை அளித்த வேணுகோபால் கமிசன், 1969 -இல் குஜராத்-அகமதாபாத்தில் இந்து மதவெறியர்கள் நடத் திய கலவரத்தை விசாரித்து அறிக்கை அளித்த ஜக்மோகன் ரெட்டி கமிசன் ஆகியவற்றுக்கு என்ன கதி நேர்ந்ததோ, அதே நிலை லிபரான் கமிசன் அறிக்கைக்கும் ஏற்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது?

லிபரான் கமிசன் அளித்துள்ள அறிக்கை ஒருபுறமிருக் கட்டும். பாபர் மசூதி இடிப்பு தொடர்பாக மையப் புலனாய்வுத் துறை நடத்தி வரும் இரு வழக்குகளில், ஒன்றில் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமா பாரதி, வினய் கத்தியார், அசோக் சிங்கால், கிரிராஜ் கிஷோர், வீ.எச்.டால்மியா, சந்நி யாசினி ரிதம்பரா ஆகிய எட்டு பேர் மீது சதிக் குற்றச்சாட்டு மத்தப்பட்டிருந்தது. இக்குற்றச்சாட்டுக்குப் பூர்வாங்க ஆதாரம் இருப்பதைக் கூடுதல் குற்றவியல் நீதிபதி ஜகதீஷ் பிரசாத் சிறீவத்ஸவா உறுதி செய்துள்ளார்.

எனினும், காலப்போக்கில் இந்து மதவெறிக் கும்பல் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டும், சட்டத்திலுள்ள ஓட்டைகளையும், தலித் 'சகோதரி' மாயாவதியின் நட்பையும் பயன்படுத்திக் கொண்டும் அந்த எட்டு பேர் மீதான சதிக் குற்றச் சாட்டை உடைத்தெறிந்துவிட்டது. அவர்கள் மீது இக்குற்றச் சாட்டை மீண்டும் மத்தி வழக்கு நடத்துவதற்கு சட்டப்படியே வாய்ப்புகள் இருந்தும்கூட, அதை காங்கிர உள்ளிட்டு எந்த வொரு மதச்சார்பற்ற கட்சியும் கண்டு கொள்ளவில்லை. தற்பொழுது அவர்கள் மீது மதக் கலவரத்தைத் தூண்டிவிடும் படி நடந்து கொண்டார்கள் என்ற உப்புச்சப்பில்லாத குற்றச் சாட்டுதான் மத்தப்பட்டுள்ளது.

இதுவொருபுறமிருக்க, பாபர் மசூதி-ராமஜென்ம பூமி வழக்கு தொடர்பான 23 கோப்புகளைக் காணவில்லை என உ.பி. மாநில அர அறிவித்திருக்கிறது. இது தொடர்பாக விசா ரணை நடத்தி ஆகஸ்டு மாத இறுதிக்குள் அறிக்கை தரும்படி மையப் புலனாய்வுத் துறைக்கு உத்திரவிட்டுள்ளது, அலகாபாத் உயர்நீதி மன்றம். இந்தக் கோப்புகள் எப்பொழுது, எப்படி காணாமல் போயின என்பதுகூட 'மர்மமாக'த் தான் உள்ளது.

உ.பி.மாநில அரசின் மதக் கலவர தடுப்புப் பிரிவைச் சேர்ந்த சிறப்பு அதிகாரி பாஷ் பஹ்ன் சாத், அலுவல் வேலை தொடர்பாக தில்லிக்குச் சென்று கொண்டிருந்தபொழுது, தில்லியில் உள்ள திலகர் பாலம் தொடர்வண்டி நிலையத்தில் மர்மமான முறையில் இறந்து போனார். பாஷ் சாத் இறந்துபோய் ஒன்பது ஆண்டுகள் ஓடிவிட்டன. எனினும், அவர் ரயி லில் இருந்து தள்ளிவிடப்பட்டுக் கொல்லப்பட்டாரா அல்லது தடு மாறி விழுந்து இறந்து போனாரா என்பதும் மர்மமாகவே உள்ளது. லிபரான் கமிசன் விசாரணை தொடர்பான விவகாரங்களைக் கவ னிக்கும் பொறுப்பு பாஷ் சாத்தி டம்தான் இருந்துள்ளது என்பதும், அவர் 'இறந்து' போன சமயத்தில் மைய அரசில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடைபெற்று வந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது காணாமல் போன கோப்புகளை லிபரான் கமிசனிடம் கொடுப்பதற்காக பாஷ் எடுத்துச் சென்றதாகக் கூறு கிறது, உ.பி. மாநில அர . இது உண்மையென்றால், அந்தக் கோப்புகள் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே 'தொலைந்து' போய்விட்டன என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், உ.பி. மாநில அரசோ, லிபரான் கமிசன் தனது அறிக் கையை அளித்த பிறகுதான் கோப்புகள் தொலைந்துபோன விவகாரத்தை வெளியே சொல்லுகிறது. இதனை இவ்வளவு கால தாமதமாக சொல்ல வேண்டிய பின்னணி என்ன என்ப தும் மர்மமாக உள்ளது.

லிபரான் கமிசனோ தொலைந்து போய்விட்டதாகக் கூறப் படும் அந்தக் கோப்புகளை அந்தச் சமயத்தில் பாஷ் சாத்தை எடுத்துவரச் சொல்லி எந்த உத்தரவும் அளிக்கவில்லை எனக் கூறுகிறது. பாஷ் சாத் ஓடும் ரயிலில் இருந்து 'விழுந்த' இடத் தைப் புலனாய்வு செய்த டெல்லி போலீசாரோ, ''அந்த இடத் தில் சில வெற்றுத் தாள்களையும், அடையாள அட்டைகளை யும் தவிர வேறெதுவும் இல்லை'' எனக் கூறிவிட்டனர். பாஷ் சாத்தின் தந்தை பிர் பஹ்ன் சாத், தனது மகன் டெல்லிக்குக் கிளம்பிச் சென்றபொழுது தன்னுடன் இத்துணை கோப்புகளை எடுத்துச் சென்றதாகத் தெரியவில்லை எனக் கூறுகிறார். பாபர் மசூதி வளாகத்தினுள் ராமபிரான் ஜெனிக்கவில்லை என்பதை நிரூபிப்பதற்கு அகழ்வராய்ச்சி நடத்தியதைப் போல, இந்தக் 'காணாமல்' போன கோப்புகளைக் கண்டுபிடிக்கவும் அகழ் வராய்ச்சி நடத்த வேண்டியிருக்குமோ?

பாபர் மசூதி பிரச்சினையில் மு லீம்களுக்கு நீதி கிடைத்து விடக் கூடாது என்பதில் இந்து மதவெறி பாசிசக் கும்பல் குறி யாக இருந்து வருவதைப் பாமரர்கள்கூடப் புரிந்து கொள்ள முடியும். அதே சமயம், தங்களை மதச்சார்பற்றவர்களாகக் கூறிக் கொள்ளும் ஓட்டுக்கட்சிகள் மட்டுமின்றி, சி.பி.ஐ., போலீ, நீதித்துறை ஆகிய அர உறுப்புகளும்கூட இந்த வழக்கை இத்தனை ஆண்டுகளாக இழுத்தடிக்க வேண்டிய பின்னணி என்ன என்ற கேள்வியை எழுப்பும்பொழுதுதான், மதச்சார்பற்ற இந்திய அரசின் யோக்கியதையைப் புரிந்து கொள்ள முடியும். மதச்சார்பற்ற ஓட்டுக்கட்சிகளின் இரட்டை வேடத்திற்கு எதிராக மட்டுமல்ல; இந்திய அரசின் போலி மதச் சார்பின்மைக்கு எதிராகவும் மக்களைத் திரட்டி போராடினால் மட்டுமே பாபர் மசூதியை இடித்துத் தள்ளிய இந்து மதவெறி பாசிசக் கும்பலைத் தண்டிக்க முடியும்.

● செல்வம்

## விடுதலைச் சிறுத்தைகள்:

# பிழைப்புவாத-பொறுக்கி அரசியலில் புதிய வரவு

**தமிழ், தமிழன், ஈழம் போன்ற வாய்ச்சவடால்கள் மூலம், தனது பிழைப்புவாத சரணாகதியை மூடி மறைக்க முயலுகிறார், திருமாவளவன்.**

கருணாநிதியெல்லாம் ஒரு தேர்ந்த பிழைப்புவாதியாக மாறுவதற்கு ஒரு ஐம்பதாண்டுகள் ஆனதென்றால், திருமாவளவனுக்கோ இந்தப் ''பரிணாமம்'' எல்லாம் ஒரு ஐந்தாறு ஆண்டுகளுக்குள் முடிந்துவிட்டது.

திருமாவின் பிறந்தநாளான ஆகஸ்டு 17, சமீபகாலமாக பாசிச ஜெயாவின் கட்-அவுட் களேபரங்களுக்குப் போட்டியாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சென்னை முழுவதும் பிளெக்ஸ் பேனர்கள் மயம். 1990-களில் பிளக்ஸ் தொழில் நுட்பம் வளராததால் ஜெயாவின் கட்-அவுட்டுகள் இருந்தன. திருமாவின் காலத்தில் புற்றீசல் போல பிளெக்ஸ் அச்சகங்கள் தோன்றிவிட்ட நிலையில், சிறுத்தைகள் திருமாவின் பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்காக எல்லா அச்சகங்களையும் குத்தகைக்கு எடுத்து விட்டார்களா என எண்ணுமளவுக்கு, பிளெக்ஸ் போர்டுகளின் எண்ணிக்கை சென்னைவாசிகளை மலைக்க வைத்தது.

கள். ஈழம் எரிந்து கொண்டிருந்தபோது, அதை அரசியல் ஆதாயத்திற்குப் பயன்படுத்திய கருணாநிதி அரசு, இப்போது ஈழப் போராட்டம் புதையுண்ட நேரத்தில், தனது தேர்தல் வெற்றியை அது பாதிக்கவில்லை என்பதைப் பார்த்துவிட்டவருக்கு, சிறுத்தைகளின் பேனரில் தடை செய்யப்பட்ட இயக்கங்கள், பிரபாகரன் படம் இடம் பெற்றிருப்பதாக தினமலர் நாளேடு போட்டுக் கொடுத்தது.

உடனே முத்தமிழ் முதல்வரின் காவலரணி சிறுத்தைகளின் பேனர்களை நோக்கிப் பாய்ந்தது. போலீசுக்கு தொல்லை கொடுக்க விரும்பாத சிறுத்தைகளும் எல்லா பேனர்களிலும் 'எழும் ஈழத்தை' அழித்து உதவி செய்தனர். கடைசில் 'எழும் ஈழத்'திற்கு இடையில் இருந்த 'தமிழ்' மட்டும் பரிதாபமாக காட்சியளித்தது. கடந்த ஆறு மாதங்களாக ஈழத்திற்காக அமர்க்களப்படுத்திய சிறுத்தைகளின் 'வீரம்' இறுதியில் தாரை வைத்து, ஈழம் என்ற பெயரையே அழிக்கும் வண்ணம் அஞ்சி நடுங்கிப் போனது.

சென்னையில் திரும்பிய பக்கமெல்லாம், திருமாவை 'மாசறு பொன்னே போற்றி, கடாரம் வென்ற மன்னா' என்றபடி எல்லா உயர் தமிழ் சொற்களாலும் போற்றும் துதிபாடும் பிளெக்ஸ் போர்டுகள் மொய்த்தன. சேகுவேரா, பிரபாகரன் உள்ளிட்டு இன்னும் பல வரலாற்று மாந்தர்களின் கெட்டப்பில் தோன்றும் திருமாவின் அவதாரங்களோடு, அண்ணனின் அல்லக்கைகளின் படங்களும் எல்லா பேணர்களிலும் தவறாமல் இடம் பெற்றிருந்தன. முக்கியமாக அல்லக்கைகள் எல்லோரும் தங்கள் பெயருக்கு கீழே ஏதோ ஒரு பதவியையும் குறிப்பிட்டிருந்தனர். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் இப்போது எல்லோருக்கும் உறுப்பினர் தகுதி மட்டும் கிடையாது; ஏதாவது ஒரு பதவியும் போனசாக உண்டு.

அண்ணனின் ஒவ்வொரு பிறந்தநாளையும் ஏதாவது ஒரு கொள்கை முழக்கத்தை வைத்து நடத்துவதை சிறுத்தைகள் வழக்கமாக வைத்திருக்கிறார்கள். இம்முறை ஈழம் சீசனாக இருப்பதால், ''எழும் தமிழ் ஈழம்'' என பேனர்களின் ஓரத்தில் குறிப்பிட்டிருந்தார்

திருமாவளவனின் பிறந்தநாளையொட்டி முதலாளித்துவப் பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்பட்ட ஆடம்பர விளம்பரங்களுள் ஒன்று.




ஆனாலும் பிறந்த நாள் கூட்டத்தில் முழங்கிய திருமா, இனி புலிகளின் கோரிக்கைகாக ஆயுதம் தாங்காத வழியில் சிறுத்தைகள் போராடுவார்கள் என வாக்குறுதி அளித்தார். அதே சமயம், தி.மு.க அரசுக்கு எவ்வித நெருக்கடியும் கொடுக்க மாட்டோம் எனவும் முன்னெச்சரிக்கையாக, ''கண்டிஷன்ஸ் அப்ளை''யும் போட்டார். ஒரு எம்.பி. சீட்டு நன்றிக்காக தமிழ்நாட்டு மேடையில் இப்படி பேசியவர், சமீபத்தில் ஜெர்மனியில் புலி ஆதரவாளர்கள் நடத்திய மாநாட்டில் பிரபாகரன் தலைமையில் விரைவில் ஐந்தாவது ஈழப்போர் துவங்கும் என அறிவித்தார். புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களிடையே திருமாவளவனுக்கு ஒரு இமேஜ் இருப்பதால், அதைத் தக்கவைப்பதற்கு அங்கே அப்படி; பிழைப்பை ஓட்ட இங்கே இப்படி...

திருமாவின் ஓட்டுக்கட்சி பிழைப்புவாதம் இப்போது தமிழக மக்களுக்கு புதிரான ஒன்றல்ல. எனினும், அயல்வாழ் தமிழ் மக்கள், அதுவும் ஈழம் தொடர்பாக மட்டும் அவரைத் தெரிந்து வைத்

திருக்கும் மக்களுக்கு, அவரது சரணாகதிப் படலம் தெரியாது.

'90-கள் முழுவதும் ''அடங்க மறு, அத்துமீறு, திருப்பி அடி'' என்று ஆதிக்க சாதிவெறிக்கு எதிராக விடுதலைச் சிறுத்தைகள் இயங்கிய போது தேர்தலைப் புறக்கணித்தார்கள். ஆனால், இந்த முழக்கங்கள், அதாவது அவர்கள் விரும்பிய தீண்டாமை ஒழிப்பு ஆகியவை - சாதி ஒழிப்பிற்கான திட்டமோ, நடைமுறையோ, அதற்கேற்ற அமைப்பு - அணிகள் பலமோ இல்லாததால் வெற்றுச் சவடாலாகிப் போயின. திருமாவளவன் ஒரு பிரிவு தலித் மக்களிடம் பிரபலமான தலைவரானார். அவர் பேசிய கூட்டங்களுக்கு கணிசமாக மக்கள் வந்தார்கள்.

இப்படி திசைவழியறியாத கூட்டத்தை வைத்துப் பல பிரச்சினைகளை சந்தித்து, கருணாநிதி அரசால் ஏவிவிடப்பட்ட அடக்குமுறைகளை எதிர்கொள்ள அமைப்பின் - அணிகளின் பலமுமின்றி, இறுதியில் இதையே காரணமாகக் கூறி தேர்தல் அரசியலில் நுழைந்தார். அத்துடன் அவரது தலித் அரசியல் முடிவுக்கு வந்து, பிழைப்புவாத அரசியல் அத்தியாயம் ஆரம்பித்தது.



**திருமாவளவனின் பிறந்தநாளையொட்டி சென்னையில் நடைபெற்ற மாநாட்டில் அவருக்கு ரூபாய் நோட்டுக்களால் ஆன கிரீடம் மற்றும் மாலையை அணிவித்து, காலணியும் அணிவிக்கும் ஒரு தொண்டர்: தலைமையைக் குளிப்பாட்டுவதுதான் தலித் விடுதலை அரசியலா?**

'98 தேர்தலில் அய்யா மூப்பனாரோடு கூட்டணிக் கட்டிக் கொண்டு சிதம்பரம் தொகுதியில் நின்றார். இதற்கு நன்றிக் கடன் செலுத்தும் விதத்தில் தஞ்சை மாவட்டத்தில் கூலி விவசாயிகளையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் ஒடுக்கி வரும் குடும்பத்தைச் சேர்ந்த மூப்பனாரை புரட்சித் தலைவர் என்றார். அதன்பின் போயஸ் தோட்டம், கோபாலபுரம் என மாறி மாறி தாழ்த்தப்பட்ட மக்களின் சுயமரியாதையை அடகு வைத்து, ஓரிரண்டு தொகுதிகளை வென்றார். இக்காலத்திற்குச் சற்று முன்னர்தான் கொடியங்குளம் ஆதிக்கசாதி கலவரம், மாஞ்சோலைப் படுகொலை எல்லாம் இரு கழக அர களால் நடத்தப்பட்டிருந்தன.

அப்புறம் பாப்பாப்பட்டி, மேலவளவு, திண்ணியம் முதலான வன்கொடுமைகள் நடந்த போது, சிறுத்தைகள் அதை வைத்துத் தமது செல்வாக்கை வளர்த்துக் கொள்ளத்தான் முனைந்தனர். மேலவளவு முருகேசன் கொலை வழக்குகூடத் தன்னார்வ வழக்கறிஞர்களால் நடத்தப்பட்டு, தண்டனை வாங்கித் தரப்பட்டது. இதற்குள் அண்ணன் எல்லா ஆதிக்க சாதி பிரமுகர்களுடனும் ஐக்கியமாகிவிட்டார். சேதுராமனுடன் கை தூக்கி போஸ் கொடுத்ததென்ன, ராமதாசுடன் சேர்ந்து தமிழ் இயக்கம் கண்டதென்ன, பசும்பொன் முத்துராமலிங்க தேவருக்கு விடுமுறை கோரியதென்ன என்று பலவற்றைப் பட்டியிடலாம்.

முத்தாய்ப்பாக, விருத்தாசலம் பகுதியில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த முருகேசனும், வன்னியர் சாதியைச் சேர்ந்த கண்ணகியும் காதல் திருமணம் செய்ததற்காக கட்டி வைத்து நஞ் சூற்றிக் கொல்லப்பட்ட வழக்கில் கூட, வன்னிய சாதி வெறியர்களைத் தண்டிக்கக்கோரிப் போராடுவதற்குப் பதிலாக, அவர்களுடன் பஞ்சாயத்து செய்து சுமுகமாகப் போகுமாறு முருகேசனின் சொந்தங்களுக்கு சிறுத்தைகள் நெருக்குதல் கொடுத்தனர். இந்த விவரங்களெல்லாம் புதிய ஜனநாயகம் இதழில் விரிவாகவே பதிவாகியிருக்கின்றன. இப்போது அடுத்த கட்டமாக, சிறுத்தைகள் எந்தப் பாதையில் செல்கின்றனர் என்பதற்காகவே இந்தக் கட்டுரை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சிறுத்தைகளுக்கு ஒதுக்கப்பட்ட விழுப்புரம் தொகுதியில் முதலில் அறிவிக்கப்பட்ட மடிப்பாக்கம் வேலாயுதம் என்ற வேட்பாளரைக் கண்டு பலரும் அதிர்ந்து போனார்கள். காரணம், அந்தப் பிரமுகர் ஒரு ரியல் எஸ்டேட் மாஃபியா; சி.பி.ஐ வழக்குகளைச் சந்தித்து வருபவர். அவ்விவகாரம் சந்தி சிரித்ததும், ஏதோ ஒரு முன்னாள் நீதிபதியை கொண்டுவந்து நிறுத்தினர். அவருக்கும் கட்சிக்கும் அதற்கு முன்னர் கொள்வினையோ, கொடுப்பினையோ கிடையாது.

இதற்குமுன் சிறுத்தைகள் கட்சியிலிருந்து வெளியேறிய செல்வப்பெருந்தகை உலகறிந்த கட்டப் பஞ்சாயத்து ரவுடி. அதிலேயே பல கோடிகளைச் சேர்த்தவர். கூடுதலாக, ஜெயாவின் வளர்ப்பு மகனது கருப்புப் பணத்தையும் சில பெண் தொடர்புகள் மூலமாக இவர் லவட்டிக் கொண்டார் என்றும் கூறப்படுவதுண்டு. செல்வப்பெருந்தகை இப்போது பகுஜன் சமாஜ் கட்சிக்குப் போனாலும் எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்யவில்லை. சிறுத்தைகளும் இதை பெரியபிரச்சினையாக்கவில்லை. ஆக்கினால், சொந்த வண்டவாளங்கள் அம்பலாமாகும் என்ற பயம்தான் போலும்.

செல்வப்பெருந்தகை காலத்தில்தான், சிறுத்தைகளின் கட்சி தற்போதைய திருத்தமான வடிவைப் பெற்றது. இதன்படி, உள்ளூர் அளவில் உள்ள பிழைப்புவாத தலித் பிரமுகர்கள், கட்டப் பஞ்சாயத்து செய்பவர்கள், ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்யும் மாஃபியாக்கள், ஒரு கூட்டத்தை வைத்துக் கொண்டு அந்தந்தப் பகுதி வர்த்தகர்களிடம் மாமூல் வசூலிப்பவர்கள், கட்சியின் பொதுக்கூட்டச் செலவுகளுக்கு அப்பகுதியிலிருக்கும் பெரும் முதலாளிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடம் வசூலித்தல், சுயநிதிக் கல்லூரிகளின் முதலாளிகள் சிறுத்தைகளுக்கென்று ஒதுக்கும் சீட்டுகளை பல இலட்சங்களில் விற்பனை செய்தல், சினிமா கட்டப் பஞ்சாயத்து செய்தல் - இப்படி பல்தொழில் வல்லுநர்கள்தான் இப்போது சிறுத்தைகளின் வெளிமுகங்கள்.

இந்த ரவுடிகளை வைத்துப் பிழைக்கும் பிரமுகர்களைச் சுற்றி பெருங்கூட்டமாய் இருக்கும் தொண்டர்கள் எலும்புகளைக் கவ்வியவாறு சுற்றி வருகின்றனர். இப்படி வசூலிப்பதற்கென்றே ஒரு கட்சியும், கூட்டமும் உருவாகிவிட்டது. பல இடங்களில் வர்த்தகர்களும், முதலாளிகளும் எதற்கு வம்பு என்று பணம் தருவதோடு, சிலர் கட்சியிலும் சேர்ந்து வருகின்றனர். தற்போது திருச்செந்தூரில் உள்ள செந்திலாண்டவன் கோவிலில் பூசை செய்யும் பார்ப்பனர்களும் சேர்ந்திருக்கிறார்கள். பலருக்கு இது அதியமாகப்படலாம். உண்மை என்னவென்றால், எல்லா பிரபலமான கோவில்களிலும் உள்ள பூசாரிகள் பக்காவான லும்பன்களாக இருப்பார்கள். கை நிறைய காசு, அதை அனுபவிப்பதற்கு வசதிகள் - இப்படி உழைக்காமலேயே தொந்தி வளர்க்கும் கூட்டம், தனது பாதுகாப்பிற்காக சிறுத்தைகளிடம் சேர்ந்ததில் வியப்பில்லை. மேலும், பார்ப்பனர்கள் - தலித் கூட்டணி என்ற மாயாவதிக் கட்சியின் தமிழக கிளைக்கு போட்டியாகக்கூட இதைக் கருதலாம்.

**லும்பன்களும், நடுத்தர வர்க்கமும் இணைந்த கலவையாக காட்சியளிக்கும் சிறுத்தைகளின் அரசியல் முகத்தை அடிக்கடி புதுப்பிப்பதற்குத்தான் ஈழம் பயன்பட்டிருக்கிறது.**

ஆக, வசூலிப்பதற்கு இவ்வளவு பெரிய இயந்திரத்தை உருவாக்கிவிட்டபடியால், இந்தக் கட்டமைப்பைத் தக்க வைப்பது எப்படி? அதற்குத்தான் மூன்று மாதங்களுக்கொரு முறை ஏதாவது ஒரு பிரச்சினையைச் சாக்காக வைத்து மாநாடு என்று பிளெக்ஸ் பேனர்களில் அமர்க்களம் செய்கிறார்கள். இதைப் பார்க்கும் மக்களெல்லாம் சிறுத்தைகள் பெரும் வளர்ச்சி பெற்றதாக நம்ப, முதலாளிகள் இனிமேல் அரசியல் கட்சிகளுக்குக் காசு கொடுக்கும் பட்டியலில் சிறுத்தைகளையும் சேர்க்க, மாற்றுக் கட்சிகளுக்கோ சிறுத்தைகளின் 'பலத்தை' அறிந்து அவர்களுக்கு சீட்டுக்கள் அதிகம் கொடுக்க வேண்டுமோ என யோசிக்க - இப்படி பல விதங்களில் திருமாவின் 'கொள்கை' மாநாடுகள் பயன்படுகின்றன.

இப்படிப்பட்ட கூட்டத்தை வைத்துத்தான் திருமாவளவன் கட்சி நடத்துகிறார். அவரது கட்சித் தலைமையகம் கூட அவரது தாயாரின் பெயரில் பதிவாகி, தற்போது அது ஒரு ஆக்கிரமிப்பு என வழக்கே நடந்து வருகிறது. வழக்கிற்கு வராத சுருட்டல்கள் எவ்வளவென்று தெரியவில்லை. ஏற்கெனவே உலகமயத்தால் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக வேலைகள் குறைந்துவரும் நேரத்தில், சேரியில் இருக்கும் உதிரியான இளைஞர்களுக்கு இப்படி ஒரு வாழ்வு சிறுத்தைக் கட்சியில் சேர்ந்தால் கிடைக்கிறது. ஓரிரு ஆண்டுகளிலேயே அடுக்குமாடி, ஸ்கார்பியோ கார், பரிவாரங்கள் என இதில் பலர் முன்னுதாரணங்களாக இருக்கிறார்கள்.

விடுதலைச் சிறுத்தைகளின் எம்.எல்.ஏ. ரவிக்குமார் நடுத்தர வர்க்க தலித் மக்களின் கோரிக்கைகளைச் சட்டசபையில் பேசுவார். வெள்ளை அறிக்கை, பணியிடங்களைப் பூர்த்தி செய்தல், ஆதி திராவிடருக்குக் கூடுதல் நிதி ஒதுக்குதல், அரசுப்பணி மாற்றம் - இப்படியான அரசு கட்டப் பஞ்சாயத்துகளை அவர் செய்கிறார். இதனால் கணிசமான அரசு, நடுத்தர வர்க்க தலித் மக்கள் தமது சுயநலத்திற்காகச் சிறுத்தைகளை ஆதரிக்கின்றனர்.

இப்படி லும்பன்களும், நடுத்தர வர்க்கமும் இணைந்த கலவையாக காட்சியளிக்கும் சிறுத்தைகளின் அரசியல் முகத்தை அடிக்கடி புதுப்பிப்பதற்குத்தான் ஈழம் பயன்பட்டிருக்கிறது. இந்த அரசியல் பெயிண்ட் அடிக்கும் வேலைக்கு திருமாவளவன் தலைமை தாங்குகிறார். அடிக்கடி அறிக்கை விடுவார். மாநாடு நடத்துவார். பேட்டிகள் கொடுப்பார். மற்றபடி, முன்பெல்லாம் சிறுத்தை அணிகள் தலித் அரசியல், தலித் தலைமை, தலித் புரட்சி என்றெல்லாம் ஆவேசமாக பேசுவார்கள். இப்போது எவ்வளவு திட்டினாலும் அவர்கள் அசைந்து கொடுப்பதில்லை என அக்கட்சித் தோழர்களே வருத்தப்படுகின்றனர்.

**திருச்செந்தூர் முருகன் கோவிலில் அர்ச்சகர்களாக இருக்கும் பிராமண இளைஞர்கள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் தமிழினியன் முன்னிலையில், அக்கட்சியில் இணைந்த கண்கொள்ளாக் காட்சி.**



இருப்பினும், விடுதலைச் சிறுத்தைகள் இந்தத் தொழிலை ஒரு அளவுக்குத்தான் செய்ய முடியும். அ.தி.மு.க; தி.மு.க. அளவுக்கெல்லாம் பிரம்மாண்டமாகச் செய்ய முடியாது. கருணாநிதி கூட சிறுத்தைகளை ஓரளவுக்கு அனுமதித்து விட்டு, தேவையான நேரத்தில் ஆப்படிப்பார். இதை திருமாவும் உணர்ந்துள்ளதால், இப்போதைக்கு இந்த விளையாட்டு விதிமுறைக்குட்பட்டு ஆடப்பட்டு வருகிறது. பிளெக்ஸ் பேனரில் எவ்வளவு ஆவேசமாக மீசையை திருமா முறுக்குகிறாரோ, அந்த அளவுக்கு அரசியல் பிழைப்புவாதம் மறைந்திருக்கிறது என்று பொருள்.

ஐரோப்பாவிலும், கனடாவிலும் இருக்கும் அப்பாவி ஈழத்தமிழன் மட்டும் திருமாவை ஈழத்திற்கான ஒரு நம்பிக்கை நட்சத்திரம் என்று நம்பிக்கொண்டிருப்பார். என்ன இருந்தாலும் தமிழகத்திற்கும் அமெரிக்காவிற்கும் தூரம் அதிகம்தானே?

● **சாத்தன்**

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் சஞ்சித்தின் பெற்றோர்களோ, நோய் வாய்ப்பட்ட தமது உறவினருக்கு மருந்து வாங்குவதற்காக அவர் கடைவீதிக்குச் சென்றதாகவும் அவரிடம் எவ்வித ஆயுதமும் இல்லை என்றும் கூறுகின்றனர்.

சட்டமன்றத்துக்கு மிக அருகிலுள்ள கடைவீதியில் இம்மோதல் படுகொலை நடந்த போது, பல பத்திரிகையாளர்களும் புகைப்படம் எடுத்துள்ளனர். ஆனால் எந்த பத்திரிகையும் இப்போலீசு பயங்கரத்தை வெளியிடவில்லை. இம்மோதல் படுகொலையைப் படம் பிடித்த ஒரு புகைப்படக்காரர், மணிப்பூரில் நடக்கும் இராணுவ பயங்கரவாத ஆட்சியில் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று அஞ்சி, இதை வெளியிடத் துணியவில்லை. எனினும், தெகல்கா வார இதழின் செய்தியாளரான தெரசா ரஹ்மானுக்கு அவர் இதுபற்றி தகவல் தெரிவிக்க, அதைத் தொடர்ந்து தெகல்கா செய்தியாளரின் முன்முயற்சியால் இப்படங்கள் ஆகஸ்ட் 8 தேதியிட்ட இதழில் வெளிவந்து நாடெங்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது.


போலி மோதல் படுகொலைக்கு எதிராக: ஊரடங்கு உத்தரவையும் மீறி மணிப்பூர் பெண்கள் நடத்தும் ஆவேசமான சாலைமறியல் ஆர்ப்பாட்டம்.

மணிப்பூர் மாநிலத்தில் கடந்த மே 23 முதல் ஜூலை 23 வரையிலான 60 நாட்களில் இது போல 37 மோதல் படுகொலைகள் நடந்துள்ளன. ஆனால், எந்தப் படுகொலையையும் இதுபோன்ற புகைப்பட ஆதாரத்துடன் நிரூபிக்க முடியவில்லை. கையும் களவுமாக புகைப்பட ஆதாரத்துடன் சிக்கிய இம்மோதல் படுகொலை பயங்கரத்தைத் தொடர்ந்து, மணிப்பூர் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்கினர். போலீசு-இராணுவ பயங்கரவாதத்துக்கு எதிராகவும், இக்கும்பலுக்கு எல்லையற்ற அதிகாரமளிக்கும் ஆயுதப்படைகள் சிறப்புச் சட்டத்தை நீக்கக் கோரியும் மாநிலமெங்கும் சாலைமறியல் போராட்டங்கள் தொடர்ந்தன. வேறுவழியின்றி அம்மாநில முதல்வர் நீதிவிசாரணைக்கு உத்தரவிட்டு, 6 போலீசு கமாண்டோ படை சிப்பாய்களையும் ஒரு போலீசு ஆய்வாளரையும் தற்காலிகப் பணிநீக்கம் செய்துள்ளார்.


பயங்கரவாதத்துக்கு எதிராக: மணிப்பூர் முதல்வர், போலீசு தலைமை இயக்குனரின் உருவ பொம்மைகளை எரித்து மணிப்பூர் மக்கள் நடத்தும் போராட்டம்.

இவற்றால் மணிப்பூரில் தொடரும் போலீசு - இராணுவ பயங்கரவாதம் முடிவுக்கு வந்து விடுமா? ''மணிப்பூரில் மனித உயிர் மலிவாகிப் போய்விட்டது. உயிர் என்பது இங்கே லாட்டரி சூதாட்டம் போன்றது. அதிர்ஷ்டம் இருந்தால் நீங்கள் உயிர் பிழைக்கலாம்; இல்லையேல் தீவிரவாதி என்ற முத்திரை குத்தப்பட்டு 'மோதலில்' கொல்லப்படலாம்'' என்று வேதனையுடன் குறிப்பிடுகிறார்கள், மணிப்பூர் மக்கள்.

'மோதல்' படுகொலை மட்டுமா? மணிப்பூரில் இந்திய இராணுவத்தின் காமவெறி பயங்கரவாதத்துக்குப் பலியானோர் ஏராளம். கடந்த 2004-ஆம் ஆண்டில் மனோரமா என்ற இளம் பெண் இராணுவத்தின் கும்பல் பாலியல் வன்முறைக்குப் பின், தீவிரவாதி என்ற முத்திரை குத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த அக்கிரமத்துக்கு எதிராக மணிப்பூர் தாய்மார்கள், இம்பாலிலுள்ள ராணுவத் தலைமையகம் முன்னே, ''இந்திய இராணுவமே, எங்களைக் கற்பழி!'' எனும் முழக்கப் பதாகை ஏந்தி நிர்வாணமாக நின்று போராட்டம் நடத்தி, இந்திய இராணுவத்தின் காமவெறி பயங்கரவாதத்தை உலகெங்கும் அம்பலப்படுத்தினர். மணிப்பூரில் தொடரும் இராணுவ பயங்கரவாத ஆட்சிக்கெதிராக, ஐரோம் சர்மிளா என்ற இளம்பெண் பல ஆண்டுகளாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகிறார். அந்த வீராங்கனையைக் கைது செய்து மருத்துவமனையில் சேர்த்து வாய் வழியாக உணவைச் செலுத்தியபோதிலும், அவர் உறுதியாக மறுக்கவே, தொடர்ந்து அவருக்கு மூக்கு வழியாக கட்டாயமாக திரவ உணவைச் செலுத்தி போராட்டத் தீயை பஞ்சால் அணைக்க முயலுகிறது இந்திய அரசு.

இத்தனைக்கும் பிறகும் முந்தைய பா.ஜ.க. கூட்டணி அரசோ, தற்போதைய காங்கிரசு கூட்டணி அரசோ மணிப்பூரில் நடக்கும் இராணுவ பயங்கரவாத ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரவில்லை. ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கவில்லை. குற்றவாளிகளைத் தண்டிக்கவில்லை. தேசிய ஒருமைப்பாடு, தீவிரவாத-பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் அனைத்து ஓட்டுக் கட்சிகளின் ஆதரவுடன் மணிப்பூரில் இராணுவ பயங்கரவாதம் கேள்விமுறையின்றித் தொடர்கிறது. இந்த அநீதியையும் அக்கிரமத்தையும் நாட்டு மக்கள் இன்னமும் பார்த்துக் கொண்டு, சொரணையின்றி அமைதியாக இருப்பதுதான் மிகக் கேடான அவமானம்!

• பச்சையப்பன்

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# விலையேற்றத்திற்குக் காரணமான பன்னாட்டுக் கொள்ளையைத் தடுத்து நிறுத்தப் போராடுவோம்!

தமிழகமெங்கும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து 7.8.09 அன்று நடத்திய

# ஆர்ப்பாட்டம்

மைய அரசே!

உணவு தானியங்களைப் பதுக்கி வைத்து
இலாப வேட்டையாடும்
ஆன்லைன் வர்த்தகத்தைத் தடைசெய்!

பதுக்கல்காரர்களைக் கைது செய்! சிறையிலடை!
பதுக்கலைப் பறிமுதல் செய்து
மலிவு விலையில் மக்களுக்கு வழங்கு!

உழைக்கும் மக்களே!

உணவு உற்பத்தியில் தற்சார்பை அழிக்கும்
மறுகாலனியாதிக்கத்தை முறியடிப்போம்!



திருச்சியில்...



ஓசூரில்...



புதுச்சேரியில்...


தஞ்சையில்...



பெண்ணாகரத்தில்...